# எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்

(கட்டுவன், வறுத்தலைவிளான், மயிலிட்டி தெற்கு)

வே.விவேகானந்தன்

பாகம் - 01




வெளியீடு
பாலர் ஞானோதய சங்கம்
பிரித்தானியா, சுவிற்சர்லாந்து கிளைகள்
20 - 09 - 2023

# சமர்ப்பணம்



*கட்டுவன் ஊரில் பிறந்து அம்மண்ணிலேயே சிவபதமடைந்த, பெரும் பாக்கியத்தை பெற்ற, எனது அருமைத் தாயார் திருமதி அன்னம்மா வேலாயுதர் அவர்களுக்கும், போர்க் காலத்தில் உயிர் நீத்த, கட்டுவன், மயிலிட்டிதெற்கு, வர்த்தலைவிளான் அனைத்து உறவுகளுக்கும், இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் மன நிறைவு கொள்கிறேன்.*

# ஆசியுரை



போர்க்காலச் சூழலினால் சிதைவுற்று நிற்கும் கட்டுவன், மயிலிட்டிதெற்கு, வர்த்தலைவிளான் கிராமங்களின் முதுகெலும்பாக, காலங்களைக் கடந்து பல தடைகளையும் தாண்டி, வேரூன்றி நூற்றாண்டில் கால்பதித்து விருட்சமாகி நிற்கும், பாலர் ஞானோதய சங்கத்தையிட்டு, பெருமிதம் அடைவதோடு, ஈழத்தமிழர்களின் வரலாறும் கலை, கலாச்சாரப் பண்பாடுகளும் சிதைவடைந்திருக்கும் இக்காலகட்டத்தில், மக்கள் மத்தியில் அதனைச் சீர்தூக்கி, வரலாற்றுப் பூர்வமாக எழுத்துருவில் கொண்டு வருவது மகிழ்வுக்கும், பாராட்டுதற்கும் உரியதாகும்.

அந்தவகையில், பல வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே சுமந்துள்ள, எமது கட்டுவன் மண்ணின் தொலைந்துபோன மண்வாசனையையும், அதனைச் செதுக்கிய மாந்தர்களையும் நினைவு கூர்ந்து இத்தினத்தில், "எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்" என்ற தலைப்பில், எழுத்துருவாக வடிவமைத்ததையிட்டு மனம் மகிழ்வதோடு, இளம் தலைமுறைக்கும், வருங்கால சந்ததியினர்க்கும் ஒரு வரலாற்றுப் பின்னணியை, பதிவாகத் தந்ததையிட்டு திரு. வே.விவேகானந்தன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த முயற்சி மென்மேலும் சிறக்கவும், இன்னும் பல பதிவுகளை எதிர்கால சந்ததிக்கு மிகத் தெளிவாகவும் திருத்தமாகவும் எடுத்துச்செல்ல கட்டுவன் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் தாழ்பணிந்து வாழ்த்துகிறேன். இப்பெருமைமிக்க கட்டுவன் மண்ணின் மைந்தரில் நானும் ஒருவன் என்பதையிட்டுப் புழகாங்கிதம் அடைகிறேன். என்றும் அன்னையின் திருவருளோடு எம் ஆசியும் உரித்தாகட்டும்.

***சிவஸ்ரீ.சிவ.ஆறுமுகக்குருக்கள்.***<br>
ரொரன்ரோ, கனடா.<br>
20-08-2023.

# பாராட்டுரை



கட்டுவன், மயிலிட்டி ஆகிய கிராமங்கள் பண்டைய யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அரசமையமாக இருந்த காலத்திலிருந்தே வந்திருக்கின்றன என நம்ப இடமிருக்கிறது. ஏனெனில் கந்தரோடை அரசர்கள் வெட்டுவித்தது இன்று 'வழுக்கை ஆறு' என அழைக்கப்படும் கடல்கால்வாய் சைவமடம் சந்தியிலிருந்தே ஆரம்பித்தது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில், 1645ம் ஆண்டில் மயிலிட்டி தெற்கிலிருந்து 120 பாடோஸ்களையும் (1 பாடோஸ் = 10 பணம்), கட்டுவனிலிருந்து 65 பாடோஸ்களயும் அந்த ஆண்டின் வரிப்பணமாகப் பெற்றிருக்கிறார்கள். இதன் பிரகாரம் மயிலிட்டி தெற்கு, பெரிய கிராமமாக இருந்திருக்கிறது. பின்னர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கால இறுதிவரை வர்த்தலைவிளான், குரும்பசிட்டி கிராமங்கள் 'மயிலிட்டி தெற்கு' என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கின்றன. காலப்போக்கில் இவை கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய தனிக் கிராமங்களாக உருவாகின.

எனது தாயார் 'கட்டுவனூர்க் கவி' என அழைக்கப்பட்ட, 'வசந்தன் நாடகம்' இயற்றிய வரகவி விசுவநாதரின் வம்சாவழியினர். எனது தந்தையார் மயிலிட்டி தெற்கு துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயத்தைக் கட்டுவித்த வர்த்தகர் வசந்தராயரின் வம்சத்தில் வந்துதித்தவர். அந்த வகையில் எனக்கும் இந்த இரு கிராமங்களுக்கும் உள்ள தொடர்பு அனாதியானது.

ஒரு வரலாற்று நூலை அதற்குரிய ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுவது இலகுவான காரியமல்ல. அதை எழுதுவதற்கு அகன்ற தேடலும், ஆழ்ந்த வரலாற்று ஞானமும் வேண்டும். இந்த நூலின் பொருளடக்கத்தைப் பார்க்கும் போதே நூலாசிரியர் விவேகானந்தனின் தேடலும், ஆற்றலும், புலமையும், எடுத்துக்கொண்ட பொருளின் மீது அவர் கொண்ட ஆர்வமும் புலனாகிறது. அறிமுகம், அமைவிடம், வரலாற்றுப் பின்னணி, கட்டுவன் சந்தி, பாலர் ஞானோதய சங்கம், கல்விப் பாரம்பரியம், சைவசமயப் பாரம்பரியம், கலை கலாச்சாரப் பாரம்பரியம், விளையாட்டு முயற்சிகள், நிலவளமும் நீர்வளமும், போக்கு வரத்துச் சாதனங்களும்

சேவைகளும், மயிலிட்டிக் கிராமசபை, அரச தனியார் சேவைகள், முக்கிராமங்களை வளப்படுத்திய சான்றோர்கள் ஆகிய பதின்நான்கு தலைப்புக்களில் இந்த அரிய ஆவணத்தை அவர் உருவாக்கித் தந்திருக்கிறார்.

மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான் ஆகிய முக்கிராமங்களின் வளர்ச்சியில் முன்னோடியாக - முதுகெலும்பாக - விளங்கிய பாலர் ஞானோதய சங்கம் தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில் இந்த நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானது. நமது கிராமங்களின் வரலாற்றை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கும், நமது வருங்காலச் சந்ததியினருக்கும் இது ஒரு அரிய பொக்கிஷமாக விளங்கும் என்பதில் எதுவிதமான ஐயப்பாடும் இல்லை. இதை ஆக்கித்தந்த நூலாசிரியர் வே. விவேகானந்தன் அவர்களுக்கு நமது நன்றிக்கும், போற்றுதலுக்கும் உரியவராகிறார்.

**சிவ தியாகராஜா**
*B.Sc., MBBS., Ph.D.*
29-08-2023

# நூல் மதிப்புரை



கட்டுவன், மயிலிட்டிதெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய முக்கிராமங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மண் வளத்தாலும், ஆன்மிக உணர்வாலும், கல்விச் செல்வத்தாலும் மிக உயர்ந்த ஒரு பதிகளாகும். கட்டுவனூரில் பிறந்து உயர் கல்வி கற்று, எழுத்துத்துறையில் கால்பதித்து வரும் வே .விவேகானந்தன் அவர்கள் தனது தாயகம் பற்றித் தொகுத்து வெளியிட்ட நூலே இதுவாகும்.

போர்க்காலச் சூழலில் சிதைவுற்று, மீளவும் புத்துயிர் பெற்று வரும் கட்டுவன், மயிலிட்டிதெற்கு வர்த்தலைவிளான் கிராமங்களினது வரலாற்றுச் சான்றுகளையும், செதுக்கிய சிற்பிகளையும் மனமகிழ்வுடன் தேடிப் பெற்று எழுதியுள்ளார். கல்விமான்கள், சைவக் குருமார்கள், சமூகத் தொண்டர்கள், வர்த்தகப் பெருமக்கள் போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளை இவர் வெளிக்கொணர்ந்ததுடன், பதினெட்டு வருடங்கள் தான் வாழ்ந்த மண்ணையும் அழகாக நிறுவியுள்ளார்.

இந்த நூலின் முதல் பதின்மூன்று அத்தியாயங்களில், அறிமுகம், அமைவிடம், வரலாற்றுப் பின்னணி, கட்டுவன் சந்தி. பாலர் ஞானோதய சங்கம், கல்விப் பாரம்பரியம், சைவசமயப் பாரம்பரியம், கலை கலசாரப் பாரம்பரியம், விளையாட்டு முயற்சிகள், நிலவளமும் நீர்வளமும், போக்குவரத்துச் சாதனங்களும் சேவைகளும், மயிலிட்டி கிராம சபை, அரச தனியார் சேவைகள் பற்றியனவாகும். பதினான்காவது அத்தியாயம் முக்கிராமங்களையும் பல்வேறு வழிகளிலும் வளப்படுத்திய இருபத்தியெட்டு சான்றோர்கள் பற்றியதாகும். அவர்கள் ஒவ்வொருவரையும் புகைப்படங்களுடன் பதிவு செய்துள்ளார்.

1860 களில் வாழ்ந்த வினாசித்தம்பி தம்பிப்பிள்ளை, கதிர்காமர் ஆறுப்பிள்ளை, அம்பலம் பொன்னையா, கந்தவனம் பொன்னம்பலம், சின்னக்குட்டி கந்தவனம், போன்றவர்கள் தொடக்கம் வரலாறு ஆரம்பிக்கிறது. தொடர்ந்து பல சிற்பிகளைக் குறிப்பிட்ட ஆசிரியர் தற்பொழுதும் வாழ்ந்து வரும் பேராசிரியர் ச.விநாயகமூர்த்தி, பேராசிரியர் நா.சண்முகலிங்கம் ஆகியோரது பணிகளுடன் நிறைவு செய்கிறார். இக்கிராமங்களின் கல்வி வரலாறு தனித்துவமானது. ஆசிரியர்கள், வைத்தியர்கள்,

சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பேராசிரியர்கள், கிராமியக் கலைஞர்கள், இசைப் பேராசிரியர்கள், எனப் பல்துறை சார்ந்தவர்களாலும் சிறப்புடன் விளங்கின. பிரம்மஸ்ரீ வித்துவசிரோமணி சி .கணேசையரின் காலம் ஒரு பொற்காலமாகும். வரலாற்றுக்கு அப்பாற்பட்ட இக்கிராமங்களின் மையப்பகுதி ஒரு சந்திக் குடியிருப்பாகத் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்ததாகத் தெரிகிறது. இது பற்றிய வரலாற்று ஆய்வு இன்னும் தேவைப்படுகிறது.

இந்நூலில், கட்டுவனூருக்கே தனித்துவமான ஒரு கலை வடிவமாக, வசந்தன் நாடகம் விபரிக்கப்பட்டுள்ளதுடன் இறுதியில் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் கட்டுவனூர்க் கோயில்களில் எழுந்தருளியுள்ள பைரவர், வீரபத்திரர் சுவாமிகள் மீது அவ்வூர் தமிழ் அறிஞர்களால் பாடப்பெற்ற திருவூஞ்சல், போற்றிப்பத்து போன்ற பாடல்களும் இடம்பெற்றிருப்பது சிறப்பாகும்.

**எஸ். பத்மநாதன்.**
முன்னாள் விரிவுரையாளர்,
புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
16-08-2023.

# பதிப்புரை.

*மயிலிட்டிதெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான், ஆகிய முக்கிராமங்களினதும் வளர்ச்சியில் முதுகெலும்பாக விளங்கிய பாலர் ஞானோதய சங்கம் தனது நூற்றாண்டு நிறைவைக் கடந்து அடுத்த ஆண்டில் கால்பதித்துள்ளது.*

*சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தது நம் தமிழினம். அதுபோலவே சங்கம் அமைத்து நம் கிராமத்தை வளர்த்தனர் நம்மூர் முன்னோடிகள். 20ம் நூற்றாண்டின் முதற்காற் பகுதியில், பாலர் ஞானோதய சங்கத்தை உருவாக்கி, அதன் ஊடாக ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சமூக, சமய, பொருளாதார முயற்சிகள், வனப்பும், செழிப்பும், பெயரும், புகழும் மிக்க கிராமங்களாக அவற்றை விளங்கச் செய்தன. மக்கள் செறிவாக வாழ்ந்த அக்கிராமங்கள் கல்வி, கலை, கலாச்சாரம், சமயம், விளையாட்டு, விவசாயம், என அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்துத் தன்னிறைவு கொண்டதாகக் காட்சியளித்தன.*

*இக்கிராமங்கள் பூத்துக்குலுங்க மண்ணுக்கடியில் வேர்போலத் தன்னலம் கருதாது உழைத்தவர்கள் பலர். அவ்வாறு உழைத்த சாதனையாளர்களையும் கட்டுவனூர் மைந்தன் வே. விவேகானந்தன் அவர்கள் "எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்" என்னும் நூல் வடிவில் வெளிக்கொணர முயற்சி செய்துள்ளார். அவரது ஆவணப் பதிவாக்க முயற்சியை, பாலர் ஞானோதய சங்கத்தின் பிரித்தானியக் கிளை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. இத்தகைய முயற்சி, போர்க் காலத்துக்கு முன்னர் இக்கிராமங்கள் எத்தகைய சிறப்புக்களைக் கொண்டதாக இருந்ததன? என்பதனை, எதிர்காலச் சந்ததியினர் அறிவதற்குப் பேருதவியாக அமையலாம். ஆவணப் பதிவாக்கத்தின் முக்கியத்துவம் கருதி எதிர்காலத்தில் யார் அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் எமது ஆதரவு என்றும் உண்டு.*

*இந்தநூலை வெளியிடுவதற்கு நிதிப் பங்களிப்பைப் பாலர் ஞானோதய சங்கம் - பிரித்தானியக் கிளை மற்றும் சுவிஸ் கிளைகள் வழங்குகின்றன. அத்துடன் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த வாணி கணனிப் பதிப்பகம் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

***பாலர் ஞானோதய சங்கம்***
*பிரித்தானியக் கிளை*
*20-08-2023.*

# என்னுரை

எந்தவொரு காரியத்துக்கும் ஒரு காரணம் உண்டு என்பது நியதி அதற்கிணங்க, ஒரு நூல் வெளிவருவதற்கும் ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். பரிசுக்காகவோ, வருமானத்துக்காகவோ, புகழுக்காகவோ ஒரு கொள்கையைப் பரப்புவதற்காகவோ எனப் பலவாறாக இருக்கலாம். ஆனால் இந்த நூல் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய முக்கிராமங்களினதும் அரசியல், சமூக, பொருளாதார, மற்றும் கலை கலாச்சார, சமய உடல்நல, மேம்பாடுகளுக்கு, முதுகெலும்பாக விளங்கிய, பாலர் ஞானோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவின் போது, அதனைக் கொண்டாடும் முகமாக வெளிவருகிறது. இவ்வேளையில் தன்னலம் பாராது மனப்பூர்வமாக உழைத்த கல்விமான்கள் கலைஞர்கள் வர்த்தகப் பெருமக்கள் எனப் பல்துறை சார்ந்தவர்களையும் இன்றும் செயலாற்றி வருபவர்களையும் நினைவு கூர்தல் நம் கடமையாகும்.

இப்பதிவு முக்கிராமங்கள் பற்றியும், அவற்றின் சாதனையாளர்கள் பற்றியும் ஒரு அறிமுகமே தவிர, ஆய்வு நூலோ அல்லது வரலாற்று நூலோ அல்ல. இக்கிராமங்களின் அருமை பெருமைகளையும், கலை, கலாச்சார பண்பாடுகளின் ஆழ அகலங்களையும் பதிவிடுவது என்பது யானையைப் பார்த்த குருடர்களின் கதையாகவே அமையும், என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். இக் கிராமங்கள் ஏறக்குறைய 28 ஆண்டுகளாக (1990-2018) பலாலி இராணுவ முகாமின் உயர்பாதுகாப்பு வலயத்துள் சிக்கி, சிதைந்து, சீரழிந்து 2018 ஆம் ஆண்டு சித்திரை மாத வருடப்பிறப்புடன் அதன் ஒருசில பகுதிகள் விடுபட்டு, மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளன.

இக்கிராமங்கள் உயர்பாதுகாப்பு வலயத்துள் இருந்த, இருண்ட காலப் பகுதியில் கல்விச் சொத்து உட்பட, அனைத்து செல்வங்களும் அழிந்து போயின. குறிப்பாக ஆசிரியர்கள், கல்விமான்கள், சைவக்குருமார்கள் வீட்டு நூலகங்களில் இருந்த நூல்கள், இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயின. மயிலிட்டி கிராம சபை நூலகம், கட்டுவன் வாசிகசாலை போன்ற பொது அமைப்புகளில் இருந்த நூல்களின் இழப்பு, அளப்பரியது. இக்கிராமங்கள் பற்றிய வரலாறு, சமூக, சமய, பொருளாதார வளர்ச்சிகள் குறித்து பல்வேறு தகவல்களைத் தாங்கி வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், மலர்கள், சிறுபிரசுரங்கள் போன்ற வரலாற்று ஆதாரங்கள் பலவற்றை இழந்து, நிர்க்கதியாகியுள்ளோம்.

தற்போது, இலங்கையின் பல பாகங்களிலும் உலகின் பல நாடுகளிலும் வாழும் மக்கள் தம்மிடமுள்ள, அல்லது தமக்கு உறுதியாகத் தெரிந்த தகவல்கள்,

தரவுகள், மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றைத் தொகுத்து, நூல் வடிவிலோ, புகைப்படத் தொகுப்பு வடிவிலோ, வெளியிடுவதன் மூலமே எமது மண்ணின் வரலாற்றை மீட்டெடுக்க முடியும். அத்தகைய முயற்சிகளுக்கு இப்பதிவு ஓர் ஆரம்பமாக இருக்கும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

எனது பூர்வீகம் கட்டுவனூராக இருந்தபோதிலும், நான் அங்கு வாழ்ந்த காலம் ஏறக்குறைய பதினெட்டு ஆண்டுகள் (1966-1984) மட்டுமே. அக்கால கட்டத்தில் நான் நேரடியாகக் கண்டு, கேட்டு அறிந்த விடயங்களையும், மற்றும், நீண்டகாலத் தேடல்கள் மூலம் கிடைத்த தகவல்களையும், முகநூல் பக்கங்கள், இணையத்தளங்கள் ஊடாக நம்பிக்கைக்குரிய தகவல்களையும், கனடிய மண்ணில் வாழும் கட்டுவனூர் மக்கள் வழங்கிய ஆதாரத்துடனான தகவல்கள் அனைத்தையும் தொகுத்து ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளேன். குறிப்பாக போர்க் காலத்துக்கு முன்னைய மண்ணின் அழகை மனக் கண்முன் கொண்டுவர முயற்சி செய்துள்ளேன்.

இந்த நூல் பற்றிய விமர்சனங்களை இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் வாழும் உறவுகளிடமிருந்து எதிர்பார்க்கிறேன். ஊர்கூடித் தேர் இழுப்பது போல குறிச்சிப் பிரிவுகளையும், குடும்பத் தகராறுகளையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு ஊர்கூடி, எமது மண்ணின் வரலாற்றை மீட்டெடுப்பது எம் அனைவரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

இந்த நூற்தொகுப்பு முயற்சியின் போது பலர் தகவல்களைத் தந்து உதவியபோதிலும் சிலர் தயங்கினர், சிலர் மறுத்தனர், சிலர் பாராமுகமாய் விட்டனர், சிலர் காணாமல் போயினர். கட்டுவனூர் மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்த பலரது வாழ்க்கை வரலாறுகளையும், அவர்களது புகைப்படங்களையும், ஏனைய பல தகவல்களையும் பெற முடியவில்லை. எதிர்காலத்தில் மக்களின் முழுமையான ஆதரவும், இறையருளும் கிடைக்குமாயின் மற்றுமொரு ஆவணப் பதிவாக்க முயற்சி நிறைவேறக் கூடும்.

இந்த நூலின் முதலாவது அத்தியாயத்தில் இலங்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு வாசகர்களைக் எம்மண்ணை நோக்கி வழிநடத்திச் செல்ல முயற்சி செய்துள்ளேன். ஏனைய அத்தியாயங்களிலும் தேவைப்படும் இடங்களில் இலங்கை வரலாற்றுச் செய்திகளையும் இணைத்துள்ளேன்.

இந்த நூலை நான் தட்டச்சு செய்தபோது தட்டுத்தடுமாறிய சந்தர்ப்பங்களில் கை கொடுத்துதவிய எனதருமைப் பிள்ளைகள் வித்தியா, வாகீசன் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். வசந்தன் நாடகம், தென்மயிலை ஞானவைரவர் போற்றிப்பத்து போன்ற பின்னிணைப்பில் உள்ள பாடல்களைத் தட்டச்சு செய்யும்

*போது, சொற்களைப் பிரித்து, பொருள் விளங்க, ஒத்தாசை புரிந்தும், ஒப்புநோக்கித் திருத்தம் செய்தும் உதவிய என் ஆருயிர் மனைவி விமலாம்பிகை அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். வரை படங்களை அமைத்த வி.விஜயராஜன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய சி.ஆறுமுகக் குருக்கள் ஐயா அவர்களுக்கும், மதிப்புரை நல்கிய மதிப்புக்குரிய எஸ்.பத்மநாதன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கலாநிதி சிவ.தியாகராஜா அவர்களுக்கும் என் மனம் கனிந்த நன்றிகள் பல. அனைத்துக்கும் அப்பால் சிரமங்களைப் பாராது இந்நூலை வெளியிட்டு வைத்த பாலர் ஞானோதய சங்கம் பிரித்தானியா - சுவிற்சர்லாந்து கிளையினருக்கு எனது மனமார்ந்த நன்றியினை முழுமனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*கட்டுவனூர் ஆவணப் பதிவொன்றை வெளியிட வேண்டும் என்ற எனது நீண்டகாலக் கனவை நனவாக்கத் தகவல்களைத் தந்துதவிய, இலங்கை, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா வாழ் மக்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் பெருமளவிலான தகவல்களைப் பெறப் பேருதவி புரிந்த பிரித்தானிய பாலர் ஞானோதய சங்கக் கிளைக்கும் அதனைச் சார்ந்த திரு முத்துக்குமார் ஜெயசிறி அவர்களுக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*அன்புடன்*
***வே .விவேகானந்தன்.***
10-08-2023.

*முகவரி*

| | |
|---|---|
| *போருக்கு முன்* | *போருக்குப் பின்* |
| *கலாபவனம்"* | *Kalapavanam* |
| *சைவமடம்* | 31 Brantford Drive |
| *கட்டுவன் சந்தி* | Scarborough, On |
| *தெல்லிப்பளை* | M1W 1E2 |
| *இலங்கை* | Canada. |
| e-Mail:vivek_velayuthar@hotmail.com | Phone # 647 763 3020 |

# பொருளடக்கம்


1. அறிமுகம்
2. அமைவிடம்
3. வரலாற்றுப் பின்னணி.
4. கட்டுவன் சந்தி.
5. பாலர் ஞானோதய சங்கம்.
6. கல்விப் பாரம்பரியம்.
7. சைவ சமயப் பாரம்பரியம்.
8. கலை கலாச்சாரப் பாரம்பரியம்.
9. விளையாட்டு முயற்சிகள்.
10. நிலவளமும் நீர்வளமும்.
11. போக்குவரத்து சாதனங்களும் சேவைகளும்.
12. மயிலிட்டி கிராம சபை
13. .அரச தனியார் சேவைகள்
14. கட்டுவனூரை செதுக்கிய சிற்பிகள்

1. அம்பலம் பொன்னையா
2. தம்பிப்பிள்ளை பொன்னம்மா
3. கதிர்காமர் ஆறுப்பிள்ளை
4. சின்னக்குட்டி கந்தவனம்
5. க. பொன்னம்பலம், க. நாகலிங்கம் சகோதரர்கள்
6. வித்துவசிரோமணி சி . கணேசையர்
7. பண்டிதர் இ .நமசிவாய தேசிகர்
8. இ தாமோதரம்பிள்ளை
9. த. சிவக்கொழுந்தர்
10. பண்டிதர் வ .முத்துக்குமாரு
11. சீ.விஜயசுந்தரம்
12. க.சிவபாதசுந்தரக் குருக்கள்
13. அனு .வை நாகராஜன்
14. பேராசிரியர். சு. சுசீந்திரராஜா
15. நல்லதம்பி நாகலிங்கம்
16. வல்லிபுரம் குருசாமி
17. எஸ் .கே பரராஜசிங்கம்
18. த .துரைச்சாமி
19. சி .கனகசபை
20. இளையதம்பி சின்னதுரை (பத்தாயிரம் சின்னத்துரை)
21. கந்தையா சின்னப்பு
22. சின்னையா நாகலிங்கம்

23. சின்னத்தம்பி அருணாசலம்
24. சின்னத்தம்பி இராசரத்தினம்
25. கவிஞர் க. திருமாவளவன்
26. பேராசிரியர் ச விநாயகமூர்த்தி
27. பொன்னையா பாலசிங்கம்
28. பேராசிரியர் நா. சண்முகலிங்கம்

பின்னிணைப்பு :

1. தென்மயிலை ஞானவைரவர் போற்றிப்பத்து.
2. தென்மயிலை ஞானவைரவர் திருவூஞ்சல்.
3. அலவத்தை வீரபத்திரர் திருவூஞ்சல்.
4. யாழ் .கட்டுவன் வளமாரி வைரவ சுவாமி திருவூஞ்சல்
5. கட்டுவன் தண்ணித்தாள் ஞானவைரவர் திருவூஞ்சல்.
6. வசந்தன் நாடகம்.
7. ஒயிலாட்டம்.

# 1

# அறிமுகம்.

இந்து மகா சமுத்திரத்தின் முத்து என எமது தாய்த்திரு நாடான இலங்கை வர்ணிக்கப்படுகின்றது. நீண்ட கால வரலாற்றைக் கொண்ட எமது நாட்டுக்கு, தாமிரபரணி, தப்பிரபேன், செரந்தீப், ஈழம் போன்ற பல பெயர்கள் உண்டு.

இலங்கை நீண்ட காலமாக ராஜரட்டை, மாயாரட்டை, ருகுணரட்டை ஆகிய பிராந்தியங்களாகப் பிரிக்கப்படிருந்தது. அவற்றுள் தெற்கே, கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம் மற்றும் தம்பதெனிய, சீதாவாக்கை போற்ற சிற்றரசுகளும், வடக்கே யாழ்ப்பாண இராச்சியம், வன்னி இராச்சியம் என்பனவும் சுதேச மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. முதன்முதல் அந்நியராகிய போத்துக்கீசர் தமது ஆட்சிக்காலத்தில் (1505-1657) கோட்டை இராச்சியத்தை 1605 ஆம் ஆண்டு கைப்பற்றினர். அடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். படைக்கலங்களுடன் யாழ்ப்பாணம் சென்ற போத்துக்கீசர், அப்போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த சங்கிலி மன்னனை, தமது ஆட்சியின் கீழ் நிர்வாகம் செய்யும்படியும், வரி செலுத்தும்படியும் கட்டளையிட்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த, சங்கிலி மன்னன் மீது போத்துக்கீசர் போர் தொடுத்தனர். போத்துக்கீச படையை எதிர்கொள்ள முடியாத நிலையில், இராசதானியாகிய நல்லூரில் இருந்து சங்கிலியன் தப்பியோட முயன்றபோது, போத்துக்கேயப் படையால் கைதுசெய்யப்பட்டான். பின்னர் அங்கிருந்து, போத்துக்கீசரின் அப்போதைய தலைமையகமாக விளங்கிய கோவாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு கொலை செய்யப்பட்டான். அத்துடன் 1621 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியமும் போத்துக்கீசர் வசமானது. கண்டி இராச்சியமும் வன்னி இராச்சியமும் தொடர்ந்தும் தனித்தனி இராச்சியங்களாக விளங்கின.

கண்டி மன்னன் போத்துக்கீசரை வெளியேற்ற, ஒல்லாந்தரின் உதவியை

நாடியதைத் தொடர்ந்து அவர்களின் ஆட்சிக் காலம் (1658-1796) ஆரம்பமானது. ஒல்லாந்தர் ஆட்சியின் போது வடக்கே யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு மற்றும் பொருளாதாரம், வாழ்க்கை முறை என்பவற்றை அவதானித்து, அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் வகையில், தேசவழமைச் சட்டத்தைக் கொண்டுவந்தனர். குறிப்பாக 1704 ஆம் ஆண்டு இலங்கையில் டச்சு கவனராகக் கடமையாற்றிய சைமன்ஸ் (Simons) என்பவர், யாழ்ப்பாணத்தில் திசாவையாகப் பணிபுரிந்த கிளாஸ் ஐசாக் (Class Isaac) என்பவரை அழைத்து, தமிழ் மக்களின் பாரம்பரியங்களை ஆராய்ந்து தொகுக்கும்படி பணித்தார். அப்பணியை ஐசாக் பூரணப்படுத்தியதும், மீண்டும் சரிபார்க்கப்பட்டு 1708 ஆம் ஆண்டு "தேசவழமைச் சட்டம்" என்ற பெயரில் அது சட்டமாக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழினம், தமக்கே உரிய தனித்துவமான பிரதேசத்தையும், கலை, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், மற்றும் வாழ்க்கை முறைகளையும் கொண்ட ஒரு தனி இனம் என்பது உறுதிப் படுத்தப்பட்டது. தற்பொழுது தமிழினத்தின் இருப்பே கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளமைக்குக், காலப்போக்கில் தேசவழமைச் சட்டம் கைவிடப் பட்டமையும் ஒரு காரணமாகும்.

ஒல்லாந்தர் 1796 ஆம் ஆண்டு வெளியேறி, பிரித்தானியர் ஆட்சி ஆரம்பமான போது (1796-1948) கண்டி இராச்சியமும், வன்னி இராச்சியமும் தொடர்ந்தும் சுதேச மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பிரித்தானியர் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரத் தீர்மானித்தனர். கண்டி அரசனையும் வன்னி மன்னனையும், தமது நிர்வாகத்தின் கீழ் ஆட்சி செய்யும்படியும், வரி செலுத்தும்படியும் நிர்ப்பந்தித்தனர். அதனை மறுக்கவே அவர்கள் மீது போர்தொடுத்தனர். அதேவேளை காக்கை வன்னியனின் துரோகத்தனத்தால் வன்னி இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த குலசேகரன் வைரமுத்து பண்டாரவன்னியன், 1803 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31 ந் திகதி கற்சிலைமடு என்னுமிடத்தில் பிரித்தானியப் படையினரால் கைது செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டான். அத்துடன் வன்னி இராச்சியம் பிரித்தானியர் வசமானது.

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில், பிரித்தானியப் படை பல சிரமங்களை எதிர்நோக்கியது. உயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும் கண்டி இராச்சியத்தின் அரண்களாக விளங்கின. அவ்வப்போது பிரித்தானியப் படைகள் கண்டி இராச்சியத்தினுள் ஊடுருவிய போதிலும், நிரந்தர வெற்றியைப் பெறச் சில ஆண்டுகள் சென்றன. இறுதியாக 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ந் திகதி கண்டி இராச்சியமும் பிரித்தானியர் வசமானது. கடைசியாகக் கண்டி இராச்சியத்தை 17 வருடங்களாக ஆட்சிசெய்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் கைது செய்யப்பட்டு, கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டான். பின்னர் அங்கிருந்து வேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டு, திப்புசுல்த்தானின் மகன் ஹைதர் அலியின்,

அரண்மனையில் சிறைவைக்கப்பட்டான். இறுதியாக 1832 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி மரணமடைந்தான். அத்துடன் அவனது வம்சமும் முடிவுக்கு வந்தது. இலங்கையிலிருந்த இராச்சியங்கள் அனைத்தும் அஸ்தமித்தன. அப்போது இலங்கையின் பிரித்தானிய ஆள்பதியாகக், கடமையாற்றிய சேர்.ரோபேட் பிறவுண்றிக், 2357 வருடகால சுதேச மன்னர்களின் ஆட்சி முடிவுக்கு வந்து, முழுமையான அன்னியரின் ஆட்சி ஆரம்பித்ததை, நினைவு கூர்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கை முழுவதனையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பிரித்தானியர், பிரதேசத்துக்குப் பிரதேசம் வெவ்வேறு நீதி நிர்வாக பரிபாலன முறைகள் காணப்பட்டதனை வெறுத்தார்கள். எனவே நாடு முழுவதற்குமான பரிபாலன முறையை வரையறை செய்ய கோல்புறுக் - கமரன் தலைமையில் ஒரு ஆணைக்குழுவினை அமைத்தனர். அக்குழுவின் சிபார்சின் பிரகாரம் 1833 ஆம் ஆண்டு கோல்புறுக் - கமரன் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தது. ஆங்கிலம் நிர்வாக மொழியாக்கப்பட்டது. இலங்கை ஒரே ஆட்சியின் கீழ் வடமாகாணம், கிழக்கு மாகாணம், தென் மாகாணம் மேல் மாகாணம், மத்திய மாகாணம் என ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. வடமாகாணம், யாழ்ப்பாணப்பகுதி, தீவுப்பற்று, மன்னார், வவுனியா அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக வரையறை செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் பகுதி, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, தீவுப்பற்று என மணியகாரன் பிரிவுகளாக இருந்தன. நிர்வாக வசதி கருதி அவை மேலும் உடையார் பிரிவுகளாகவும், விதானையார் பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே வலிகாமம் வனப்பும், செல்வச் செழிப்பும் கொண்ட பிரதேசமாகும். குறிப்பாக 55.8 சதுரக் கிலோமீட்டர் பரப்பளவான வலிகாமம் வடக்கு கடல் வளமும் நிலவளமும் நிரம்பப் பெற்றது. காயாத் துறைமுகம் என அழைக்கப்பட்ட காங்கேசன்துறை, துறைமுகமும், மயிலிட்டித் துறைமுகமும் நீண்ட கால வரலாற்றைக் கொண்டவை. மயிலிட்டிக் கிராமம் மயிலிட்டித் துறைமுகத்துடன் பின்னிப்பிணைந்த வரலாற்றைக் கொண்டது. இதன் வடக்கே கடற்பகுதி, இலங்கையில் உள்ள பாரிய மீன்பிடித் தளங்களில் ஒன்றாகும். தெற்கே வளமான செம்மண்ணைக் கொண்ட விவசாய நிலம் பரந்து காணப்படுகிறது. இங்கு தான் பலாலி, வயாவிளான் மாவிட்டபுரம், கட்டுவன், குரும்பசிட்டி, வர்த்தலைவிளான் போன்ற கிராமங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. எனினும் இக்கிராமங்களின் பெரும்பாலான பகுதிகள் நீண்ட காலமாக மயிலிட்டி தெற்கு என்றே அழைக்கப்பட்டு வந்தன. உதாரணமாக, குரும்பசிட்டியில் 1900 ஆம் ஆண்டு பொன். பரமானந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை (மகாதேவா வித்தியாசாலை) மயிலிட்டி தெற்கு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை என்றே அழைக்கப்பட்டது. கட்டுவனில் 1922 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாலர் ஞானோதய சங்கம், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய

சங்கம் எனவும், 1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாலர் ஞானோதய வித்தியாசாலை, மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலை எனவும், 1934ஆம் ஆண்டு குரும்பசிட்டியில் நிறுவப்பட்ட சன்மார்க்க சபை, தென்மயிலை சன்மார்க்க சபை எனவும், அழைக்கப்பட்டு வருவதனை அவதானிக்கலாம்.


காலப்போக்கில் சமூக பொருளாதார அபிவிருத்தி கருதியும், நிர்வாக வசதி கருதியும், எல்லைகள் மீள்வரைபு செய்யப்பட்டன. மன்னர் ஆட்சிக்காலத்தில் மயிலிட்டிப் பிரதேசம், வீர்மாணிக்கதேவர், பெரிய மாணிக்கதேவர், நரசிம்மதேவர் ஆகிய மூன்று சகோதரர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. பின்னாளில் வீரமாணிக்கதேவன்துறை ஐந்தாம் வட்டாரமாகவும், பெரியமாணிக்கத் தேவன்துறை ஆறாம் வட்டாரமாகவும் காங்கேசன்துறைப் பட்டணசபையுடன் இணைக்கப்பட்டன. நரசிம்மதேவர் பரிபாலனம் செய்தபகுதி ஒன்பதாம், பத்தாம் வட்டாரங்களாக மயிலிட்டி கிராமாட்சி மன்றத்துடன் இணைக்கப்பட்டன மயிலிட்டிக் கிராமம் 1970களில் மயிலிட்டிக் கரை, மயிலிட்டி வடக்கு, ஆதி மயிலிட்டி, மயிலிட்டி தெற்கு என நான்கு கமநல சேவை வலயங்களாக மீள் வரைபு செய்யப்பட்டது. 1980களின் மத்தியில் கட்டுவன் J/238 , கட்டுவன் மேற்கு J/ 239 , மயிலிட்டி தெற்கு J/240, வர்த்தலைவிளான் J/241 என நான்கு கிராமசேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவ்வாறு நிர்வாக வசதிகள் கருதி அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான் மக்கள் கொண்டும் கொடுத்தும், ஓர் ஊரவர் போல் அன்னியோன்னியமாக வாழ்ந்தார்கள், என்பது வரலாற்று உண்மை.

# 2

# அமைவிடம்

கட்டுவனூர் என்று பொதுவாகக் கூறும் பொழுது ஊரங்குணை, தண்ணித்தாழ்வு, வளமாரி, பங்கிரரய், தேங்கிரை, பொன்பரப்பி, அலவத்தை, மலப்பை, உக்குடை, துறட்டையிட்டி, விழிசிட்டி, இயற்றம்பசிட்டி, மாவடி, பைந்தாவத்தை, வவணத்தம்பை போன்ற பல குறிச்சிகள் உள்ளடங்கிய கட்டுவன் பிரதேசம், மற்றும் மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய கிராமப்புறங்களையும் குறிப்பிடுவதாக அமையும். அரசாங்கம் தனது நிர்வாக வசதிகளுக்காக வெவ்வேறு அலகுகளாக பிரித்துக் கூறு போட்டாலும், இங்கு வாழ்ந்தவர்கள் கொண்டும் கொடுத்தும் திருமண உறவுகளாலும் ஒரு பிரதேசத்து மக்களாகவே வாழ்ந்து வந்தமை கண்கூடு. இக்கிராமம் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மயிலிட்டி உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

புவியியல் அடிப்படையில் கட்டுவனூர் கிராமத்தின் அமைவிடம், பூமத்திய ரேகைக்கு வடக்கே 9.46 பாகை வட அகலக்கோடும், கிழக்கே 80.1 பாகை கிழக்கு நெடுங்கோடும் சந்திக்கும் புள்ளியாகும். தரைத்தோற்றம் கடல் மட்டத்தில் இருந்து சராசரி ஒன்பது அடி உயரமுடைய ஓர் சமதள பிரதேசமாகும். மண் வளத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே செழிப்பான மண் என கூறப்படும் 'செம்மண்' வலயத்துள் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும். இரும்புச்சத்தை அதிகமாகக் கொண்ட இம்மண்ணை மண்வள ஆராய்ச்சியாளர்கள் எருவாட்டி நிலம் எனவும் கூறுவர். இங்கு வாழும் மக்களை மண்ணின் தன்மைக் கேற்ப செம்பாட்டார் எனவும் அழைப்பர்.



போர்க் காலத்துக்கு முன்னர் (1986)

கட்டுவனூர் இரு முச்சந்திகளைக் கொண்ட ஓர் சந்திக் குடியிருப்பாகத் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த கிராமமாகும். கிழக்கே பருத்தித்துறையில் இருந்து மேற்கே மூளாய் வரை செல்லும் நெடுஞ்சாலையில் வயாவிளான் சந்திக்கும் தெல்லிப்பளை சந்திக்கும் நடுவே கட்டுவன் சந்தி அமைந்துள்ளது. மல்லாகம் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி 150 யார் தூரம் சென்று பின் வடகீழ் திசையாகத் திரும்பி கட்டுவனில் கிழக்கு-மேற்காக செல்லும் நெடுஞ்சாலையில் மல்லாகம் வீதி சந்திக்கும் இடம் (பண்டிதர் இ.நமசிவாயதேசிகர் ஐயா வீட்டுக்கு முன்பாக) முதலாவது சந்திப் பகுதியாகும்.



*முதலாவது சந்திப் பகுதி 1984*

*மயிலிட்டிக் கரையில் இருந்து தெற்கு நோக்கி வந்து அதே நெடுஞ்சாலையில் மயிலிட்டி வீதி சந்திக்கும் இடம் (கனகசபை பலசரக்கு கடைக்கு முன்பாக) இரண்டாவது சந்திப் பகுதியாகும். கட்டுவனூரின் எல்லைக் கிராமங்களாக வடக்கே மயிலிட்டி, வடகிழக்கே பலாலி, கிழக்கே வயாவிளான், தென்கிழக்கே குப்பிளான், குரும்பசிட்டி, தெற்கே ஏழாலை, தென்மேற்கே விழிசிட்டி, மேற்கே தெல்லிப்பளை, வடமேற்கே வீமன்காமம், மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம்.*

# 3

# வரலாற்றுப் பின்னணி

கட்டுவனூரின் ஆரம்பகால வரலாறு பற்றித் திட்டவட்டமாக அறிய முடியாதுள்ளது. எனினும் பல்வேறு ஆய்வாளர்களும், அறிஞர்களும் வெவ்வேறு கருத்துக்களைப் பதிவு செய்திருப்பதனை ஆங்காங்கே அவதானிக்க முடிகிறது. ஊர் பெயர்களை வைத்து அதன் தோற்றம், வரலாறு என ஆய்வு செய்யும் முறை "இடப்பெயர் ஆய்வு" எனப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ் துறைப் பேராசிரியரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமாகிய கலாநிதி.இ.பாலசுந்தரம் அவர்கள் தமது "ஈழத்து இடப்பெயர் ஆய்வு' என்ற நூலில் கட்டுவனூர் குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "வலிகாமம் வடக்கு, மயிலிட்டி தெற்கு, கிராமசேவகர் பிரிவிலுள்ள கட்டுவன் என்ற ஊரின் பெயர் கட்டுவன் குட்டுவன் குட்டுவனூர் என வழங்குகிறது. பண்டைய தமிழகத்தைச் சேர்ந்த குட்ட நாட்டு மக்கள் இங்கு வந்து குடியேறிய படியால் "குட்டுவனூர்" என்ற பெயர் வந்ததென்பர் குட்டுவனூரே கட்டுவன் ஆயிற்று என்பர்.

கட்டுவனூர் பற்றி தா.சண்முகசுந்தரம் (1984) பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இங்கு மலை இல்லை வற்றாத பேராறு எதுவும் இல்லை. மாரியில் மட்டும் நீர் தேங்கி ஓடும் இந்த நீரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நம் முன்னோர் தேக்கி வைத்தனர். தமது நிலப்பரப்புக் கேற்ப கல்லணை, மண்ணனை என்பவற்றை அமைத்தனர். மேட்டுப் பூமியான கட்டுவன் ஊரிலே தோன்றுவது வழுக்கையாறு இங்கு அணை ஒன்றைக் கட்டினர். எனவே அணைகட்டுவனூர் என்ற பெயர் வந்தது".

இவ்விடத்தில், வழுக்கையாறு பற்றி சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது பயனுள்ளதாக அமையும் எனத் தோன்றுகிறது. வழுக்கையாறு என்பது, கட்டுவன், வர்த்தலைவிளான், வீமன்காமம் தெல்லிப்பளை மயிலிட்டி, அளவெட்டி தையிட்டி, துர்க்கைஅம்மன் கோயிலுக்குப் பின்பக்கமாக உள்ள மாத்தனை போன்ற

*மேட்டுப்பூமிப் பிரதேசங்களில், பெய்யும் மழைநீர், தெற்கு நோக்கி வழிந்தோடி ஏழாலை நெடுங்கண்ணிக் குளத்தில் நிரம்பி, அங்கிருந்து மேலும் தென் திசை நோக்கிச் சென்று, பின்னர் மேற்கே, அதற்கென அமைந்த கால்வாய்கள் ஊடாகப் பாய்ந்து, சுன்னாகம் ஐயனார் கோயில் குளத்தில் சங்கமிக்கும். பின் இந்த இருகுளத்து நீரும், மறுபுறம் அளவெட்டியில் ஒரு பக்கத்தில் அம்பனைச் சந்திவரையும் மறுபக்கத்தில் மாசியப்பிட்டி முத்துமாரியம்மன் கோயில் வரையும் நீண்ட பிரதேசத்தில் பெய்யும் மழையால், ஏற்படும் வெள்ளம், அங்குள்ள பெரிய தம்பிரான்குளம், சின்னக்குளம் என்பவற்றை நிரப்பி, அம்பனை வயற்காடுகள், முடியுமிடத்திலிருந்து தென்மேற்கு நோக்கிப் பாயும் நீரும் சேர்ந்து வழுக்கை ஆறாகி, கந்தரோடை, மினாக்கைக் குளம், வடக்குக் குளம் என்பவற்றை நிரப்பி பின் சண்டிலிப்பாய் கண்ணகி அம்மன் கோயில் வயல்களையும் நிரப்பி, கட்டுடை ஐந்துகண் மதவூடாகப் பாய்ந்து, நவாலியைக் கடந்து, அராலிப் பாலத்தின் ஊடாகக் கடலை அடைகிறது. யாழ்ப்பாணத்தில் ஓடும் மிகச்சிறிய பருவகால ஆறான, வழுக்கை ஆற்றின் நீளம் பதினாறு கிலோமீட்டர்களாகும்.*

*சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து, மானிப்பாய் வீதியில் மிகக்குறுகிய தூ ரத்திலுள்ள கட்டுடைக் கிராமத்தை அடையமுன் ஐந்து கண் மதவுள்ளது. வழுக்கை ஆறு பெருக்கெடுத்து அதன் அணைகளில் உடைப்பெடுக்கும், என்ற நிலையிலேயே, அதன் பணியாளர்கள் வான்கதவைத் திறப்பர். ஊர்மக்கள் பயிர்கள் அழிந்துவிடும் எனப் பயந்து கேட்கும் வரை காத்திருந்து அளவுக்குத் தேவையான முறையில் திறந்து விடுவர். ஆற்றுநீர் அராலி வரை சீறிப்பாய்ந்து செல்லும். வழுக்கை ஆறு ஒரு காலத்தில் ஆழமானதாக இருந்திருக்கிறது. தமிழ் நாட்டுடன் யாழ்ப்பாணத்து மக்கள் போக்குவரத்து வாணிபம் என்பவற்றில் ஈடுபட இது ஒரு நீர்வழிப் பாதையாக முக்கியத்துவம் பெற்றிருந்தது, எனக் கல்வளைப் பிள்ளையார் கோயில் வரலாறு எடுத்துக் கூறுகிறது. வழுக்கை ஆற்றைச் சார்ந்த மருதநில கல்வளைப் பகுதியும் பிரபல்யம் பெற்றிருந்தது. தமிழகத்தில் பிரசித்தி பெற்ற ஆற்றங்கரைத் திருத்தலங்கள் போல கல்வளைத் தலமும் விளங்குவதாக அதன் வரலாறு மேலும் கூறுகிறது. ஆதிதிராவிடரின் நாகவழிபாடும் வழுக்கையாற்றின் கரையோரமாக இங்கு பரவியுள்ளது. கல்வளையில், நாகதம்பிரான் வழிபாடு ஒரு காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அயலூர் மக்களும் இங்கு வந்து நாகதம்பிரானுக்குப் பொங்கிப் படைக்கும் வழக்கமும் இருந்துள்ளது.*

*கட்டுவனூர் பற்றி குமாரசாமி என்பவர் (197168) சிங்களப் பெயர் எனக் குறிப்பிட்டு, சிங்களத்தில் (கட்டு = முள், வன் = காடு) என்ற பொருளில் தோன்றியதே கட்டுவன் எனக் குறிப்பிடுகின்றார்.*

*தி.க.முத்துச்சாமி என்பவர் தனது "எங்களூர் எழாலயவூர்" என்ற தமது நூலில் கட்டுவனூர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "குரும்பசிட்டியைப்*

*போலவே கட்டுவன் என்றோர் ஊர்ப்பெயர் அநாதியில் இருந்ததில்லை. ஏழாலயத்திலிருந்து வடக்கு நோக்கி ஆரம்பித்த குடியேற்றம், காலகதியில், மயிலிட்டியின் தெற்கு எல்லைக்கு அண்மித்து வந்த காலத்தே, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், வர்த்தலைவிளான் போன்ற கிராமங்களிலும், அவற்றின் வடபாலும் பெய்யும் மாரி மழைநீர், தற்போதைய கட்டுவன்-தெல்லிப்பளை வீதியிருக்கும் பகுதியூடாகத் தெற்கு நோக்கிப் பாய்ந்து வரும். குடியேறிய ஏழாலைக் குடிமக்கள், ஒன்றுதிரண்டு, அம்மழை வெள்ளம், தம் பகுதிகளை நோக்கிப் பாய்ந்து, தம் பயிர்களையும் குடிசைகளையும், அழிப்பதைத் தடுக்கும் முகமாக, ஓர் உபாயம் செய்தனர். தெல்லிப்பளையிலிருந்து கிழக்கு நோக்கி ஓர் பாரிய வடிகால் (வான்) கட்டினார்கள். வான் கட்டிய பின்பு ஏழாலையின் ஊடே, பாய்ந்தோடிய மழைவெள்ளம், வடக்கு நோக்கிப் பாய்ந்து, மயிலிட்டிக் கடலுடன் சங்கமமாயிற்று. மக்களை அழிவிலிருந்து காத்த "கட்டுவான்" காலகதியில் கட்டுவன் என்றாகி அங்கு குடியேறிய மக்களுக்கோர் புதிய கிராமமாயிற்று. இது கற்பனைக் கதையன்று" எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*கலாநிதி சிவ. தியாகராஜா அவர்கள் "போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த போது, வரி வசூலிப்பதற்காக யாழ்ப்பாணக் கிராமங்களைப் பட்டியலிட்டு வைத்திருந்தார்கள். 1645 ஆம் ஆண்டுக்குரிய இந்த ஆவணம் 1920 ஆம் ஆண்டில் P.E. PIERIS அவர்களால் JAFANAPATAM என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது. இக்கிராமங்களின் பட்டியலில் (பக்கம் 47) கட்டுவன், மயிலிட்டி(தெற்கு), வசாவிளான் ஆகிய கிராமங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வர்த்தலைவிளான் என்றோ, குரும்பசிட்டி என்றோ, ஏழாலை என்ற பெயரிலோ, கிராமங்கள் 1645 ஆம் ஆண்டில் இருக்கவில்லை." எனக் குறிப்பிடுகின்றார்.*

மேற்கண்ட பல்வேறு கருத்துக்களையும் நோக்கும்போது கட்டுவனூர் பற்றிய ஆரம்பகால வரலாறு, தோற்றம் என்பன மேலும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

# 4

# கட்டுவன் சந்தி

கட்டுவன் சந்தியை மையப்புள்ளியாகக் கொண்டு, மயிலிட்டிதெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான் ஆகிய முக் கிராமங்களும் உள்ளடங்கிய பிரதேசம் ஏறக்குறைய இருபத்தைந்து சதுரக் கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டதாகும். திரு நா. சண்முகலிங்கம் அவர்கள் எழுதி வெளியிட்ட, "என் அப்பாவின் கதை" என்னும் நினைவு மலரில் அமரர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள் கட்டுவனூர் பற்றி எழுதிய வரையறை "கட்டுவன் சந்தியை மையமாக அதைச் சூழ்திருக்கின்ற, மயிலிட்டி தெற்கில், குரும்பசிட்டி தவிந்த பகுதியும், கட்டுவன் வடபகுதியும், வர்த்தலைவிளானும், இனசனக் கலப்பு முதலிய ஏதுக்களால் ஓர் ஊராகவே கருதப்பட்டு வருவன." என்பதாகும்.

20ஆம், நூற்றாண்டின் ஆரம்பத்தில் வர்த்தகர் கணபதிப்பிள்ளை கந்தையா அவர்களின் வியாபார நிலையமும் அவரது தமையனார், சட்டத்தரணி க.மயில்வாகனம் அவர்களின் சட்டக் காரியாலயமும், இராசையா சாப்பாட்டுக் கடை என்ற ஒரு உணவகமும் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னாளில் பண்டிதர் நமசிவாயம் ஐயா வீட்டுக்கும் சங்கக் கடைக்கும் (தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை) இடையே மூன்று சிறு கடைத் தொகுதிகள் இருந்தமையும், அவற்றுள் ஒன்றில் கட்டுவனைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவர் முடிதிருத்தும் நிலையத்தை நீண்ட காலம் நடத்தி வந்தமையும் நினைவில் உள்ளது.




**பொன்னையா கனகரத்தினம்**

கட்டுவன் முதலாவது சந்தியின் அடையாள மூலக் கூறுகளாக சைவமடம், துரைச்சாமி ஐயர் தேனீர்க் கடை, பின்னாளில் ஐயர் கட்டிய கடைத் தொகுதி, (இது தற்பொழுதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.) கனகரத்தினம் தேனீர்க்கடை, பரமானந்தர் கடை, (முன்னர் விஜயசுந்தர ஐயரின் பெற்றோர் நடாத்திய கடை பின்னாளில் பரமானந்தர் தனியார் கூட்டுறவு நிலையம்) உயர்ந்து பரந்து விரிந்த ஆலமரம், பண்டிதர் நமசிவாயம் ஐயா குடும்பத்தினர் வாழ்ந்த நாற்சார் மாடிவீடு என்பனவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது சந்தியின் அடையாள மூலக் கூறுகளாகத் துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயம், அரசமரம் தற்பொழுதும் இராணுவக் கட்டுப்பாடில் உள்ள கனகசபை கடைத்தொகுதி, விதானையார் கடை, என்பவற்றையும் குறிப்பிடலாம். கனகசபை கடைத் தொகுதியில் பலசரக்குக் கடை, நாகலிங்கம் முடிதிருத்தும் நிலையம், துவிச்சக்கரவண்டி திருத்துமிடம், ஒலிபெருக்கி வாடகைக்கு கொடுக்கப்படும் இடம் என்பன கட்டுவனூர் மக்கள் பயன் பெறும் வகையில் இருந்தன. கட்டுவன் சந்திக்கு சற்றுத் தொலைவில் திருச்செல்வம் கடை, சின்னப்பொடி கடை, சேனர் கடை போன்ற சிறு கடைகளும் இருந்தன. மேலும், சங்கக்கடை, மருந்தகம், வைத்திய சேவை, அந்திமகால சேவை, வாசிகசாலை, உப தபால் அலுவலகம் போன்ற அனைத்து சேவைகளையும் கொண்ட ஊராகக் கட்டுவனூர் விளங்கியது.

சிவபெருமானின் ஓர் அம்சமான வைரவக் கடவுளின் வழிபாடு, யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சைவசமய வழிபாட்டுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாகக் காணப்படுகிறது. போத்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த போது, சைவ சமயத்தவர்களைக் கட்டாயப்படுத்தி, மதம் மாற்றினர். சைவக் கோயில்களை இடித்து அழித்தார்கள். அதனால் அச்சமடைந்த சைவ சமயத்தவர்கள், சில இடங்களில், “அடுப்பு நாச்சியார்” என்ற வழிபாட்டைச் செய்தனர், அத்துடன் பல இடங்களில் தங்கள் வீட்டின் பின் வளவுகளில், அல்லது பனங்கூடல்களுள் சூலங்களை நட்டு மறைவாக வழிபட்டு வந்தனர். அவை காலப்போக்கில் வைரவர் கோயில்களாக வளர்ச்சி பெற்றன., கட்டுவன் இரண்டாம் சந்தியின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருக்கும், துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயமும் இவ்வாறே வளர்ச்சி பெற்று, சந்தியின் ஓர் அடையாளமாக (Icon) வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகிறது. மயிலிட்டி தெற்கில் வாழ்ந்து வந்த வர்த்தகரான வசந்தராயர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், கட்டுவன் இரண்டாம் சந்தியின் வடமேல் மூலையில், மக்கள் வழிபட்டு வந்த திரிசூலத்தைச் சுற்றி சிறிய கோயிலைக் கட்டுவித்தார். வசந்தராயரின் பேரனான நாகநாதர் இக்கோயிலை மேலும் பெரிதாகக் கட்டுவித்தார். அவரது ஆலயப் பணியைப் பாராட்டும் வகையில், அவரது உருவப்படமும், அவரது மனைவியார் சிவகாமி அம்மையார் உருவப்படமும், மூன்று தலைமுறைகளாக கோயில் உள்மண்டப வாசலிலே வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தின் மூலவர் ஞானவைரவர். பரிவார தெய்வங்களாகப் பிள்ளையார், முருகன் சந்நிதிகள் அமைந்திருந்தன.

*கட்டுவன் சந்தியின் இரண்டாவது அடையாளக் கூறாக சைவமடத்தைக் குறிப்பிடலாம். கட்டுவன் சந்திப்பகுதியைச் சூழ சைவ ஆசாரமுடைய சைவக் குடியிருப்புகள் காணப்பட்டமையால் அப்பகுதி "சைவமடம்" என அழைக்கப்பட்டு வந்தது. இற்றைக்கு ஆறு தலைமுறைகளுக்கு முன்னர் கட்டுவன் சந்திக்கு வடக்காக நாற்சார் வீடு கட்டி, பெயரும் புகழும் பெற்று செல்வாக்குடன் வாழ்ந்து வந்தவர் அப்பாக்குட்டி. தாமோதரம்பிள்ளை ஐயர் அவர்கள். இவரைத் தாமு ஐயர் என ஊர் மக்கள் அழைத்து வந்தனர். இவர் விவசாயத்துடன், தென்னிந்தியாவில் இருந்து உப்பு இறக்குமதி செய்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார். அதனால் இப்பகுதி "உப்புமடம்" எனவும், "கிட்டங்கியடி" எனவும் அழைக்கப்பட்டது. சந்திப்பகுதி மயிலிட்டி தெற்கு சைவமடச் சந்தி என அழைக்கப்பட்டது. இன்று வரை மக்களால் அப்பகுதி சைவமடம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இந்த சைவமடம் சைவ ஆசாரமுடைய எட்டுக் குடும்பங்களின் உரித்தாகவும், வாழ்விடமாகவும் விளங்கியமை அதன் தனிச் சிறப்பாகும் அக் குடும்பங்களாவன: அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை ஐயர் அவர்களின் பேரர்களான இராமசாமி தாமோதரம்பிள்ளை ஐயர் குடும்பம், இலக்கணவித்தகர், பண்டிதர் இராமசாமி. நமசிவாய தேசிகர் ஐயர் குடும்பம், சீனிவாசகம் விஜயசுந்தரம் ஐயர் குடும்பம், தம்பையா துரைச்சாமி ஐயர் குடும்பம், தம்பையா செல்லையா ஐயர் குடும்பம். தம்பையா மகள் அன்னம்மா (வேலாயுதர் ஐயர்) குடும்பம், மற்றும் சிவபாதசுந்தரக் குருக்கள் ஐயா (கணேசையா) குடும்பம் குணரத்தினக் குருக்கள் ஐயா குடும்பம் என்பனவாகும்.*



போர்ச்சூழல் காரணமாக, 1986ஆம் ஆண்டு கட்டுவனூர் மக்கள் முதல் தடவையாக குடிபெயர்ந்து, தெல்லிப்பளை, மல்லாகம், சுண்ணாகம், மருதனார்மடம் போன்ற இடங்களில் வாழ்ந்து வந்தனர் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் "அமைதிப்படை" என்ற பெயரில் யாழ்ப்பாணம் வந்ததும், அமைதி நிலவும் என்ற நம்பிக்கையில், குறிப்பிடத்தக்களவு மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிச் சென்று, மீண்டும் குடியேறினர் ஆனால் அந்த நம்பிக்கை நெடுநாள் நீடிக்கவில்லை. புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையிலான முறுகல் நிலை போராக வெடித்து, உக்கிரமடையவே, 1990 ஆம் ஆண்டு மீண்டும் கட்டுவனூர் மக்கள் அடைக்கலம் தேடிப் பிற இடங்களுக்கு முழுமையாகக் குடிபெயர்ந்தனர். அப்பொழுது சைவமடத்தில் எஞ்சியிருந்த சைவ குடும்பங்களும் குடிபெயர்ந்தன இக்குடியிடப்பெயர்வு கட்டுவனூர் மக்களின் நிரந்தர குடியிடப் பெயர்வாக மாறியமை, அதன் வரலாற்றுப் போக்கையே தலை கீழாக மாற்றிவிட்டது.

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய பிரதேசங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. ஏறக்குறைய முப்பது ஆண்டுப் போரின் பின்னர் 2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்தன்று, (14-04-2018) கட்டுவன் முதலாவது சந்தியின் வடபகுதி உட்பட, இரண்டாவது சந்தியின் மேற்குப் பிரதேசமும், வடமேற்குப் பிரதேசமும், அதனைச் சார்ந்த சில பகுதிகளும் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டன. ஞானவைரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், பாலர் ஞானோதய வித்தியாசாலை என்பன முற்றாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன. பல வீடுகள், உட்பட வாசிகசாலை, வெங்காயச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் போன்ற அனைத்துக் கட்டடங்களும் போரின் வடுக்களைச் சுமந்தும், முற்றாக அழிந்தும் காட்சியளித்தன.

கட்டுவன் சந்தியின் அடையாளக் கூறுகளில் ஒன்றாக விளங்கிய சைவமடம் அடையாளம் தெரியாது, இராணுவத்தால் முழுமையாக அழிக்கப்பட்டு இப்பில் இப்பில் மரங்கள் தழைத்தோங்கி வளர்ந்த காடாகக் காட்சியளித்தது. ஏறக்குறைய 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இச்சைவ மடத்தின் பாரிய நாற்சார் வீட்டின் கட்டட அமைப்பும், சைவக் குடும்பங்களின் நீட்சியும், கட்டுவனூரில் வேறெங்கும் காணப்படாத தனித்துவம் வாய்ந்த அடையாளக் கூறு இன்று இல்லை.

இச்சைவமடம் பற்றி நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கல்லடி. வேலுப்பிள்ளை என்பவர் "வசாவிளான் வைபவம் -1910" என்னும் வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "மல்லாகத்திலிருந்து வசாவிளான் போகும் மாட்டுவண்டிப் பாதையானது முதலில் வடக்கு நோக்கி ஏழாலை, கட்டுவன் ஆகிய ஊர்களின் ஊடாகச் சென்று சைவமடம் சந்தியையடைந்த பின்னர் வலது புறம் திரும்பி கிழக்கு நோக்கிச் செல்கிறது.

நீண்ட விழுதுகள் கொண்ட நெடிதுயர்ந்த ஆலமரங்கள் சூழ்ந்திருக்கும் சைவமடம் சந்தியில், சுண்ணாம்பாலும் கல்லினாலும் கட்டப்பட்டு ஓடுகளினால் வேயப்பட்ட ஒரு சத்திரமும், அதையடுத்து வரிசையாகச் சுமைதாங்கிக் கற்களும் இருக்கின்றன. சத்திரத்தினருகே கால்நடைகளுக்கான வைக்கோற்போரும் தண்ணீர்த்தொட்டியும் உள்ளன. இச்சத்திரத்துக்குக் கிழக்கே பரந்த கிளைகளுடன் விரிந்து நிற்கும் ஆலமரத்தின் கீழே, பழமையான ஒரு வைரவகோயில் இருக்கிறது. சத்திரத்தின் பின்னாலும் கோயிலின் சுற்றாடலிலும் இராமேச்சரத்திலிருந்து குடிவந்த பல சைவக் குடும்பங்களின் வீடுகளும் குடிசைகளும் இருக்கின்றன.

சாலை வழியே மாட்டுவண்டியில் செல்வோரும் தலையில் பொதி சுமந்த காலாட்பயணிகளும் இச்சத்திரத்தில் தங்கி, உணவு புசித்து, நீராகாரம் செய்து, இளைப்பாறிய பின்னர் தமது பயணத்தை மேலே தொடர்வார்கள். எந்தநாளும் இச்சத்திரத்தில் " வரகரிசிச் சோறும், கம்பங் கூழும் இலவசமாகவே கிடைக்கும்". இதன் மூலம் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டுவன் சைவமடம் எவ்வாறு இருந்தது என்பதனை நாம் அறியக்கூடியதாக உள்ளது. இச்சைவமடம் இருந்த இடம் தெரியாது, அழிக்கப்பட்டமையால் கட்டுவன் சந்தியின் முகத் தோற்றம் முற்றாக மாறியுள்ளது.

அக்காலத்து நாற்சார் வீடுகள் பற்றிக் கனக செந்திநாதன் தனது "ஈழம் தந்த கேசரி" என்ற நூலில் பின்வருமாறு கூறியுள்ளார். "அங்கே இருபத்தைந்து பறை குரக்கன், முப்பது பறை சாமை, தேவையான அளவு பயறு, ஒரு வருடத்திற்கு சாப்பிடப் போதுமான வரகு கோக்காலி என்ற (மரக்குற்றிகளில் சட்டமிடப்பட்டு பிணைக்கப் பட்டவை) பீடத்தின் மீது வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். ஐந்நூறு கண்டு மரவெள்ளி, இராசவள்ளி, சிறுகொடி என்பவை தோட்டத்தில் காணப்படும். நான்கு ஐந்து தொட்டில்களில் மூன்று சோடி எருதுகள் (உழுவதற்கு, சந்தைக்குப் போவதற்கு, சவாரி போவதற்கு) ஐந்நூறு பசுக்கள் கட்டப்பட்டிருக்கும். ஐந்நூறு வெள்ளாடுகள் பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் பாலுக்கும் மோருக்கும் பஞ்சமேயிருக்காது. உணவில் தன்னிறைவும், வாழ்வில் அமைதியும் நிலவிய காலமது'



நாற்சார் வீடு

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலே கட்டடக்கலை, பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்றாகச் சிறந்து விளங்கிய செட்டிநாட்டு வீடுகளைப் போல, இலங்கையிலே, தமிழர் தாயகத்தில், தனித்துவமான ஒரு கட்டக்கலை பண்பாட்டுச் சின்னமாக நாற்சார் வீடுகள் விளங்கின. நாற்சார் வீடுகள் நடுவே செவ்வக வடிவில் முற்றம் அமைத்து சுற்றிவர திண்ணை அமைத்துப் பின்னர் அதனைச்சுற்றி அறைகள் அமைக்கப்பட்டிருக்கும். 20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே, தனித்து ஒரு குடும்பம் வாழும் மினி நாற்சார் வீடுகள், மானிப்பாய் மருதனார்மடம் உட்பட வலிகாமம் மேற்கு வலிகாமம் வடக்கு பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்பட்டதாகப் பரவலான அபிப்பிராயம் இருந்தது. கட்டுவனூரிலும் இத்தகைய நாற்சார் வீடுகள் பல காணப்பட்டன. முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் இக் கட்டடக்கலை அருகியும், அழிந்தும் வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகிலன் என்பவர், தனது முதுகலைமானிப் பட்டத்தேர்வுக்கான ஆய்வுக் கட்டுரைக்குத் தேர்ந்தெடுத்த தலைப்பு “யாழ்பாணத்து நாற்சார் வீடுகள்” ஆகும்.

கட்டுவன் சந்தியின் மூன்றாவது அடையாளக் கூறாக, தமிழ் மக்களால் தெய்வீக விருட்சங்களாகவும், மூலிகைப் பண்புகள் நிறைந்தனவாகவும் கருதப்படும் ஆல், அரசு வேப்ப மரங்கள் பரந்து, விரிந்து காட்சியளித்தமையைக் குறிப்பிடலாம். “ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம்” என்னும் புறநானூறு பாடல் மூலம் ஆதிசிவன் ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருப்பவன் என்பது புலனாகிறது. மேலும் “ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி” என்னும் தமிழ் வழக்கு அதன் மருத்துவக் குணங்களை எடுத்துக் காட்டுகிறது. கட்டுவன் முதலாம் சந்தியின் தென்கிழக்கு மூலையிலே, பாரிய ஆலமரம் விழுதுகள் பரப்பி நிழலையும், குளிர்மையையும் வாரிவழங்கியதைக் கட்டுவனூர் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதிகாலையிலே அதில் கூடும் பறவைகளினதும், பிராணிகளினதும் பல்வேறு இரம்மியமான ஒலிகள் உள்ளத்தை வருடிச் சென்றதையும், மறப்பதற்கு நியாயமில்லை. ஆலமரத்தின் சிறப்பினை தமிழ் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

“தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
சிறுமீன் சினையினும் நுண்ணிதே ஆயினும்
அண்ணல் யானை அணி தேர்ப் புரவி
ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க நிழலாகுமே”.

இத்தகைய சிறப்புடைய ஆலமரம் 1960 களில் கட்டுவனூரின் மின்சார வசதிக்காக அழிவை சந்தித்தது. அபிவிருத்தி என வரும்போது முதலில் அழிவைச் சந்திப்பவை மரங்களேயாகும்.

கட்டுவன் இரண்டாம் சந்தியில், வைரவர் கோயிலுக்கருகே ஒரு அரசமரம் வளர்ந்து வந்தது. அரசமரத்துக்கு ஏனைய மரங்களை விட ஒரு தனிச்சிறப்புண்டு. பிறமரங்கள் பகலில் பிராணவாயுவையும் இரவில் கரியமில வாயுவையும் வெளியிட, அரசமரம் இருபத்தினான்கு மணி நேரமும் பிராணவாயுவை வெளியிடும் தன்மை வாய்ந்தது. அதனாலேயே மரங்களுக்கெல்லாம் அரசனாகக் கருதப்பட்டு "அரசமரம்" என அழைக்கப்படுகிறது. அந்த அடையாளம் இன்று இல்லை.

கட்டுவன் முதலாவது சந்தியின் அடுத்த முக்கிய அடையாளக் கூறாக, பண்டிதர் நமசிவாய தேசிகர் ஐயா அவர்களின் "கமலாசனம்" எனப் பெயரிடப்பட்ட, நாற்சார் மாடி வீட்டைக் குறிப்பிடலாம். இந்த நாற்சார் மாடி வீடு ஆறு அறைகளைக் கொண்டது. அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியை நோக்கிய பகுதி மேல் மாடியாக அமைந்தது.

மாடியின் முன் அரைப் பகுதி மொட்டை மாடியாகவும், பின் அரைப் பகுதி மண்டபமாகவும் காணப்பட்டது. பண்டிதர் ஐயாவிடம் பாடம் கேட்க வருபவர்கள் அமைதியாக கற்கும் கல்விக் கூடமாக இது விளங்கியது. யுத்தகாலத்தின் போது, அந்த வீடு இராணுவத்தினரால் முற்றாக சேதமாக்கப்பட்டது. உயர்ந்த முன்பகுதியைத். தமது கண்காணிப்பு வசதியைக் கருதி விட்டுவைத்தார்கள். இருபத்தெட்டு ஆண்டுகளின் பின்னர் கட்டுவனூர் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுபட்டபோது சிதைந்த நிலையில் அதனைக் காண முடிந்தது.



சிதைந்த நிலையில் பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் வீடு

# 5

# பாலர் ஞானோதய சங்கம்

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே, இளையோர் தத்தமது கிராம முன்னேற்றங்களில் அக்கறை கொண்டனர். இவர்கள் ஒரு பொது அமைப்பின் மூலமே பொருளாதார அபிவிருத்தியையும், கலை, கலாச்சார, சமய, சமூக மேம்பாட்டையும் அடைய முடியும் என்பதில் அசையாத நம்பிக்கையும் கொண்டனர்.

அயற்கிராமமான குரும்பசிட்டியில் ஈழகேசரி நா.பொன்னையா, “பெரிய வாத்தியார்” என்று அழைக்கப்பட்ட பொன். பரமானந்தர் ஆகியோர் தலைமையில் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மல்லாகத்தில் ஆர்.என். சிவப்பிரகாசம் தலைமையில் மல்லாகம் அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட்டது. அதுபோல கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் கிராமங்களைச் சேர்ந்த, கல்வி கற்ற, தொழில் ஆர்வம் கொண்ட திருவாளர்கள் சி.கந்தவனம் க.நாகலிங்கம், க.கந்தையா, சி.சின்னப்பு, சி.முத்துவேலு, சி.சரவணமுத்து, க. இரத்தினம், க.நல்லையா, ஆ.சின்னத்துரை, த.செல்லத்துரை, இ.ஆறுமுகம், ஆ.கணபதிப்பிள்ளை போன்ற பலர் ஒன்றிணைந்து, சைவமடத்தின் தெற்குப் புறச்சாரலில் சங்கம் அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடினர்.

பல கலந்துரையாடல்களின் பின்னர், க.பொன்னம்பலம் தலைமையில், 1922 ஆம் ஆண்டு முற்பகுதியில் பாலர் ஞானோதய சங்கத்தினை ஆரம்பித்தனர். அதன் முதலாவது செயலாளராக சின்னத்தம்பி சரவணமுத்து அவர்களும் தனாதிகாரியாக கந்தையா சின்னப்பு அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அதே ஆண்டு நவம்பர் மாதம் இருபத்திமூன்றாம் திகதி, (23-11-1922) மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய சங்கம் என உத்தியோக பூர்வமாகப் அதனைப் பதிவு செய்தனர். காலத்துக்குக் காலம் சி.கந்தவனம், சி.சுவாமிநாதன், சி.கார்த்திகேசு,

பிரம்மஸ்ரீ ச.கணேசையர், பண்டிதர் இ.நமசிவாயம் அழகம்மா சுந்தரம்பிள்ளை, வ.சின்னத்துரை போன்றவர்கள் பாலர் ஞானோதய சங்கத்தை வழிநடத்திச் சென்றுள்ளனர். தற்பொழுது ந.பாலச்சந்திரன் அவர்கள் அதன் தலைவராகப் பதவி வகித்து வருகின்றார்.



வ.சின்னத்துரை



த.செல்லத்துரை

பாலர் ஞானோதய சங்கம் ஒரு தாய்ச் சங்கமாக விளங்க, அதன் கீழ் படிப்படியாக ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை, விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், வெங்காயச் சங்கம், புகையிலைச் சங்கம், கிராம முன்னேற்ற சங்கம், சனசமூக நிலையம், அந்தியகால சகாயநிதிச் சங்கம், இந்துசமய அபிவிருத்திச் சங்கம், திவ்ய ஜீவன சங்கம், இளம் சைவத் தொண்டர் சபை, மத்தியஸ்த சபை, மாதர் சங்கம், மாதர் ஐக்கிய நாணய சங்கம், சிறுவர்களுக்காக சிறுவர் செந்தமிழ் தேர்ச்சிச் சங்கம், வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சி.கணேசையர் நினைவு சபை போன்ற பத்திற்கும் மேற்பட்ட கிளைச் சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டமை வியக்கத்தக்கதொன்றாகும். அதன் பலனாக சைவத் தமிழ் பாடசாலை, உப தபால் நிலையம், வாசிகசாலை, விளையாட்டுத் திடல், நெசவு நிலையம், வைத்திய சாலை, மருந்தகம் போன்ற மக்களுக்கு அவசிய தேவைகளான அனைத்தும் அரச உதவியுடனும் ஊர் மக்களின் ஆதரவுடனும் நிவர்த்தி செய்யப்பட்டன. குறிப்பாக, ஏழை விவசாயிகளின் நன்மைக்காக மத்திய மயிலிட்டி ஐக்கிய நாணய சங்கம் அவர்களுக்குக் கடன் கொடுக்கும் நோக்கத்துடன் கூட்டுறவாளர் சி.கந்தவனம் அவர்களால் 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் நியாயமான விலையில், பொருட்களைப் பெற, கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக, மத்திய மயிலிட்டி ஐக்கிய பண்டகசாலை பெரும் பணியாற்றியது.



அழகம்மா சுந்தரம்பிள்ளை



குகமணி மாணிக்கவாசகர்



நகுலேஸ்வரி நாகலிங்கம்



பரமேஸ்வரி முருகேசு

*திருமதி.அழகம்மா சுந்தரம்பிள்ளை, கனடாவில் வாழ்ந்து வரும் பாலரமணி மற்றும் நகுலேஸ்வரி நாகலிங்கம் போன்றவர்கள் பின்னாளில் மாதர் சங்கத்தில் இணைந்தும் தனித்தும் மகளிர் மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றினர். பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் திருமதி பரமேஸ்வரி முருகேசு அவர்கள், மாதர் சங்கத்தின் பொருளாளராகவும், ஐக்கிய நாணய சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். வர்த்தலைவிளானில் திருமதி குகமணி மாணிக்கவாசகர் மாதர் சங்கத் தலைவியாகப் பணியாற்றி மக்கள் மனதைக் கவர்ந்தார்.*



*பாலரமணி*

*பாலர் ஞானோதய சங்கத்திலும், அதன் கிளைச் சங்கங்களிலும் பணியாற்றியோர் தன்னலம் கருதாது, பொதுநலம் கருதிச் செயற்பட்டமையால் வாழ்வதற்குச் சிறந்த கிராமங்களுள் ஒன்றாக கட்டுவனூர் விளங்கியது. பல திறமையான விளையாட்டு வீரர்களைக் கொண்ட பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகம் தனது வெள்ளி விழாவினைக், கலை நிகழ்ச்சிகளுடன் 1975 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் நான்கு நாட்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடியது.*




*மேலேயுள்ள படம் அப்போது நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின் காட்சியாகும். அதில் பங்கு பற்றியவர்கள் இடமிருந்து வலமாக செல்வன் ஜம்புநாதன், மாத்தனை, மகாஜனாக் கல்லூரி மாணவன், செல்விகள் மாலதி சிவகுரு, ஜெயவாணி நாகலிங்கம், மதுரை தேவி நாகலிங்கம் (சுருதி வாத்தியம் மீட்டல்), மிதுலாதேவி நாகலிங்கம், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் (வயலின்) இந்நிகழ்வில் பங்கு பற்றிய நான்கு*

மாணவிகளும் சங்கீதபூஷணம் மாதுசிரோன்மணி வேலாயுதரிடம் இசை பயின்ற முதற் தொகுதி மாணவிகளாவர். தனித்துவமான மேடை அலங்காரங்களுடன், மின்னொளி வீச, நான்கு புறமும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு, கலகலப்பாக வெள்ளிவிழாவை, நடாத்திய, கலை உடல் வளர்ச்சிக் கழக நிர்வாக சபையில் வ.சிவபாலசுந்தரம் தலைவராகவும், து.ஜெகநாதன் உப தலைவராகவும், ச.சிவலிங்கம் செயலாளராகவும், க.தருமனாயகம் பொருளாளராகவும் அங்கம் வகித்தனர்.

இந்த இரம்மியமான வாழ்க்கை கட்டுவனூர் மக்களுக்கு நீண்ட காலம் நீடிக்க வில்லை. 1980 களின் தொடக்க காலகட்டங்களில் ஆரம்பமாகிய யுத்த மேகம், இடி, மின்னல் கொண்ட அகோர யுத்தமாக வெடிக்க, அவர்கள், யாழ்ப்பாணக். குடாநாட்டின் பல பகுதிகளிலும், இலங்கையின் பல பாகங்களிலும், உலகின் பல நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழத்தொடங்கினர். படிப்படியாக, புதிய சூழலுக்குத் தம்மை தயார்படுத்தி, கடின உழைப்பின் மூலம் தலை நிமிர்ந்து மீண்டும் கட்டுவனூ ரைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கினர். வெளிநாடுகளில் குடியேறிய எங்கள் கிராம மக்கள் தனி நபர்களாகவோ, அல்லது பாலர் ஞானோதய சங்கக் கிளைகள் மூலமாகவோ உதவி செய்து வருகிறார்கள்.

1960 களிலேயே கட்டுவனூரிலிருந்து தொழில் நிமித்தமும், உயர் கல்வி பெறும் நோக்கிலும் பலர் பிரித்தானியாவுக்குச் சென்றுள்ளனர். இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக இருந்ததனாலும், ஆங்கில மொழி பரீட்சயமுடைய மொழியாக இருந்ததனாலும் பிரித்தானியாவே முதற் தெரிவாக இருந்தது. அவ்வாறு சென்றவர்களுள் சிலர் நாடு திரும்ப, பலர் பிரித்தானியாவிலேயே நிரந்தரமாக வாழத்தொடங்கினர். அவர்கள் விடுமுறையில் ஊருக்கு வரும் பொழுது இளையோருக்கு கல்வித் தேவைகளுக்கான சிறு உதவிகளையும், விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வந்தனர்.

1972 ஆம் ஆண்டு பாலர் ஞானோதய சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவின் போது ஊருக்கொரு விளையாட்டு மைதானம் வேண்டுமென திரு. சி.நாகலிங்கம் அவர்களால் முதன் முறையாகக் கோரிக்கை விடப்பட்டது. அப்போது பாலர் ஞானோதய சங்கத்தின் தலைவராக பண்டிதர் இ.நமசிவாய தேசிகரும், இணைச் செயலாளர்களாக திரு சி.நாகலிங்கமும், கே.ரி.பாலசுப்பிரமணியமும் செயற்பட்டனர். திரு.சி.நாகலிங்கம் தலைமையில் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பிரித்தானியாவில் வாழ்ந்த கட்டுவனூர் மக்கள் பெருமளவு பணத்தைச் சேகரித்து அனுப்பினர். ஏறக்குறைய ஐந்தரைப் பரப்புக் காணி பாலர் ஞானோதய சங்கத்துக்கு உரியனவாகவும் ஏனைய காணிகள் தனியாருக்கு

உரியனவாகவும் இருந்தன. திரு சி நாகலிங்கம் தலைமையிலான குழு, காணி உரிமையாளர்களுடன் சுமுகமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அக்காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன்மூலம் கட்டுவனூருக்கு ஒரு விளையாட்டு மைதானம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரித்தானிய பாலர் ஞானோதய சங்கம், தாய்ச் சங்கத்தின் கிளைச் சங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பொருளாதார உதவிக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் போர்க் காலத்துக்கு முன்னரே பிரித்தானிய பாலர் ஞானோதய சங்கக்கிளை கட்டுவனூர் மேம்பாட்டுக்காக செயற்பட்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்பொழுதும் அது மிகத்தீவிரமாக செயற்பட்டு வருகிறது. குறிப்பாக அதன் உறுப்பினர்களான குட்டித்தம்பி கருணாகரன் அவர்களும் சங்கரப்பிள்ளை சிவானந்தா அவர்களும் பெருமளவிலான நிதிப் பங்களிப்பினை வழங்கி அண்மைக் கால அபிவிருத்திப் பணிகளுக்கு இரு தூண்களாக விளங்கி வருகின்றனர்.


குட்டித்தம்பி கருணாகரன்


சங்கரப்பிள்ளை சிவானந்தா

புலம்பெயர் தேசங்களில் பிரித்தானியாவிலேயே முதன்முதல் பாலர் ஞானோதய சங்கக் கிளை ஆரம்பிக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மையாகும். கடந்த ஆண்டு அது தனது 50 வருடத்தை நிறைவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி உட்பட, எமது மண்ணின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை, அடுத்த சந்ததியினர்க்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுவனூர் வசந்தன் நாடகத்தினை இளையோருக்குப் பயிற்றுவித்து கலை நிகழ்ச்சிகளில் மேடையேற்றி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம்முயற்சியில் பிரான்ஸ் மற்றும் கனடா பாலர் ஞானோதய சங்கக் கிளைகளின் பங்கு அளப்பரியதாகும்.

# 6

# கல்விப்பாரம்பரியம்.

யாழ்ப்பாண மக்கள் கல்விச் செல்வத்துக்கு முதன்மையளித்த பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளைப் போலவே கட்டுவனூரும் கல்விச் செல்வத்தில் செழித்திருந்தது. மகாமகோ உபாத்தியாயர் பிரம்மசிறி சி. கணேசையர் அவர்களால் வர்த்தலைவிளான் பெருமை பெற்றது. அவரது முதல் மாணாக்கராகிய இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர், மற்றும் பண்டிதர் வ. முத்துக்குமார், பண்டிதர் வே. முத்துலிங்கம், பால பண்டிதர் மாப்பாணர் அப்புக்குட்டி, (சுப்பையா வாத்தியார்). பண்டிதர் நடராஜா, பண்டிதர் பாலசுந்தரம், வித்துவான் தங்கவடிவேல் போன்ற கல்விமான்களால் கட்டுவனூர் பெருமை கண்டது. அமரர் கல்கி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அங்கு தடக்கி வீழ்ந்தால் ஆசிரியர் ஒருவர் மீதுதான் விழுவோம் எனக் குறிப்பிட்டிருந்தார். அவர் கூற்றுக்கிணங்க சராசரி வீட்டுக்கொரு ஆசிரியர் என்ற அளவில், பெருமளவிலான ஆசிரியர்களும் எமது ஊருக்குப் பெருமை சேர்த்தனர். மேலும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் எனப் பல்வேறு துறைசார் கல்விப் பெருமக்களும், விளையாட்டு வீரர்களும், வர்த்தகப் பெருமக்களும் எம்மண்ணின் பெருமையை பறைசாற்றி நின்றனர்.

போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும் கட்டிக்காத்து வளர்த்த பெருமை திண்ணைப் பள்ளிக்கூடங்களையும், குருகுல முறைக் கல்வியாளர்களையும் சாரும். குருக்குலக் கல்வி முறைமை முக்கியத்தும் இழந்து, பாடசாலைக் கல்வி முறைமை ஆரம்பித்த காலகட்டங்களில், கட்டுவனூரில் வாழ்ந்து வந்தவர்கள் தமது ஆரம்பக் கல்வியை, 1900 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயத்திலும், பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பாட்டனார் சின்னத்தம்பி உடையாரால்

1891ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு, தந்தையார் சட்டத்தரணி சுப்பிரமணியம் அவர்கள் நிர்வகித்து வந்த வீமன்காமம் தமிழ் பாடசாலையிலும், ஏழாலை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் வர்த்தலைவிளான் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், கல்விகற்று வந்தனர். 1922ஆம் ஆண்டு பாலர் ஞானோதய சங்கம் உருவாகி, அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக, யா/ மயிலிட்டிதெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலை, 1927 ஆம் ஆண்டு உதயமாகியது எனக் கூறப்படுகிறது. அதன் முதலாவது அதிபரும் ஆசிரியருமாக விளங்கியவர், அம்பலம் பொன்னையா அவர்கள். 'ஞானவழி உய்மின்" என்ற வாக்கியத்தை முதன்மையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, முற்றுமுழுதாக சைவத்தமிழ் கலாச்சாரத்தைப் பின்பற்றி செயற்படவேண்டும் என்பது ஆரம்பகர்த்தாக்களின் திடமான முடிவாக இருந்தது.

இப்பாடசாலை 1920 களின் ஆரம்பத்திலேயே செயற்படத் தொடங்கியது, என சிந்திக்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்ட செய்திகளையும் ஆங்காங்கே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆரம்பத்தில் இப்பாடசாலை கட்டுவன் முதலாவது சந்திக்கருகே தெல்லிப்பளை- வயாவிளான் பிரதான வீதிக்கு தெற்கே, வாசிகசாலைக்குப் பக்கத்தில் வெங்காயச் சங்கக் கட்டடத்தில் அமைந்திருந்தது. 11-07-1927 ஆம் ஆண்டு சைவ வித்யா விருத்திச் சங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றது. 05-09-1963 ஆம் ஆண்டு அரசுடைமையாக்கப்பட்டு, அரசினர் பாடசாலையாக மாறியது பின்னர் போதிய இட வசதி இன்மையால் மேற்படி பிரதான வீதிக்கு வடக்கே நெசவுசாலைக்குப் பக்கத்தில், விளைபொருள் உற்பத்தி விற்பனவு சங்கத்திற்கு உரித்தான கட்டடத்திற்கு 18-01-1964 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தது. 1975 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலரது ஒத்துழைப்புடன், மீளமைக்கப்பட்டு 1977ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர வகுப்புகள் வரை நடைபெற்றன. 1980 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பாலர் ஞானோதய வித்தியாசாலை தனது பொன்விழாவை கலை நிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடியது.





பாலர் ஞானோதய வித்தியாசாலை, பொன்விழா கலை நிகழ்ச்சிகளின் சில காட்சிகள். பங்குபற்றியவர்கள் மேலேயுள்ள படம் இடமிருந்து வலமாக செல்விகள் பா.பவதாரணி, வெ. நிலானி, நா.அனுராதை, த. ஜீவா.

அத்துடன் பொன்விழா மலரையும் (1927-1977) வெளியிட்டது பொன்விழாவையொட்டிப் பாடசாலையில் பல புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. குடிநீர்த் தாங்கியுடனான குழாய் நீர் வசதி, மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் பாவனைக்கு வந்தமை, கட்டடங்கள் முழுமைக்குமான மின்சார இணைப்பு, வடக்கு, கிழக்கு, மேற்கு புறச்சுவர்கள் கட்டப்பட்டமை, பிரதான வீதியிலிருந்து பாடசாலை வரையிலான பாதை செப்பனிடப்பட்டு சீர்திருத்தப்பட்டமை போன்ற பணிகளால் பாடசாலை புதுப்பொலிவு பெற்றுக் காட்சியளித்தது. இப்பாடசாலையில் அம்பலம் பொன்னையா அவர்களைத் தொடர்ந்து வி.அரியநாயகம் தேவதாசன், நா. இராமலிங்கம், கோ.நமசிவாயம், வி.இராமலிங்கம், தம்பிப்பிள்ளை, இ. தாமோதரம்பிள்ளை, ந.சிவக்கொழுந்து, ஆ.முத்துக்குமாரு, சி.நாகலிங்கம், அனு. வை.நாகராஜன் ஆகியோர் அதிபர்களாக பணியாற்றினர்.

1866 ஆம், ஆண்டு அமெரிக்க மிசன், வர்த்தலைவிளானில் வினாசித்தம்பி என்பவரின் ஆதரவோடு தமிழ் கலவன் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தது. அது ஏற்கனவே தெல்லிப்பளையில், உயர்தர வகுப்புகளைக் கொண்ட, முதலாவது கல்லூரியை, 1816 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தது. அதுவே தற்போதைய யூனியன் கல்லூரியாகும். அதன் உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் நோக்கத்துடனேயே ஏழாலை, வர்த்தலைவிலான் போன்ற அயற்கிராமங்களில் அமெரிக்க மிசனரிகளால் ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலையே, வர்த்தளைவிளான் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையாகும்.

மிசனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட, ஆரம்ப, உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கப்பட்டதோடு, மதமாற்றமும் தீவிரமாக நடைபெற்றது. 1619 ஆம் ஆண்டு போத்துக்கீசரும், 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தரும் யாழ்ப்பாண


இராச்சியத்தைக் கைப்பற்றிய போதிலும் முன்பிருந்த நிர்வாக முறையினைத் தொடர்ந்தும் அனுமதித்தனர். போத்துக்கீசர் மேற்கொண்ட மதமாற்ற நிகழ்ச்சி நிரலை ஒல்லாந்தரும் தொடர்ந்து பின்பற்றினர். 1796 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானியர், 1833 ஆம் ஆண்டு கோல்புறுக் கமரன் சிபார்சின் பிரகாரம், ஆங்கில மொழியை, ஆட்சி மொழியாக்கினர். தமது நிர்வாகத் தேவைகளுக்கான, ஆளணியைப் பெற ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். 1869 ஆம் ஆண்டு ஆங்கில மொழி மூல அரச பாடசாலைக் கல்வி முறையினையும் அறிமுகம் செய்தனர். அதே வேளை மதமாற்றத்தையும் தீவிரமாகக் மேற்கொண்டனர். போத்துக்கீசர் காலம் தொடக்கம் நடைபெற்ற, மதமாற்றத்தின் பாரிய விளைவுகளை, பிரித்தானியர் காலத்திலேயே, சைவ, பௌத்த சமயப் பெரியோர்களால் உணர முடிந்தது. அதன் எதிர் வினையாக, வடக்கே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பிரசாரங்களை மேற்கொள்ள, தெற்கே அனகாரிக்க தர்மபால பௌத்த சமய மறுமலர்ச்சிக்காகப் பிரசாரங்களை மேற்கொண்டார். அமெரிக்க மிசனரிமார் பயன்படுத்திய அதே யுக்தியை சைவ சமயத்தவர்களும் பயன்படுத்தினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மேற்கொண்ட கடும் முயற்சி பலனளிக்கத் தொடங்கியது. தெல்லிப்பளையில் மகாஜனாக் கல்லூரி, காங்கேசன்துறையில் நடேஸ்வராக் கல்லூரி, சுன்னாகத்தில் இராமநாதன் கல்லூரி எனச் சைவப் பெரியோர்களால் கல்லூரிகள் உருவாகின. குரும்பசிட்டியில் பொன் பரமானந்தர் வித்தியாசாலை, கட்டுவனில் பாலர் ஞானோதய வித்தியாசாலை, மயிலிட்டியில் சரஸ்வதி மகா வித்தியாலயம் போன்ற ஆரம்பப் பாடசாலைகளும் ஆரம்பிக்கபட்டன. வர்த்தலைவிளானில் கிறீஸ்தவ சமயம் ஊடுருவிய போதிலும், கட்டுவன், மயிலிட்டி தெற்கு பகுதிகளில் செல்வாக்குப் பெற முடியவில்லை.

# 7

# சைவசமயப் பாரம்பரியம்.

சைவமடத்தை மத்தியாக கொண்டு வளர்ச்சியடைந்த கட்டுவனூர் சைவசமய பாரம்பரியத்திலும் தளைத்தோங்கி விளங்கியது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். என்ற முதுமொழிக்கேற்ப சைவ ஆலயங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட புண்ணிய பூமியாகக் கட்டுவனூர் விளங்கியது. மயிலிட்டி தெற்கு, துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயம், மயிலிட்டி தெற்கு, அலவத்தை ஸ்ரீ பத்திரகாளிகா சமேத வீரபத்திரர் ஆலயம், வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயம், கரண்ட குளம் ஐயனார் கோயில், கரண்டயம்பதி சபரிகிரி ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தானம், கட்டுவன் முனியப்பர் கோயில், நாச்சிமார் கோயில், காசியம்மன் கோயில், பொன்னாச்சி வைரவகோயில், ஆராத்தை வைரவகோயில், தண்ணித்தாழ்வு வைரவர்கோயில், வளமாரி ஞானவைரவர் கோயில், பைந்தாவத்தை அண்ணமார் கோயில் போன்ற ஆலயங்கள் மக்களை ஆன்மீக வழியில் இட்டுச் சென்று அமைதியான வாழ்வுக்கு வடிகாலாக அமைந்தன.


திருவிழாக் காலங்களில் கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர், சிவஸ்ரீ க.சிவபாதசுந்தரக் குருக்கள், வர்த்தலைவிளான், பேராசிரியர் ச. விநாயகமூர்த்தி போன்ற சைவப் பெரியோர்களின் சமய சொற்பொழிவுகள் காற்றில் மிதந்து ஊரெங்கும் கேட்கும். இணுவில் பாலகிருஸ்ணன், அளவெட்டி தட்சணாமூர்த்தி குழுவினரின் மேளக்கச்சேரி பக்தர்களை பரவசமூட்டும். கண்ணன் கோஸ்டி, அருணா கோஸ்டியினரின் மெல்லிசைப் பாடல்கள் இதயத்தை வருடிச் செல்லும். செல்வசந்நிதி கோயில் திருவிழா காலத்தின் போது கட்டுவன் பிரதான வீதியூடாக காவடிகள், பஜனை கோஸ்டிகள், கோயிலை நோக்கி சவாரி செய்யும் மாட்டுவண்டிகளின் மணி ஒலிகள் என கட்டுவனூர் ஒரு காலத்தில் பகலில் மட்டுமின்றி இரவிலும் கலகலப்பாகவே காணப்பட்டது.



வர்த்தலைவிளானில் வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அதன் பின்னரும், விஜயதசமி தினத்தன்று, மருதடி விநாயகப் பெருமான், கட்டுவன் அலவத்தை வீரபத்திரர் ஆலயத்துக்கு எழுந்தருளி அருள் பாலிப்பது வழமை. அங்கு வாழை வெட்டு முடிந்து சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் தவில், நாதஸ்வரக் கச்சேரிகளுடன் கட்டுவன் ஊருக்கே உரிய தனித்துவமான கலையான “வசந்தன் கோலாட்டமும் நிறைவடைந்த பின்னரே, விநாயகப் பெருமான் மீண்டும் வர்த்தலைவிளானுக்கு எழுந்தருளுவார். அப்போது வீதியின் இருமருங்கும் வசிப்பவர்கள் குத்துவிளக்கு பூரணகும்பம் வைத்து, நைவேத்தியம் படைத்து, விநாயகப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்தனை செய்வார்கள். இத்தகைய நெருங்கிய ஆன்மீகத் தொடர்பு கட்டுவனுக்கும் வர்த்தலைவிளானுக்கும் இடையே இருந்தது. என.ச.விநாயகமூர்த்தி அவர்கள் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



கட்டுவனூரில் வாழ்ந்த சைவக் குருமார்களுள் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள் அவ்வூர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட சைவக்குருக்கள் ஆவார். இவர் வர்த்தலைவிளானில் தமிழ் தொட்டில் கட்டி தமிழ் புகட்டிய வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையரிடம் குருகுலவாசமாக இருந்து, சைவ சமய நூல்களைப் பயின்று, சைவ சமயக் கல்வியில் புலமை பெற்றார். கணேசையரிடம் பயின்ற சிறப்பால் இவரை ஊர் மக்கள் "கணேசையா" என்றே அழைத்தனர்.



VTV சுப்பிரமணியம்

எமது ஊரைச் சேர்ந்த VTV. சுப்பிரமணியம் அவர்கள் தேவார திருப்பதிகங்களை பண்ணோடு பாடுவதில் நன்கு தேர்ச்சி பெற்றவர். இவரது திறமையைப் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் "ஓதுவார்மூர்த்தி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. இலங்கையில் ஓதுவார்மூர்த்தி பட்டத்தை பெற்ற, முதலாவது சைவப் பெரியார் என்ற பெருமை ஏவுஏ சுப்பிரமணியம் அவர்களையே சாரும். அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் தேவார திருப்பதிகங்களைப் பண்ணோடு பாடுவதில் வல்லவர்கள். குறிப்பாக அவரது மகன் சு. அருள்மணிநாதனுக்கு, இந்திய தருமபுரி ஆதீனம் "ஓதுவார்" பட்டமளித்து கௌரவித்துள்ளது.

# 8


# கலை, கலாச்சாரப் பாரம்பரியம்.

கட்டுவன் ஊரின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் மிக ஆழமானவை. கலாச்சார பாரம்பரியம் என்னும்போது, இயல், இசை, நாடகம், நடனம், நாட்டுக்கூத்து, தெருக்கூத்து, கோலாட்டம் என விரிந்து செல்லும். கட்டுவனூரின் மிகப்பழைமை வாய்ந்த கலை வடிவம் வசந்தன் நாடகம் அல்லது வசந்தன் கோலாட்டமாகும். இதனை ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் இம்மண்ணின் புலவரான விசுவப்புலவர் (1795-1862) என்னும் மரபுவழி வரகவிப்புலவர் இயற்றியதாகக் கூறப்படுகிறது. மேலும் மருதடி விநாயகர் துதி, துறட்டையிட்டி வைரவர் துதி, அலவத்தை வீரபத்திரர் துதி, வயவை (வயாவிளான்) மானம்பராய் விநாயகர் துதி, போன்ற தனிப் பாடல்களையும், ஞானவைரவர் ஊஞ்சல், வீரபத்திரர் திருவூஞ்சல் வள்ளியம்மானை,கதிரைப் பதிகம், போன்ற படைப்புகளையும், வைத்திய, வாகட, சோதிடம் தொடர்பான பல பாடல்களையும் ஓலைச்சுவடியிலே எழுதி வைத்திருந்தார். அவற்றுள் பல பாடல்கள் அழிந்தும், மறைக்கப்பட்டும் காணாமல் போயின. பின்னாளில் அவரது பேரனான இராமு.கதிரித்தம்பி அவற்றைத் தேடி எடுத்துக் கிடைத்தவற்றை, அடுத்த சந்ததியினர் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக வைத்திருந்தார். பின்னர் பண்டிதர் வ.முத்துக்குமாரு அவர்கள் அதனைக் கையெழுத்துப் பிரதி செய்து, அச்சில் பதித்ததால் இன்றும் அவை உயிர்ப்புடன் காணப்படுகின்றன. வசந்தன் நாடகத்திலும் சில பாடல்களைப் பெற முடியவில்லை எனக் கூறப்படுகிறது. வயாவிளானில் வாழ்ந்து வந்த நியாய துரந்தரான வ. இராசநாயகம் அவர்கள் விசுவப்புலவர் இயற்றிய தனிப்பாடல்களைத் தொகுத்து அச்சிட்டு நூலாக 1950 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தார். கட்டுவனூரைச் சேர்ந்த கலாநிதி சிவா தியாகராஜா அவர்கள், தான் எழுதிய “நீ சாகமாட்டாய் ராதா” “என்ற நூலில் வசந்தன் கூத்து தொடர்பாகவும் புலவர் விஸ்வநாதர், அவரது குடும்பம் தொடர்பாகவும் எழுதி, 2001ஆம் ஆண்டு மணிமேகலைப் பிரசுரத்தின் ஊடாக சென்னையில் வெளியிட்டிருந்தார்.



வசந்தன் நாடகம் வழமையாக மயிலிட்டி தெற்கு கட்டுவன் அலவத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிகா சமேத வீரபத்திரர் கோயிலில் இடம்பெறும். இது, கட்டுவனூருக்கே தனித்துவமான ஒரு கலை வடிவமாகும். விவசாயத்தை பிரதான தொழிலாகச் செய்யும் கட்டுவனூர் மக்களுக்கு வீரபத்திரரின் அருட்கடாட்சம் சிறப்பாகவே கிடைக்கப்பெற்றுள்ளது.

விஸ்வப் புலவரின் வம்சாவழி




அதனால் அவர்கள் வசந்தன் கூத்தினை வீரபத்திரர் புகழ் பாடும் கூத்தாகவே ஆடி வருகின்றனர். கடும் வறட்சிக் காலங்களில் மழையை வேண்டியும், நோய்நோடியற்ற சுகமான வாழ்வை வேண்டியும் வீரபத்திரர் மீது பாடி, கோலாட்டம் அடித்து, ஆடப்படுகிறது. இது நாற்றுநடுகை, வெள்ளப்பாய்ச்சல், பள்ளன்தோற்றம்,

திணைப்புனம், அருவிவெட்டல், சூடுமிதித்தல், செல்லப்பிள்ளை, கப்பல்பாட்டு, லேஞ்சிஆட்டம் போன்ற பல பிரிவுகளைக் கொண்டதாகும். இது கோலாட்டமாக ஆரம்பிக்கும்போது, முதலாவது தாளக்கட்டில் குறைவான வேகத்திலும் இரண்டாவது தாளக்கட்டில் இடைநிலை வேகத்திலும் மூன்றாவது தாளக்கட்டில் வேகமாகவும் ஆண்களினால் ஆடப்படும். தனித்துவம் வாய்ந்தது. இது வசந்தன் நாடகம், வசந்தன் கோலாட்டம் வசந்தன் கூத்து என வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும், காப்பு தொடக்கம் மங்கலம் வரை முழு வடிவத்தினைக் கொண்ட ஒரு கலை வடிவமாகும். திருவிழாக் காலங்களில் ஆடப்படும் வசந்தன் கூத்து பக்தியுடன் முறைப்படி ஆலய முன்றலில் ஆடப்படுமாயின் மழைபொழிந்து ஊர் மக்களைக் குளிர்மைப்படுத்தும் சக்தி வாய்ந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கூத்தினை 1958 ஆம் ஆண்டு கொழும்பு, காலி முகத்திடலில், இடம்பெற்ற கலாச்சார விழாவில் அரங்கேற்றி, பாராட்டு, பரிசில்களைப் பெற்றுக் கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்தவர், கூத்துக் கலைஞர் விதானையார் நாகலிங்கம் ஆவார்.

அதன் பின்னர் வசந்தன் கூத்தினை S.K பரராஜசிங்கம், நா.சண்முகலிங்கன் ஆகியோர், மேலும் செழுமைப்படுத்தி, பொங்கல் சிறப்பு நிகழ்ச்சியாக, இலங்கை வானொலி மூலம் வானலையில் தவழவிட்டு, உலகறியச் செய்தனர். பின்னாளில் கட்டுவனைச் சேர்ந்த வைத்தியர் சிதம்பரநாதன் - தர்மபூபதி தம்பதிகளின் புதல்வி காலம் சென்ற திருமதி.கௌசலா ரவிசங்கர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1993 ஆம் ஆண்டு, தனது நுண்கலைமானிப் பட்டப்படிப்பை, பூர்த்தி செய்வதற்கான ஆய்வுக்கு, வசந்தன் நாடகத்தினைத் தெரிவு செய்து, எட்டு அத்தியாயங்கள் கொண்ட, ஆராய்ச்சிக் கட்டுரையினைச் சமர்ப்பித்துப் பெருமை சேர்த்திருந்தார். அதன் ஒலி வடிவத்தினை நாகலிங்கம் மற்றும் குருசாமி ஆகியோரின் துணை கொண்டு இறுவட்டுகளில் பதிப்பித்துமுள்ளார். குருசாமி சுந்தரி என்பவர்கள் இணைந்து தாளக் கட்டுடனும் சுருதிலயம் தவறாமலும் பாடி சிறந்ததொரு கலைவடிவமாக இதனை வெளிக் கொணர்ந்தனர். வசந்தன் கோலாட்டக் கூத்தினை ஆய்வு செய்த திருமதி கௌசலா ரவிசங்கர் தமிழ் தேசிய ஊடக உலகில் பிரசித்தி பெற்ற ஒலி, ஒளி பரப்பாளராக விளங்கி கட்டுவனூர் மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெருமைக்குரியவர்களில் ஒருவர்.



திருமதி கௌசலா ரவிசங்கர்

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம்- தமிழ் (I.B.C.) நிலையத்தின் ஒலிபரப்பாளராகவும், செய்தி வாசிப்பவராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணிபுரிந்தார். தமிழ் தொலைக்காட்சி இணையத்தில் (T.T.N.) சில கலை நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினர்.2002ஆம் ஆண்டு முகமாலையில் ஏப்ரல் மாதம் யாழ் - கண்டி வீதி திறக்கப்பட்டபோது அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம், தமிழ் தொலைக்காட்சி இணையம் என்பவற்றின் ஊடக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருந்தார். தமிழ் தேசிய ஊடக உலகை தனது குரலால் சிறப்பித்து வந்த அவர் 22-11-2013 இல், நோய்வாய்ப்பட்டு பிரித்தானியாவில் இறைவனடி சேர்ந்தார். அண்மையில் (2019) குருசாமியின் மகனும், பாரம்பரிய கலை ஆற்றுகையாளருமான கு. சுகுமார் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டு- ஸ்தாபனம் தமிழ் (I.B.C) நிலையத்தில், ஏறக்குறைய இருபத்தைந்து நிமிடங்கள் பேட்டியளித்ததன் மூலம், வசந்தன் கூத்து உட்பட. கட்டுவன் மண்ணின் கலைகளை உலகறியச் செய்து மேலும் பெருமை சேர்த்துள்ளார்.

நாடகத்துறையைப் பொறுத்தவரையில் 1940 களில் மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய சங்கம் 'லவ குசா' என்ற இசை நாடகத்தை மேடை ஏற்றியது. இதனை நெறிப்படுத்தியவர் குரும்பசிட்டியூர் கே. கே. வி. செல்லையா ஆவர். இவர் பல்கலை வல்லுநர் எனப் பாராட்டப்பட்டவர். குரும்பசிட்டியைச் சேர்ந்த க. பொன்னம்பலம் ஆச்சாரியாரை இசைப் பயிற்சிக்காக தன்னுடன் இணைத்திருந்தார். அவர் விருத்தம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் பாடல்களை முறையாகப் பாடியும், பொருத்தமான இராகங்களை இசைத்தும் நாடகங்களை மெருகூட்டினார். கே.கே. வி.செல்லையா விசேட நாடகங்களைப் போலன்றி அளவாகவே பாடல்களைப் புகுத்தினார். அத்துடன் முன்பு காணப்பட்டது போல, நீட்டியிழுக்கப்பட்ட இசை நாடகப் பண்பினைத் தவிர்த்து துரித நாடக நகர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். பழைய முறைகள் சிலவற்றை தவிர்த்து பொருத்தமானவற்றைப் புகுத்தி நாடகத் துறையில் மாற்றத்தைக் கொண்டுவந்தார். கிராமப்புறங்களில் நாடகத் தரத்தை உயர்த்த நடிகராக, இயக்குனராக, ஒப்பனையாளராக அவர் ஆற்றிய பணி மகத்தானதாகும். அதனால் கட்டுவன், குரும்பசிட்டி கிராமங்களில் மட்டுமின்றி, வலிகாமம் பிரதேசத்திலும் பெரும் வரவேற்பினைப் பெற்றிருந்தார். ஐ.பி துரைரத்தினம், து. ஜெயரத்தினம் போன்ற கல்லூரி அதிபர்களும் அவரது சேவைக்குப் பெருமதிப்பளித்தனர். நாடக அனுபூதிமான் சரவணமுத்துவும் கே.கே. வி செல்லையாவுக்குப் பெரும் ஊக்கமளித்தவராவர். சிங்கப்பூர் பென்சனர், கலைஞர் கட்டுவனூர் சி.கந்தையா அவர்களும் "லவகுசா" இசை நாடகத்தினை மேடை ஏற்றுவதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். அச்சுவேலி பிரபல பாடகர் தம்பிமுத்து பாகவதரிடம் இசை பயின்ற கந்தையாவின் மகன் க. மகேசன் 'லவன்"' ஆகவும், தவராசா என்பவர் 'குசன்' ஆகவும் நடித்துச் சிறப்பித்தனர். மேலும் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான், குரும்பசிட்டி கிராமங்களைச் சேர்ந்த பல இளையோரும் இந்த இசை நாடகத்தில் பங்கு கொண்டனர்.

1959 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று, பாலர் ஞானோதய சங்கத்தின் கலை உடல் வளர்ச்சிக் கழகத்தினால் "மன்னன் மகள்" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தில் க.பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது மகன் சின்னக்கிளி என அழைக்கப்படும் குணரத்தினம், பிரதான பாத்திரமேற்று சிறப்பாக நடித்தார். இவர் திரையிசைப் பாடல்களையும் உயிர்ப்புடன் பாடும் வல்லமை பெற்றவர். இவருடன் இணைந்து, A.V பாலன், மு.வு பாலன், புவன்ராஜ், சிவசேகரம், கோபால்ஐயர், சி.சர்வானந்தன், நா.சண்முகலிங்கன், மு.கணேசானந்தன், இ.பாலச்சந்திரன் போன்ற பலர் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்தனர். சிறந்த நடிகரான அ.கந்தையா கட்டுவனூர் மக்களால் "ஈழத்து சிவாஜி" என அழைக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது. வன்தொண்டன் நாடகத்தில், ஆசிரியர் செல்லத்துரை சிவனாகவும், மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த நா.சண்முகலிங்கன் சுந்தரனாகவும், நடித்து அவ்வூர் மக்கள் மனதில் இடம் பெற்றனர். இக் காலகட்டத்தில் சோக்கிறடீஸ், தக்கன்யாகம், வள்ளி திருமணம் போன்ற பல்வேறு கூத்து நாடகங்களும் இடம் பெற்றன.



நேசபூபதி நாகராஜன்



மாதுசிரோன்மணி வேலாயுதர்



தர்மபூபதி சிதம்பரநாதன்



வே.ஸ்ரீ சண்முகரத்தினம்

*இசைத் துறையிலே நேசபூபதி- நாகராஜன், மாதுசிரோன்மணி, வேலாயுதார், தர்மபூபதி சிதம்பரநாதன், வே ஸ்ரீ சண்முகரத்தினம் ஆகியோர் இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம். எம். தண்டபாணி தேசிகர், வச்சிரவேலு முதலியார், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை ஆகிய இசை மேதைகளிடம் கர்நாடக இசையினைப் பயின்று, சங்கீதபூஷணம் பட்டம், பெற்று கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்தனர். இவர்களுள் தர்மபூபதி சிதம்பரநாதன் வயலின் வாத்திய இசையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கலைஞர் ஆவார். பின்னாளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் பயின்று பட்டம் பெற்றவர்களும், வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்களும் எமது மண்ணின் இசை வளர்ச்சிக்கு உரமூட்டினர். இவற்றுக்கப்பால் இசை ஞானம் கொண்ட பலர் சிறந்த பாடகர்களாக விளங்கினர். எஸ் கே.பரராஜசிங்கம், எஸ்.கே.மகேசன், நா.சண்முகலிங்கம், அனு.வை.நாகராஜன், க.சிதம்பரநாதன், விநாயகமூர்த்தி, செல்வராஜா, பாலராணி, நாகமணி, மணிவண்ணன், தண்ணித்தாழ்வை சேர்ந்த ராஜரத்தினம் போன்றோர்களையும் குறிப்பிடலாம். எஸ். சர்வானந்தம் கண்ணன் கோஷ்டியில் இணைந்து பாடிப் புகழ் பெற்றிருந்தார்.*

# 9

# விளையாட்டுத்துறை.

சைவமும், தமிழும், கலைகளும் செழித்தோங்கிய எமது மண்ணில் விளையாட்டுத்துறையும் உன்னத நிலையில் விளங்கியது. பாலர் ஞானோதய சங்கம் சிறப்பாக செயற்பட்டு வந்தபோதிலும் இளையோர்களின் கருத்துக்களையும் தேவைகளையும் பிரதிபலிக்கும் வகையில் பாலர் ஞானோதய கலை, உடல் வளர்ச்சிக் கழகம், ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அ.நல்லையா, அ.த.நடராஜா த.இராசரத்தினம், பொ.பாலசுப்பிரமணியம் மூ.வேலாயுதம், ப.சிவபாதசுந்தரம் வே.தங்கராஜா, க.சிதம்பரநாதன், வ.ஐயாத்துரை போன்ற பலர் திறமையாக விளையாடி, கழகத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்தனர்.

இந்தக் கழகம் விளையாட்டுப் போட்டிகள் மட்டுமின்றி பேச்சுப்போட்டி,தேவாரப் போட்டி, பெரியோர்களின் நினைவு தினக் கொண்டாட்டம், ஸ்ரீவள்ளி, கண்ணகி போன்ற நாடகங்களையும் நடாத்தியது. இவ்வாறு சிறப்பாக இயங்கி வந்தபோது கழக உறுப்பினர்கள் சிலர் அரச உத்தியோகம் பெற்று வெளியிடங்களுக்குச் செல்லவே, கழக செயற்பாட்டில் தொய்வு நிலை ஏற்பட்டது அத்துடன் ஞானோதய இளைஞர் கழகம், ஆனந்தா விளையாட்டுக் கழகம், ரோயல் விளையாட்டுக் கழகம், புளு டையமன், விளையாட்டுக்கழகம் எனப் பல்வேறு விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கின. அவற்றுக்கிடையே போட்டிகளும் உருவாகின. இத்தகைய நிலை வளர்ச்சிக்குப் பாதகமானது என உணர்ந்த ஆசிரியர் சி.நாகலிங்கம், மற்றும் க.சிதம்பரநாதன், வ.ஜெயராஜசிங்கம், க.வாமதேவன் பொ பாலசுப்பிரமணியம், வ.ஐயாத்துரை போன்றவர்களின் முயற்சியினால், தனித்தனியாக இயங்கிவந்த விளையாட்டுக் கழகங்கள், பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகத்தோடு இணைக்கப்பட்டன.

அதன் பின்னர், 1953 ஆம் ஆண்டு சித்திரை மாத வருடப்பிறப்பைத்

தொடர்ந்து, 16-04-1953ல் முதல் தடவையாக விளையாட்டுப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் என இல்லங்கள் பிரிக்கப்பட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இளையோர் மகிழ்ச்சியுடன் பங்கு பற்றினர். 1950 ஆம் ஆண்டளவில் க.சிதம்பரநாதன் தலைமையில் த.இராசலிங்கம், வ.ஐயாத்துரை, அ.கனகரத்தினம் வ.ஜெயராஜசிங்கம்,ப. குலசிங்கம் ச.விநாயகமூர்த்தி போன்ற பல இளையோர் துடிப்புடன் செயற்பட்டு கழகத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தனர். சிறந்த உதைபந்தாட்ட, கிரிக்கட் வீரர்களைக் கொண்ட அணிகள் காங்கேசன்துறை, குரும்பசிட்டி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருந்த அணிகளுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்தன. வல்லிபுரம் ஆசிரியர் வீட்டுக்கு கிழக்கே தெல்லிப்பளை- வயாவிளான் வீதியை சார்ந்து காணப்பட்ட சிறிய விளையாட்டு திடலில் மாலை வேளைகளில் இளையோர், பெரியோர் இணைந்து கரபந்தாட்டம் விளையாடி மகிழ்ச்சி அடைந்தனர்.



வைத்திலிங்கம் ஜெயராஜசிங்கம்

எமது கிராமத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் ஜெயராஜசிங்கம் அனைத்து விளையாட்டுகளிலும் திறமை மிக்க ஓர் விளையாட்டு வீரனாவார். குறிப்பாக துடுப்பாட்டத்தில் 210 ஓட்டங்களை எடுத்து தொடர்ந்தும் விளையாடிய சாதனையினை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை. எனக் கூறப்படுகிறது. யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் போது, ஈட்டி எறிதலில் யூனியன் கல்லுரி சார்பாக 136 அடி தூரம் ஈட்டி எறிந்து, சாதனை படைத்தார். மேலும், வேட்டையாடுவதில் ஆர்வம் கொண்ட இவர் குறி பார்த்து சுடுவதிலும் வல்லவர். துரதிஷ்டவசமாக வேட்டையாடுவதற்கு வெடிமருந்து தயாரித்துக் கொண்டிருந்த போது எதிர்பாரா விதமாக வெடித்ததில் இருகைகளிலும் சிலவிரல்களை இழந்தார்.

எனினும், இந்தச் சம்பவம் அவரது ஆளுமையில் எவ்வித பாதிப்பையும்

*ஏற்படுத்தவில்லை. "சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ" என்ற பாடல் வரிகள் இவருக்கு, சாலப்பொருந்தும். 1980 களின் ஆரம்பத்தில், இருவர் மிதித்து ஓடும் துவிச்சக்கரவண்டி இலங்கையில் அறிமுகமில்லாத காலத்திலேயே தனது சுய முயற்சியால் அத்தகைய துவிச்சக்கரவண்டியைச் செய்து கட்டுவனூரெங்கும் வலம் வந்து பிரபல்யம் பெற்றவர். அதுமட்டுமின்றி விவசாயத்திலும் சாதனை படைத்தவர். குறிப்பாக 1964 ஆம் ஆண்டு வடமாகாணத்தில், முதன்முதலாக பம்பாய் வெங்காயச் செய்கையை மேற்கொண்டு அதிக விளைச்சலைப் பெற்று, வடபகுதி விவசாயிகளுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கி பாராட்டுகளையும் பெற்று எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்.*

*நாகலிங்கம் அப்பையா, கொழும்பு இரத்தினம் உதைபந்தாட்டக் குழுவில் இணைந்து மலேசியா, பர்மா, பாகிஸ்தான், சிங்கப்பூர், ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளில் விளையாடி வெற்றிக் கிண்ணங்களைப் பெற்று எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். டாக்டர் N. இராஜலிங்கம் இலங்கை பூப்பந்தாட்ட கழகத்தில் இணைந்து இந்தியா, பாகிஸ்தான், மலேசியா போன்ற நாடுகளில் விளையாடிக் கட்டுவனூருக்கு புகழைத் தேடிக்கொடுத்தார். மேலும் திருமேனி மகாலிங்கம், ஏ. பாலசிங்கம், ஏ. பத்மநாதன், குலசிங்கம், விநாயகமூர்த்தி, மு. துரைராஜா, கந்தையா வரதராசன், சங்கரப்பிள்ளை சிவநேசன், மு. சிவதாசன், N. மகாலிங்கம், A. கனகசபை, A. சிவானந்தசுந்தரம் போன்ற இன்னும் பல விளையாட்டு வீரர்களை எமது ஊர் தன்னகத்தே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# 10

# நிலவளமும் நீர்வளமும்

கட்டுவனூர் வனப்புக்கும் செழிப்புக்கும் மூலகாரணம் எமது கிராமத்தின் பொருளாதார வளமாகும். இங்கு ஆறுகள் இல்லை, குளங்கள் இல்லை. ஆயினும் அமுத சுரபிபோல் அள்ள அள்ள ஊறிவரும் சுத்தமான, என்றும் வற்றாத தரைக்கீழ் நீரும், குடாநாட்டிலேயே செழிப்பான மண் எனக்கூறப்படும் செம்மண்ணும் எம்மூரை செழுமைப்படுத்தின. சாமி கொடுக்க மறுத்தாலும் அப்பூமி கொடுக்க மறுத்ததில்லை. கொள்வார் இன்மையால், கொடுப்பாரும் இல்லை, இரப்பார் இன்மையால், ஈவாரும் இல்லை, என்ற கம்பன் கண்ட கோசல நாட்டுக்கு நிகராக அவ்வூர் காட்சியளித்தது.

கட்டுவனூர் கிராமத்தின் பிரதான பொருளாதார வளம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்குள்ள கிணறுகள் முப்பது அடிக்கு மேற்பட்ட ஆழத்தையும், பத்து முதல் பன்னிரண்டு அடி விட்டத்தையும் கொண்டன. பெரும் விவசாயப் பிரதேசத்துக்கு நீர் பாய்ச்சக் கூடிய நீர் வளத்தையும் உடையன. ஆகவே நீர் இறைக்கும் போது பட்டை பிடிக்க ஒருவர், துலாமிதிக்க இருவர், நீர் பாய்ச்ச ஒருவர் என நால்வர் தேவைப்பட்டனர். அதனால் ஒருவருக்கொருவர் உதவியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். உடல் உழைப்பால் சுகதேகிகளாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் காணப்பட்டனர். காலப்போக்கில் எருதுகளைப் பயன்படுத்தி நீர் இறைத்தபோது அவை "சூத்திரக் கிணறுகள்" என அழைக்கப்பட்டன. பின்னாளில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் பாவனைக்கு வந்ததோடு, மரபு ரீதியான விவசாயமுறை முடிவுக்கு வந்து நவீன மயமான விவசாயமுறை அறிமுகமானது.

எமது மண்ணின் பிரதான பயிர்ச்செய்கையாக மிளகாய், வெங்காயம், மரவள்ளிகிழங்கு என்பன விளைவிக்கப்பட்டு வந்தன. கத்தரி, முருங்கை, புடலங்காய், பாவற்காய், கீரை போன்ற காய்கறி வகைகளும், இராசவள்ளி,

கரணைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டன. மா, பலா, வாழை ஆகிய முக்கனி மரங்களும் பெருமளவில் காணப்பட்டன. பணப் பயிர்ச்செய்கையைப் பொறுத்தமட்டில், புகையிலை முதலிடம் பெற்றது. விவாசாய பயிர் செய்கைக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக அண்ணா விவசாயப் பண்ணையை (Anna Farm) குறிப்பிடலாம். இணுவில் "அண்ணா இன்டஸ்ற்றீஸ்" நிறுவனரும், உரிமையாளருமான பொன். நடராஜா



பொன்.நடராஜா

யாழ்ப்பாணத்தில் பெயர் பெற்ற வர்த்தகராவார். சமூக ஆர்வலரும் மனிதநேயம் மிக்கவருமான இவர் கட்டுவன் இரண்டாம் சந்திக்குக் கிழக்கே, ஏறக்குறைய ஒரு கிலோமீட்டர், தூரத்தில் கட்டுவன் - வயாவிளான் பிரதான வீதிக்குத் தெற்கே, 1980 ஆம் ஆண்டளவில் இந்த விவசாயப் பண்ணையை ஆரம்பித்தார். திரு. திருமதி முத்துலிங்கம் மற்றும் தெற்சணாமூர்த்தி ஆகியோரின் காணிகளுடன் பதினெட்டுப் பரப்புக் காணியை வாங்கி இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு காய்கறி வகைகள் விளைவிக்கப்பட்ட போதிலும், திராட்சைப் பழச்செய்கையே முதலிடம் பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்திலே திராட்சைப் பழச்செய்கைக்கு ஒரு தனி வரலாறு உண்டு. அதன் கதாநாயகன், பருத்தித்துறைத் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் அவர்கள். 1960 களின் நடுப்பகுதியில் இஸ்ரேல் நாட்டின் அரசியல் பொருளாதார அமைப்பை ஆய்வு செய்வதற்காக, இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர்களின் குழு ஒன்று, அந்நாட்டுக்குச் சென்றிருந்தது. அக்குழுவில் க.துரைரத்தினமும் இடம்பெற்றிருந்தார். யாழ்ப்பாணத்தின் புவியியல் சூழல் நிலைமைகளைக் கொண்டிருந்த இஸ்ரேலில் நன்கு செழித்து வளர்ந்திருந்த திராட்சைக் கொடிகளைப் பார்த்ததும் அவற்றை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்ய ஆர்வம் கொண்டார். எனவே அங்குள்ள விவசாய, பொருளாதார அமைச்சுடன்

தொடர்பு கொண்டு திராட்சைப்பழச் செய்கை தொடர்பான நுட்பங்களையும் அறிந்து கொண்டார். அங்கிருந்து திரும்பும்போது அரச அனுமதியுடன் திராட்சைக் கொடித் துண்டங்களையும் கொண்டு வந்தார். பலர் பரிகசித்த போதிலும் அதனை அவர் பொருட்படுத்தவில்லை. முதன்முதலாக தொண்டமானாற்றில் திராட்சைக் கொடித் துண்டங்களை நடுகை செய்து அறிமுகப்படுத்தினார். பயிர்ச்செய்கை முறைகள், கத்தரித்தல், பசளையிடுதல், பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தினார். அதன்மூலம் அமோக விளைச்சல் கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் திராட்சைப்பழச் செய்கை பெருவெற்றி அளித்தது. இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் திராட்சைப்பழச் செய்கை விரிவடைந்தது. 1970 ஆம் ஆண்டில் விவசாய திணைக்களத்தின் மாதாந்த வெளியீடான "கமத்தொழில் விளக்கம்" என்ற சஞ்சிகை க. துரைரத்தினம் அவர்களின் முயற்சியைப் பாராட்டி ஆசிரியர் தலையங்கத்தை எழுதியதுடன் வாழ்த்தும் தெரிவித்திருந்தது. யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த திராட்சைப் பழச்செய்கையை பொன். நடராஜா அவர்கள் கட்டுவன் அண்ணா விவசாயப் பண்ணையிலும் முதன்மைப் பழச்செய்கையாக அறிமுகம் செய்தார். சுற்றாடலில் வாழ்ந்த பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது. இதன் பொறுப்பாளராக சிவயோகவல்லி தாமோதரம்பிள்ளை பணியாற்றி வந்தார்.

போர்ச் சூழல் உக்கிரமடையவே, சிறப்பாக இயங்கிவந்த இப்பண்ணையைப் பார்ப்பதற்காக பலாலி இராணுவமுகாம் பொறுப்பாளர்களான வணசிங்காவும் ஜெயரட்னாவும் வந்திருந்தனர். பண்ணையைப் பார்த்துப் பெருமிதம் கொண்ட அவர்கள், மறுபுறம் "உங்கள் பாதுகாப்புக் காரணமாக ஒரு வாரகால அவகாசத்தில் பண்ணையை அப்புறப்படுத்த வேண்டும், இல்லையேல் நாங்கள் பொறுப்பாக இருக்க முடியாது" என எச்சரிக்கை விடுத்துச் சென்றனர். அவர்கள் குறிப்பிட்டது போலவே ஓரிரு வாரங்களுக்குள் அப்பண்ணை முற்றாக அழித்தொழிக்கப்பட்டது.

ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இக் கிராமப் பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது, என்பதை வசந்தன் கூத்துக்குரிய பாடல்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. குறிப்பாக வர்த்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ள குளத்தை சூழவுள்ள பகுதிகளில் நெற்சாகுபடி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதற்கு ஆதாரமாக வயல்களில் வேலை செய்யும் சமூகத்தினரின் குடியிருப்புகள் அங்கு காணப்பட்டமையும் நோக்கற்பாலது. எனவே வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பண்பாட்டு கோலத்தினை கொண்ட கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் பிரதேசங்கள் பின்னாளில் தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் பச்சைப்பசேலென பசுமையாகக் காட்சியளித்தன.


கட்டுவனூர் சிறு கிராமப் பிரதேசமாக விளங்கிய போதிலும் அதன் பௌதீக, நிலப் பண்புக்கேற்ப தொழில் முயற்சிகளும் காணப்பட்டன. குறிப்பாக மின்சாரம்

மூலம் கல் உடைக்கும் நான்கு தொழில் நிலையங்கள் காணப்பட்டன. சுண்ணக் கற்பாறைகள் வெளியரும்பிக் காணப்படுமிடத்து அவற்றை அகழ்ந்து எடுத்து பயிர் செய்கைக்கு ஏற்ப நிலத்தை பதப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதேவேளை அகழ்ந்து எடுக்கப்பட்ட கற்பாறைகள் வெவ்வேறு அளவுகளில் உடைக்கப்பட்டு கட்டட கட்டுமானப் பணிகளுக்கும், பாதைகளை செப்பனிடவும், மற்றும் வீட்டு தேவைகளுக்கும் பயன்படுத்தப் பட்டன. கல் உடைக்கும் போது ஏற்படும் தூசிப்படலம் மக்களின் சுகாதார வாழ்வுக்கு பாதகமாக அமைவதால் அவை மக்கள் குடியிருப்புகள் அற்ற இடத்திலேயே நிறுவப்பட்டன. எமது கிராமத்தின் பிரபல வர்த்தகரான பத்தாயிரம் சின்னத்துரை என அழைக்கப்படும் இ. சின்னத்துரையின் "இலட்சுமி இண்டஸ்ரீஸ்" எனப் பெயர் கொண்ட கல்லுடைக்கும் நிலையம் (கிறஷர்) வர்த்தலைவிளானுக்கு மேற்காக காணப்பட்ட வெளியில் பிரதான வீதிக்கு அருகே இயங்கி வந்தது. 19.11.1984இல் போராளிகள் மேற்படி கல்லுடைக்கும் நிலையத்திலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்தி, தெல்லிப்பளை - அச்சுவேலி பிரதான பாதையில், இராணுவ கவசவாகன தொடரணியைக் கண்ணிவெடி மூலம் தாக்கியதைத் தொடர்ந்து, அது முற்றாகச் செயலிழந்தது. ஏறக்குறைய பத்து அடி விட்டத்தைக் கொண்ட குழியை ஏற்படுத்திய இத்தாக்குதலில் பிரிகேடியர் ஆரியப்பெருமா உட்பட எட்டுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். மற்றொரு கல்லுடைக்கும் நிலையம் கட்டுவன் சந்திக்கு கிழக்கே சாமி சதாசிவம் என்பவரால் நடாத்தப்பட்டு வந்தது. மேலும் இரு கல்லுடைக்கும் இயந்திரங்கள் செயற்பட்டு வந்தன. பாலர் ஞானோதய வித்தியாசாலைக்கு அருகாமையில் ஓர் கைத்தறி நெசவுசாலை இயங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு வேட்டி, சேலைகள் நெய்யப்பட்டு வந்தன. தொழில் வாய்ப்பினை வழங்கக்கூடிய தொழில் நிலையங்கள் எதுவும் பெரிதாகக் கட்டுவனூரில் இருக்கவில்லை. ஆனால், அச்சுவேலியில் இருந்த கைத்தொழில் பேட்டையில் கட்டுவனூர் இளையோர் பலர் வேலை வாய்ப்பினை பெறும் வசதியிருந்தது.

# 11

# போக்குவரத்துச் சாதனங்களும், சேவைகளும்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு போக்குவரத்துப் பாதைகளும் போக்குவரத்து சேவைகளும் மிகவும் இன்றியமையாதனவாகும். கட்டுவனூர் ஊடான போக்குவரத்துப் பாதைகள் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு பழமை வாய்ந்தவை. 16 ஆம் நூற்றாண்டில் போத்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சிசெய்த போதுதான் காணிகளைப் பதிவுசெய்யும் முறையை அறிமுகப்படுத்தினர். தமது ஆட்சியதிகாரத்தை நிலை நிறுத்தவும் கிறீஸ்தவ மதத்தைப் பரப்பவும் தேவாலயங்களை நிறுவி, அவற்றை மையமாக வைத்து காணிகளின் எல்லைகளை வகுத்துக் "கோயில்பற்று" என அழைத்தனர். இவ்வாறு வலிகாமம் பகுதியை மல்லாகம் கோயில்பற்று, உடுவில் கோயில்பற்று, மயிலிட்டி கோயில்பற்று, மானிப்பாய் கோயில்பற்று, வட்டுக்கோட்டை கோயில்பற்று, பண்டத்தரிப்பு கோயில்பற்று, தெல்லிப்பழை கோயில்பற்று, அச்சுவேலி கோயில்பற்று ஆகிய எட்டுக் கோயில்பற்றுகளாக உருவாக்கினர். பின்னர் அவற்றை இணைக்கும் வகையில் பாதைகளையும் அமைத்தனர்.அவ்வாறே மல்லாகம் கோயில்பற்று தேவாலயத்தையும் மயிலிட்டி கோயில்பற்று தேவாலயத்தையும் இணைக்கும் வகையில், மல்லாகம் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி 150 யார் சென்று பின்னர் வடகீழ் திசையாகத் திரும்பி கட்டுவனில் கிழக்கு மேற்காகச் செல்லும் நெடுஞ்சாலையை சந்தித்து (கட்டுவனின் முதலாவது சந்தி) கிழக்கே திரும்பி நெடுஞ்சாலைவழியாக ஏறக்குறைய 150 யார் தூரம் சென்று, பின் வடக்கே திரும்பி (கட்டுவனின் இரண்டாவது சந்தி) மயிலிட்டி வரை அமைக்கப்பட்டது. அதுபோலவே தெல்லிப்பளை கோயில்பற்று தேவாலயத்தையும் அச்சுவேலி கோயில்பற்று தேவாலயத்தையும் இணைக்கும் வகையில் தெல்லிப்பளையிலிருந்து அச்சுவேலி வரை கட்டுவன் ஊடாக பாதை அமைக்கப்பட்டது. இதன் மூலம் போத்துக்கீசர் காலத்திலிருந்தே கட்டுவனை ஊடறுத்து வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் செல்லும் பாதைகள் பாவனையில் இருந்தமை தெளிவாகிறது.




அக்காலகட்டத்தில் மக்கள் நடந்தும், மாட்டு வண்டிகளிலும் பிரயாணம் செய்தனர் அதற்கேற்ற வகையில் கட்டுவனிலிருந்த இலந்தைக் காடுகளையும் பற்றைக் காடுகளையும் அழித்து கற்களைப் பரப்பி பாதைகளை அமைத்தனர்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போக்குவரத்து வாகனங்கள் அதிகரிக்கவே பாதைகளும் செப்பனிடப்பட்டன. பின்னாளில் யாழ். பஸ் டிப்போவும், பருத்தித்துறை பஸ் டிப்போவும் கட்டுவன் ஊடாக பொதுப் போக்குவரத்து சேவையினை நடத்தின. யாழ்ப்பாண பஸ் டிப்போவினால், யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நெடுஞ்சாலை வழியாக 769ஆம் இலக்க பஸ் வண்டி தெல்லிப்பளை வரை வந்து கிழக்கு நோக்கித்திரும்பி கட்டுவன் வரை சேவையில் ஈடுபட்டது. அடுத்த சேவை பலாலி வீதிவழியாக 764 இலக்க பஸ் வண்டி வயாவிளான் வரை வந்து மேற்கு நோக்கித் திரும்பி கட்டுவன் ஊடாக தெல்லிப்பளை வரை நடைபெற்றது. இன்னுமொரு சேவை காங்கேசன்துறை நெடுஞ்சாலை வழியாக 799ஆம் இலக்க பஸ் வண்டி மல்லாகம் சந்தியில் கிழக்கு நோக்கித் திரும்பி, பின் வடகிழக்காகப் பயணித்து கட்டுவன் முதலாவது சந்தியை அடைந்து, கிழக்கு நோக்கித் திரும்பி இரண்டாவது சந்தியில் வடக்காகத் திரும்பி மயிலிட்டி கரை வரை இடம் பெற்றது. கட்டுவனைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தசாமி என்பவர் நீண்டகாலம் சாரதியாக இச்சேவையில் பணியாற்றினார். எம்மூரைச் சேர்ந்த முருகேசு, இளையதம்பி, பொன்னையா, நாகலிங்கம் போன்றவர்களும் இலங்கைப் போக்குவரத்து சபையில் பணியாற்றினர்,


வ. கந்தசாமி


சி. அருளம்பலம்

பருத்தித்துறை பஸ் டிப்போவினால், பருத்தித்துறையிலிருந்து மூளாய் வரை 773ஆம் இலக்க பஸ் சேவை கட்டுவன் ஊடாக நடத்தப்பட்டது. மற்றும் அச்சுவேலி - சங்கானை, அச்சுவேலி - சுண்ணாகம் பஸ் சேவைகளும் கட்டுவன் சந்தி ஊடக நடைபெற்றன.

விவசாயப் பிரதேசமான கட்டுவன் யாழ்ப்பாண குடாநாட்டின் சந்தைப் பட்டினங்களான சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, அச்சுவேலி, நெல்லியடி போன்றவற்றோடு கற்பாதைகளால் இணைக்கப்பட்டு இருந்தமை அதன் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்தது. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யவும் தமக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து கொண்டுவரவும் இலகுவாயிற்று. கட்டுவனூர் மாணவர்கள் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்கவும் வசதியாயிற்று.

தனியார் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் கட்டுவன் துரையப்பா (துரையர்) குறிப்பிடத்தக்கவர். நீண்ட காலமாக மோட்டார் வண்டி வைத்திருந்து கட்டுவனூர் மக்களுக்குப் பணியாற்றியவர். அவசர தேவைகளின் போதும், பொது போக்குவரத்து சேவை அற்ற இரவு வேளைகளிலும் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்தவர். மகாஜன, யூனியன் கல்லூரிகளில் படித்த கட்டுவனூர் மாணவிகளுக்குப் போக்குவரத்துச் சேவையையும் வழங்கினார். இவர் உள்ளூர் சேவையில் மட்டுமின்றி கண்டி, மாத்தளை போன்ற வெளி மாவட்டங்களுக்கும் பயணிகளை அழைத்துச் சென்றுள்ளார். பின்னாளில் இவரது மகன் பத்மநாதன் (பப்பன்) தந்தையுடன் சேர்ந்து பணி புரிந்தார். மற்றும் அருளம்பலம், சிவநேசன், கதிரவேலு, மணியம், சின்னப்பு, சின்னப்பொடி, குஞ்சன், தம்பிஐயா, சுப்பையா, வேலுப்பிள்ளை கந்தையா, போன்றவர்களும் மோட்டார் வண்டி வைத்திருந்து

*கட்டுவனூர் மக்களின் போக்குவரத்துத் தேவையினைப் பூர்த்தி செய்தனர். மேற்கே ஏறக்குறைய இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் தெல்லிப்பளைப் புகையிரத நிலையம் இலங்கையின் பிறபாகங்களுக்கு இலகுவாகச் சென்று வர உதவுகிறது. கிழக்கே ஏறக்குறைய ஒரு கிலோமீட்டர் துரத்திலிருக்கும் பலாலி விமான நிலையம் கொழும்பு, சென்னை போன்ற இடங்களுக்கு விரைவாகச் சென்று வர வாய்ப்பாக அமைந்தது. இவ்வாறு கட்டுவனூர் பிற நகரங்களுடன் பாதைகளால் இணைக்கப்பட்டும், போக்குவரத்து சேவைகளால் நிறைவுபெற்றும் உன்னத நிலையில் இருந்தது.*

# 12

# மயிலிட்டி கிராமசபை

நிர்வாக ரீதியாக கட்டுவனூரைச் சேர்ந்த பலர், மயிலிட்டி கிராமசபையில் இணைந்து எமதூருக்கும், அயற்கிராமங்களுக்கும் பணியாற்றியுள்ளனர். மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த சமாதான நீதவான் சின்னத்தம்பி.அருணாசலம், மயிலிட்டி கிராமசபைத் தலைவராகவும், கட்டுவனைச் சேர்ந்த சின்னத்தம்பி இராஜரத்தினம், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராகவும், மயிலிட்டி கிராமசபை விசேட ஆணையாளராகவும் பணிபுரிந்தனர். திருமதி.அழகம்மா சுந்தரம்பிள்ளை, கந்தவனம் பொன்னம்பலம், ஆகியோர் சபை உறுப்பினர்களாக இருந்து கட்டுவனூருக்கு அரும்பணியாற்றினர். பின்னாளில் 16 ஆம் வட்டார, உறுப்பினராக சுந்தரி. குலோத்துங்கனும், 7 ஆம் வட்டார உறுப்பினராக சிவநேசனும் சபைப் பணிகளில் ஈடுபட்டனர். பூ.சுநடராஜா அவர்கள் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டி ஆகிய பகுதிகள் மின்சார விளக்குகளினால் ஒளி பெற்றன. பதவி வழியாக மின்சாரப் பிரிவில் த.து.கலியுகவரதன் நா.சாந்தலிங்கம் ஆகியோர் பணிபுரிந்தனர்.



மயிலிட்டி கிராமசபை நூலகர் வே.வித்தியானந்தன் 1981-1986

மயிலிட்டி கிராமசபை தொடங்கிய காலம் முதல், நீண்டகாலமாக, அதற்கென ஒரு நூலகம் இருக்கவில்லை. 1979 ஆம் ஆண்டு வி. எம் ஜோசப் அவர்கள் ஆணையாளராகப் பணியாற்றிய போது, வயாவிளான் சந்திக்குத் தென்மேற்குப் பகுதியில், பலாலி வீதிக்கு அருகே, 500 புத்தகங்களுடன், ஒரு நூலகம் திறக்கப்பட்டு அக்குறை நீக்கப்பட்டது. அதன் முதலாவது நூலகப் பொறுப்பாளராக வே.விவேகானந்தன் நியமிக்கப்பட்டார். இவர் இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விசேட நூலகப் பொறுப்பாளராகக் கொழும்பில் பதவியேற்றதையடுத்து, 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் வே.வித்தியானந்தன் நூலகப் பொறுப்பாளராகப் பதவியேற்றார். யுத்தம் உக்கிரம் அடையவே 1986 ஆம் ஆண்டு நூலகம் மூடப்பட்டது நூலகர் வே. வித்தியானந்தன் நானாட்டான் கிராமசபை நூலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். போருக்கு முன்னர் நூலகத்திற்கருகே இருந்த ஆயுள்வேத வைத்திய நிலையம், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்கான வைத்திய நிலையம் என்பன செயற்பட்டு வந்தன. ஆயுள்வேத வைத்தியராக க.கனகலிங்கமும், உதவியாளராக ஏழாலையைச் சேர்ந்த கே.பொன்னையாவும் பணியாற்றினர். அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் அண்ணா விவசாயப் பண்ணைக்குக் கிழக்கேயும் ஒரு கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்கான வைத்திய, பராமரிப்பு நிலையமும், செயற்பட்டு வந்தது இது குரும்பசிட்டி ஈழகேசரி நா.பொன்னையா மயிலிட்டி கிராமாட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றிய போது, அரசாங்கத்திடம் இருந்து எழாயிரம் ரூபா பெறப்பட்டு 02.01.1950 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, அதேயாண்டு மத்தியில், அப்போது சுகாதார, உள்ளூராட்சி அமைச்சரான எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகாவால் திறந்து வைக்கப்பட்டது. பலாலி விமான நிலையம், மயிலிட்டி கிராமசபை எல்லைக்குள் இருப்பதனால், வடமாகாணத்துக்கு விமான மூலம் விஜயம் செய்யும் அரசியல் தலைவர்களையும், பிற முக்கிய பிரமுகர்களையும் வரவேற்கும் பொறுப்பு மயிலிட்டி கிராமசபைத் தலைவருடையதாக இருந்தது. அதனால் பண்டாரநாயகாவை அப்போதைய மயிலிட்டி கிராமசபைத் தலைவராக இருந்த குரும்பசிட்டி ஈழகேசரி நா. பொன்னையா விமான நிலையத்தில் வரவேற்றார். இந்த மரபு நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தது.

உள்ளூர் கிராமங்களுக் கிடையிலான போக்குவரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒழுங்கைகள், கால்வாய்கள் என்பன, குரும்பசிட்டி, ஈழகேசரி பொன்னையா அவர்கள் மயிலிட்டி கிராமசபைத் தலைவராகப் பணிபுரிந்தபோது திருத்தியும், புதுக்கியும் சீர்திருத்தப்பட்டன. கட்டுவன் இரண்டாவது சந்தியில், கனகசபை கடைத் தொகுதிக்கு அருகாக வவுணடத்தம்பை வீதியும், கட்டுவன் - வயாவிளான் பிரதான வீதியில், குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மார் வைத்திய பராமரிப்பு நிலையத்திகு அருகாக மாயெளு வீதியும் கட்டுவனூரைக் குரும்பசிடியுடன் இணைத்தன.

கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் ஆகிய முக்கிராமங்களையும் இணைக்கும் இரண்டரை மைல் நீளமான, பன்னிரண்டடி அகலமான, ஒழுங்கையை இருபத்தினாங்கு அடியாக அகல்வித்து, பெரும் போக்குவரத்துத் தெருவாக மாற்றும் முயற்சி 1947 ஆம் ஆரம்பமானது. அரச உதவியுடன் கல்பரப்பி, தார் போட்டு 1958 ஆம் ஆண்டிலேயே நிறைவு பெற்றது. அப்பொழுது நா. பொன்னையா இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்து விட்டார். எனினும் அவரது தன்னலமற்ற சேவையை மறவாத மயிலிட்டி கிராமசபை உறுப்பினர்கள் அத்தெருவுக்கு, "ஈழகேசரி பொன்னையா வீதி" எனப் பெயரிட்டனர். இத்தகைய உள்ளூர் பாதைகளின் புனரமைப்பு முக்கிராமங்களுக்கும் இடையிலான போக்குவரத்தினை, இலகுவாக்கியதோடு நெருங்கிய தொடர்பினையும் ஏற்படுத்தின.

# 13

# அரச, தனியார் சமூக சேவைகள்

கட்டுவன் சந்தியில் சங்கக் கடைக்கு அருகே ஒரு வைத்திய நிலையமும், மருந்தகமும் மருத்துவ சேவையினை வழங்கி வந்தன. இங்கு பல்வேறு வைத்தியர்கள் பணியாற்றி வந்தனர் எனினும், வர்த்தலைவிளானைச் சேர்ந்த வைத்தியர் சிவஞானசுந்தரம் வைத்தியராகப் பணியாற்றி கட்டுவன் மக்கள் மனதில் இடம்பெற்றார்.

கட்டுவன் சந்தியில் 1928 ஆம் ஆண்டு பாலர் ஞானோதய சங்கத்தின் முயற்சியால் ஒரு தபால் பெட்டி தபால் திணைக்களத்தால் வைக்கப்பட்டது. பின்னாளில், அச்சந்தியிலிருந்து, மல்லாகம் நோக்கிச் செல்லும் பாதையில், ஏறக்குறைய அரைக் கிலோமீட்டர் தூரத்தில் கட்டுவன் உப தபாலகமும் திறக்கப்பட்டது. இது, கடிதத் தொடர்பான சேவைகளைக் கட்டுவனூர் மக்களுக்கு வழங்கி வந்தது. ஈழ விடுதலைப் போர், ஆரம்ப கட்டத்தில் இருந்தபோது, ஓய்வூதியம் பெறுபவர்கள் தெல்லிப்பளை தபால் நிலையத்திற்குப் போகாது இங்கு சென்று ஓய்வூதியம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டது.



கட்டுவன் உப தபாலக அதிபர், சிவபாக்கியம்

*கட்டுவன் உபதபாலகத்தின் முதலாவது தபால் அதிபராக, சீனிவாசகம் தாமோதரம்பிள்ளை பணியாற்றினார். பின்னர் காரைநகருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். பின்னாளில் நீண்டகாலம் சிவபாக்கியம் என்பவர் பணியாற்றினார். போர் தொடக்கி கட்டுவனூர் முடக்க நிலைக்கு வரும் வரை இவர் பணி புரிந்தார். கட்டுவனூர் கடைசி உப தபால் அதிபரும் இவரே*

*பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத் தலைவராக் கடமையாற்றிய சிவபாலன் அவர்கள், கட்டுவனில் தங்கியிருந்த போது, கட்டுவனூர் இளையோரை ஒன்றிணைத்துப் பல சிரமதானப் பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக கட்டுவன் இரண்டாம் சந்திக்கு அருகே, வைரவ கோயிலைக் கடந்ததும் மயிலிட்டிக்குச் செல்லும் வீதிக் கரையோரமாக இருந்த கால்வாயை துப்பரவாக்கினார். இதன் மூலம் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்காது, வழிந்தோடியது. நுளம்புத் தொல்லையும் குறைந்தது.*

*1983 ஆம் ஆண்டு இறுதியில், வே. விவேகானந்தன், இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், காங்கேசன்துறை தொகுதி இளைஞர் சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். இவர் பாலர் ஞானோதய வித்தியாசாலை அதிபர் அனு. வை நாகராஜன், முன்னாள் அதிபர் திரு சி. நாகலிங்கம் ஆகியோரின் உதவியுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கட்டுவன், மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான், பகுதிகளுக்குரிய இளைஞர் கழகத்தை ஆரம்பித்தார். இதன் ஆரம்பக் கூட்டம், பாலர் ஞானோதய வித்தியாசாலையில் நடைபெற்றது. மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த குகநேசன் தாமோதரம்பிள்ளை தலைவராகவும் வர்த்தலைவிளானைச் சேர்ந்த உதயகுமார் சிவப்பிரகாசம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இக் கழகம் இளையோர் நலம் சார்ந்த பல்வேறு பணிகளிலும், கிராம முன்னேற்றம் தொடர்பான சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டது.*



(1984 ஆம் ஆண்டு, மகளிர் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு காங்கேசன்துறை இளைஞர் சேவை உத்தியோகத்தர் க.முருகையா அவர்கள் சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கினார். அருகில் நிற்பவர் இளைஞர் கழகத் தலைவர் தா. குகநேசன் அவர்கள்)

1984 ஆம் ஆண்டு, இக் கழகம், கட்டுவனின் இரண்டாம் சந்திக்கு அருகாமையில் (கனகசபை கடைக்கு எதிரே) அமைந்திருந்த துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலய வெளி வீதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியை மேற்கொண்டது. அப்போது கட்டுவன் சந்திக்குக் கிழக்கே கல்லுடைக்கும் இயந்திரத் தொழிலை ஆரம்பித்து நடத்திவந்த அதன் உரிமையாளர் சாமி சதாசிவம் அவர்கள் மூன்று லொறிகளில் கிரஷர் கற்துகள் இலவசமாகத் கொடுத்து உதவினார். இவர் சைவ சமயத்தின் மீது அளவிலாப் பற்றும் சேவை மனப்பான்மை நிறைந்த சிறந்த வர்த்தகர். பின்னாளில் போராளிக் குழுக்களால் அவர் கொல்லப்பட்டமை துரதிஷ்டமாகும்.

வர்த்தலைவிளான், அமெரிக்க மிசன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், திருமதி குகமணி மாணிக்கவாசகர் அவர்களின் உதவியுடனும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் அணியின் ஆதரவுடனும் மகளிர் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. வர்த்தலைவிளானில் கட்டுவன், மயிலிட்டிதெற்கு, வர்த்தலைவிளான், குரும்பசிட்டி பகுதிகளைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட மகளிரும் தெல்லிப்பளையில் மல்லாகம், மாவிட்டபுரம் அம்பனை ஆகிய இடங்களைச்சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட மகளிரும் பங்குபற்றினர். தையல், கைப்பணிப் பொருட்கள் செய்தல், பின்னல் வேலை போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சி நிறைவடைந்த வேளை, அப்போது காங்கேசன்துறைத் தொகுதி இளஞர் சேவை உத்தியோகத்தராகப் பணியாற்றிய திரு.க.முருகையா அவர்கள், பயிற்சியை நிறைவு செய்த மகளிருக்குச் சான்றிதளும், பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவித்தார். வடக்குப் புன்னாலைக் கட்டுவன் ஊரைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் யூனியன் கல்லூரியின் பழைய மாணவராவார்.

1984 ஆம் ஆண்டு ஆரம்பத்தில், ஒரு கலை நிகழ்ச்சியை இக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. அது பாலர் ஞானோதய வித்தியாசாலையில், நடைபெற்றது. மல்லாகம் கிராம முன்னேற்ற சங்கத் தலைவராக விளங்கிய திரு.சு.பாஸ்கரன் இரு நடன நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து உதவி புரிந்தார். ஊரெழு சனசமூக நிலையத்தினரால் இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இளைஞர் கழகத் தலைவர் தா.குகநேசன், தேசிய இளைஞர் சேவை உத்தியோகத்தர் வே விவேகானந்தன் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன. சிறப்பு விருந்தினராக, மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த, அப்போது, கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை

*அதிகாரியாகக் கடமையாற்றிய சி. தர்மசீலன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கட்டுவனூர் மக்களினதும், சமூகநலன் விரும்பிகளினதும் ஆதரவுடன் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.*


*இக்கழகத்தினால் இளையோருக்கான கலை, இலக்கியம், சுகாதாரம் போன்ற துறைகளில் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. சண்முகலிங்கம், வைத்தியர்.எஸ்.சாந்தகுமார் போன்றவர்கள் கருத்தரங்குகளை நடாத்தினர்.*

*வர்த்தலைவிளான், மருதடிப் பிள்ளையார் கோயில் முன்பாக உள்ள குளத்தை ஆழமாக்கும் முயற்சிக்கு, திட்டமிடப்பட்ட போதிலும் அது நிறைவேறவில்லை.*

# 14

# கட்டுவனூரைச் செதுக்கிய சிற்பிகள்

## அம்பலம் பொன்னையா



*கட்டுவனூர் அம்பலம்-பார்வதி தம்பதிகளின் ஐந்து மகன்களில் இளைய மகனாகப் பொன்னையா அவர்கள் பிறந்தார். இவர் கட்டுவன், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையின் ஆசிரியரும் அதன் முதலாவது அதிபருமாவர்.*

*மாணவர்களின் குடிநீர் தேவையின் அவசியத்தை உணர்ந்து பாடசாலைகளில் கிணறுகளை சமூகத்தொண்டாக வெட்டுவித்தார். இவர் வாழ்ந்த வீடு கட்டுவனூரில் மிகப் பழமை வாய்ந்த கல் வீடாகும். கட்டுவனூரில் முதன் முதலாகக் கட்டப்பட்ட கல்வீடு எனக் கூறினும் மிகையாகாது. இதனைப் பொன்னையா வாத்தியார் வீடு என அவ்வூர் மக்கள் அழைத்து வந்தனர். மோருக்கும் பழங்களுக்கும் குறைவில்லாத இவ்விடத்தில் மாலைநேரங்களில் அயலூர் பண்டிதர்களும் கூடி உசாவி இலக்கிய விவாதம் செய்யுமிடமாகவும் மிளிர்ந்தது.*

கால்நடைகளும் தாகத்தைத் தீர்க்கக் நீர் நிரம்பிய தொட்டி மதிலுக்கு வெளியேயும், ஓலையால் வேயப்பட்ட சங்கப்படலையில் (சங்கடப்படலை) இருந்து களையாற இரண்டு வாங்கும், பாதசாரிகளுக்கு மண் கூசாவில் தண்ணீரும் வேண்டியவர்கள் வாசிக்க புதினப்பத்திரிகையும் எப்போதும் இருக்கும். விடுமுறை நாட்களில் சாய்மனைக் கதிரையில் இருக்கும் வாத்தியாருடன் சிறுபிள்ளைகள் கூடி மனக்கணிதம் செய்யும் இடமும் இதுதான்.

இவர் தனது கல்விப் பணிக்கப்பால் யானை மார்க் குளிர்பான நிறுவனத்தின் வடமாகாணத்துக்கான தனி முகவராகவும், விளங்கியதுடன், கல், மணல், சீமந்து போன்ற கட்டடப் பொருள்களை ஏற்றி இறக்கும் பார ஊர்தியையும் வைத்திருந்தார். இவை அவசிய அல்லது அவசர தேவைகளின் போது, பொது மக்களின் தேவைகளுக்கும் பயன் படுத்தப்பட்டன.

சுருங்கக் கூறின் அம்பலம் பொன்னையா அவர்கள் கல்வியாளராகவும், சமூக சேவையாளராகவும் பிரபல வர்த்தகராகவும் விளங்கிய பெருமகனாவார்.

**தம்பிப்பிள்ளை பொன்னம்மா** **கதிர்காமர் ஆறுப்பிள்ளை.**





வர்த்தலைவிளானில் வினாசித்தம்பி விதானையாரின் முயற்சியால் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 1866 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதலாவது அதிபராக விதானையார் வினாசித்தம்பியின் மகன் அமரர் வி.தம்பிப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார். அவரது பதவிக் காலத்துக்குப் பின்னர் அவரது மனைவியார் அமரர் தம்பிபிள்ளை பொன்னம்மா அவர்கள் 1900 ம் ஆண்டு வரை அதிபராகப் பணியாற்றினார். பெண்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் ஆர்வம் கொண்டு செயற்பட்ட இவர் பொறுப்பு வாய்ந்த அதிபராகவும் பெண்களுக்கு ஒரு முன்னோடியாகவும் விளங்கினார்,

அதனைத் தொடர்ந்து 1938 வரை அமரர் பொன்னம்மாவின் மருமகனான அமரர் கதிர்காமர் ஆறுப்பிள்ளை அவர்கள் பாடசாலையை சிறப்பாகப் பரிபாலனம் செய்து, நிர்வகித்து வந்தார். ஐந்தாம் வகுப்பு வரை இருந்த பாடசாலையை உயர் வகுப்புகள் கொண்ட பாடசாலையாகவும், தெல்லிப்பளையில் இருந்த ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையின் சாதனாபாடசாலையாகவும் உயர்வடையச் செய்தார். இங்கு படித்த பல மாணவர்கள் பின்னர் சிறந்த ஆசிரியர்களாகவும் விளங்கினர். அமரர் க.ஆறுப்பிள்ளை அவர்கள் அயலிலும் பாடசாலை அமைப்பதற்கு பேருதவியாக இருந்தார் என்றால் மிகையாகாது.

## சின்னக்குட்டி கந்தவனம்



மயிலிட்டி தெற்கு, கட்டுவனில் சிறந்த கூட்டுறவாளனாக விளங்கி அவ்வூரின் சமய, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு அரும்பணி புரிந்தவர் சின்னக்குட்டி கந்தவனம் அவர்கள். இவர் கட்டுவனூரில் வாழ்ந்து வந்த சின்னக்குட்டி முத்துப்பிள்ளை இணையருக்கு மகனாக 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏழாலை அமெரிக்க மிஷன் பாடசாலையில் கற்றார். பின்னர் தெல்லிப்பளை அமெரிக்க மிஷன் பாடசாலையில் சேர்ந்து இடைநிலை மற்றும் உயர்நிலை வகுப்புகளில் தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி வகுப்பில் சேர்ந்து ஆசிரியர் தராதரம் பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார்.

1917 ஆம் ஆண்டு, அளவெட்டி தெற்கு, அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து மல்லாகம் சைவ வித்தியாசாலை, தாவடி சைவ வித்தியாசாலை, கந்தரோடை சைவ வித்தியாசாலை, மாகியப்பிட்டி சைவ வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணி புரிந்து 1952 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் ஆசிரியராகப் பணிபுரிந்த போது ஆரம்பிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று ஆசிரியர்களின் நலனுக்காகவும் அயராது உழைத்தார்.

கந்தவனம் அவர்கள் இளமைக் காலத்திலிருந்தே மயிலிட்டி தெற்கு, கட்டுவன் வாழ் மக்களின் சமய, சமூக, பொருளாதார மேம்பாடுகளில் அக்கறை கொண்டிருந்தார். 1922 ஆம் ஆண்டு பாலர் ஞானோதய சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் அங்கத்தவராக இணைந்து ஊக்கமுடன் செயற்பட்டார்.

*கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை நன்குணர்ந்த கந்தவனம் அவர்கள் வலிகாமம் வடக்கில் இயங்கி வந்த கூட்டுறவு இயக்கங்களில் ஆர்வத்துடன் பணியாற்றினார். அத்துடன் மயிலிட்டி தெற்கு, கட்டுவனில் ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை, ஐக்கிய விளைபொருள் விற்பனைச் சங்கம், போன்றவற்றை உருவாக்குவதில் அவரது முயற்சி அளப்பரியது. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம், செயற்பாடு நன்மைகளை எடுத்துக் கூறி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களையும் இணைத்துக் கொண்டார். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்கள் எனப் பாராது கூட்டுறவே தனது மூச்சு என வாழ்ந்து வந்தார். இவரது ஆத்மார்த்தமான சேவையைப் பாராட்டி இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் உதவி ஆணையாளர் ஆர்.சி.எஸ்.குக் அவர்கள் பாராட்டுத் தெரிவித்திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணம் மேற்கு கூட்டுரவுச் சங்கங்கங்களின் உதவி ஆணையாளர் வெ. நடராஜா அவர்கள் 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி கந்தவனம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட, மயிலிட்டி மத்திய ஐக்கிய நாணய சங்கம் வடபகுதியில் இயங்கிய சங்கங்களும் மிகச் சிறந்த சங்கமாகவும், இலங்கை முழுவதிலும் இயங்கிவந்த முதல் தரம் வாய்ந்த சங்கங்களுள் ஒன்றாக விளங்கியது எனவும் புகழுரை சூட்டியுள்ளார்.*

*கந்தவனம் அவர்கள் கிறீஸ்தவ பாடசாலைகளில் படித்தாலும் சைவ சமயத்தில் ஆர்வமும் ஆழ்ந்த அறிவும் உடையவர் மாணவர்கள் ஆர்வம் கொள்ளும் வகையில் சைவசமய பாடங்களையும் தேவார திருவாசக பதிகங்களையும் போதிக்கும் ஆற்றலுடையவர். பாலர் ஞானோதய வித்தியாசாலையின் உருவாக்கத்திலும் முன்னின்று உழைத்தவர். இவ்வாறு சுறுசுறுப்புடன் செற்பட்டு வந்த கந்தவனம் அவர்கள் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பதாம் திகதி அமரத்துவம் அடைந்தார்.*

**க.பொன்னம்பலம்,** **க.நாகலிங்கம் சகோதரர்கள்**





*கட்டுவன் கிராமத்தின், தண்ணீர்த் தாழ்வு என்னும் குறிச்சியில், விவசாயக் குடும்பமான கந்தவனம் - கண்ணாத்தை இணையருக்குப் பிறந்தவர்கள் தான் பொன்னம்பலம் நாகலிங்கம் சகோதரர்கள். இவர்கள் இருவரும் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிலே கல்வி கற்றவர்கள். மூத்தவர் பொன்னம்பலம் அரச திணைக்களங்களில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். இவரை ஊர் மக்கள் கிளாக்கர் பொன்னம்பலம் என அழைப்பர். இளையவர் நாகலிங்கம் ஆரம்பத்தில் மலையகத்திலும் பின்னர் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். கட்டுவன் கிராமத்தின் வளமாரி குறிச்சியில் வாழ்ந்த, சோதிட ஞானம் மிக்க, வைத்தியரான நாகமுத்து - அன்னமுத்து இணையரின் மூத்தமகளான விசாலாட்சியை, பொன்னம்பலமும், இளய மகளான நகுலேஸ்வரியை நாகலிங்கமும் திருமணம் செய்து இனிதே இல்லறம் நடத்தினர்.*

*கட்டுவன் கிராமத்தின் சமூக, பொருளாதார, சமய மற்றும் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு, இணைபிரியா இச் சகோதரர்களின் அர்ப்பணிப்பு அளப்பரியதாகும். இவற்றுள் நான் அறிந்தது சில. அறியாதன பலவாகும். இவர்களின் வாழ்க்கை வரலாற்றை, விபரமாக எழுதப்புகின், அது கட்டுவனூரின் வரலாறாக அமையும் என்பதில் ஐயமில்லை. பொன்னம்பலம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் பக்கபலமாயிருந்து, செயற்பட்டு வந்தார் சகோதரர் நாகலிங்கம். அதனால் அவரை கட்டுவனூர் மக்கள் “சின்னப் பொன்னம்பலம்” எனவும் அழைத்தனர். போசாக்கு உணவுத் திட்டத்தின் கீழ் அரச உதவியுடன் இவரது வீட்டிலே, காலையில் சிறுவர்களுக்குப் பால் வழங்கப்பட்டு வந்தது.*

*க.பொன்னம்பலம் அவர்கள் தனது அரசியல் வாழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். குறிப்பாக அரசாங்க சபை காலத்தில் (1934-1947) காங்கேசன்துறைத் தொகுதி பிரதிநிதியாக இருந்த*

சுப்பையா நடேசனுடன் மிக நெருக்கமாக செயற்பட்டார். சேர்.ஜோன்.கொத்தலாவல பிரதமாராக இருந்தபோது யாழ்ப்பாணம் வந்தார். அவ்வேளை அவரை கட்டுவனுக்கு அழைத்து கௌரவித்தார். 1951 ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டதும், அக்கட்சியின் தீவிர ஆதரவாளரானார். தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, பெருமுயற்சி செய்து பாலர் ஞானோதய சங்கத்தின் ஊடாக கட்டுவன் உப தபால் கந்தோர் திறக்கப்பட்டது. வாசிகசாலைக்கு அருகில் வெங்காய சங்கக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலர் ஞானோதய வித்தியாசாலை, இடவசதி கருதி அச்சுவேலி - தெல்லிப்பளை வீதிக்கு வடக்கே, நெசவுசாலைக்கு அருகே மாற்றம் செய்யப்பட்டது. மயிலிட்டி கிராமாட்சி மன்றத் தலைவர் குரும்பசிட்டி நா.பொன்னையா அவர்களுடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்த போதிலும் கட்டுவனூரின் நன்மைக்காக, அவருடன் இணைந்து பல சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னேடுத்தார்.

சைவசமயத்திலே ஆழ்ந்த பற்றுக் கொண்ட இவர், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருவிழாக் காலங்களின் போது, தண்ணீர்ப் பந்தல் அமைத்து, பக்தர்களுக்கு தாகசாந்தி செய்து மனநிறைவு கொண்டார். 1960 ஆம் ஆண்டளவில் கட்டுவன் கிராமத்திலிருந்து, சைவ பக்தர்கள் குழு ஒன்றினை, வடஇந்தியாவிலே, ரிசிகேசத்திலுள்ள சுவாமி சிவானந்தா ஆச்சிரமத்துக்கு அழைத்துச்சென்று, அவர்கள் விருப்பத்தினை நிறைவு செய்தார்.

க.பொன்னம்பலம் அவர்களின் சமூக, பொருளாதார, சமயப் பணிகளுக்கு கட்டுவனூர் மக்கள் மதிப்பளித்து வருகின்றனர். குறிப்பாக பாலர் ஞானோதய வித்தியாசாலையில், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போது "பொன்னம்பலம் கலையரங்கு" எனப் பெயரிட்டு அவரை கௌரவித்து வருகின்றனர்.

## வித்துவசிரோமணி சி. கணேசையர்



*யாழ்ப்பாணக்குடா நாட்டிலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல், இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை வாழ்ந்தவர், தமிழ் மூதறிஞர் வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்கள்.*

*இவர், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை, சித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்தாபகர், பரம்பரை வழிவந்த சின்னையா ஐயர், வர்த்தலைவிளானைச் சேர்ந்த பொன்னம்மை இணையருக்கு மகனாக, 1878 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை, அவரது பெரிய தந்தையார், கதிர்காம ஐயரால் நடாத்தப்பட்டு வந்த சைவத்தமிழ் பாடசாலையில் கற்றார். அப்பாடசாலையில் இலக்கணம், இலக்கியம், சரித்திரம், சமயம், கணிதம் ஆகிய பாடங்களில் முதன்மை பெற்றார். பெரிய தந்தையரிடம் தனிப்பட்ட முறையிலும் கல்விகற்று, தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தெளிவு பெற்றார். பின்னர் வண்ணார்பண்ணையில் வசித்து வந்த, ந.ச.பொன்னம்பலபிள்ளையிடமும், அவருக்குப்பின், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களுடன் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றார். இணுவில் நடேசையரிடம் சைவ சித்தாந்தத்தைத் தெளிவுறக் கற்றார். அத்துடன் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றக் கூடிய, ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.*

*கணேசையர், வண்ணார்பண்ணை வேலுப்பிள்ளை வித்தியாசாலையில், ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். பின்னர் அங்குள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், வயாவிளான், கீரிமலை, தையிட்டி, நயினாதீவு ஆகிய இடங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்க நிறுவனர், சதாசிவ ஐயரால் நிறுவப்பட்ட, சுன்னாகம் பராசீன பாடசாலையின் தலைமை ஆசிரியராக 1921 ஆம் ஆண்டு முதல் 1932 ஆம் ஆண்டு வரை பணியாற்றினர். இப் பாடசாலையை*

விட்டு நீங்கிய பின்னர், தனது மனைவியாரின் பிறந்தகமான, வர்த்தலைவிளானில், தமிழ்க் குடில் அமைத்து, தனிப்பட்ட முறையிலான, கற்பித்தலில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலிருந்தும் தமிழ் ஆசிரியர்களும், பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளுக்குத் தயார் செய்பவர்களும் வந்து இவரிடம் பாடம் கேட்டனர்.

கணேசையர் அவர்கள் சிறந்த ஆசிரியர் மட்டுமின்றி, உரையாசிரியர், இலக்கணப் பேரறிஞர், இலங்கை இலக்கிய வரலாற்று ஆசிரியர், மரபுவழிப் போதனாசிரியர், சமூகப் பணியாளர், கவிஞர், சோதிட அறிஞர், போன்ற பன்முக ஆளுமை கொண்டவர். கணேசையர், பாரம்பரிய மரபுவழி உரையாசிரியராகவும், இருபதாம் நூற்றாண்டுக்குரிய, இலகுவான உரைநடையினைக் கையாண்ட உரையாசிரியராகவும் புகழ் பெற்றவர். "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழிவந்த உரையாசிரியர்களுள் ஒருவராவர். அவரது திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தும் உரை நூல்களாக "இரகுவம்ச உரை", "மகாபாரதம் சூது போர்ச்சருக்க உரை", "ஒருதுறைக் கோவை உரை", "அகநாநூறு, முதல் நூறு செய்யுள்களுக்கான உரை" என்பன விளங்குகின்றன. இவற்றுள் அகநாநூறு முதல் நூறு செய்யுள்களும் உரையுடன் ஈழகேசரிப் பத்திரிகையில் 1956, 1957 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. அக்காலத்தில் ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடத்தும் பண்டிதர் பரீட்சைக்கு அகநானூறு பாடநூலாக இருந்தது. எனவே பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் கணேசையர் அதனைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

ஈழகேசரிப் பத்திரிகை ஆசிரியர் நா.பொன்னையா அவர்கள், கணேசையரின் எழுத்து முயற்சிகளை "கணேசையர் பதிப்பு" என்ற தலைப்பில் மகிழ்ச்சியுடன் ஈழகேசரியில் பிரசுரித்து வந்தார். கணேசையர் வசன நடையில் எழுதிய நுல்களான "குமாரசாமிப் புலவர் சரிதம்", "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்", "குசேலர் சரிதம்" ஆகிய நூல்களுள், குசேலர் சரிதத்தை 1931 ஆம் ஆண்டிலும், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதத்தை 1939 ஆம் ஆண்டிலும் பதிப்பித்து வெளியிட்டார்.

ஈழத்து இலக்கண மரபுத் துறையில், கணேசையரின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவரது தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகளே, முன்னையவர்களின் இலக்கண முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அமைந்தது. அவரது தொல்காப்பியப் பதிப்புக்களான எழுத்ததிகாரம் 1937 ஆம் ஆண்டிலும், சொல்லதிகாரம் 1938 ஆம் ஆண்டிலும், பொருளதிகாரம் இரண்டாம் பகுதி 1943 ஆம் ஆண்டிலும், பொருளதிகாரம் முதலாம் பகுதி 1948 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து, ஐயரின் ஆற்றலும், புகழும் ஈழத்தில் மட்டுமின்றித் தமிழ் நாட்டிலும் பரவியது. "தொல்காப்பியக் கடல்"

எனவும், "ஈழத்து இலக்கண ஞாயிறு" எனவும் பலவாறாகப் போற்றப்பட்டார். அவரது பல இலக்கணக் கட்டுரைகளை, மதுரை தமிழ் சங்க வெளியீடான "செந்தமிழ்" விரும்பிக் கேட்டு, பிரசுரித்து வந்தது. "நீண்ட காலமாக ஈழத்துத் தமிழ் அறிஞர்களை, அங்கீகரிக்க மறுத்த பல தமிழ்நாட்டு அறிஞர்கள் கணேசையருக்குத் தலை சாய்த்து மதிப்பளித்தனர்". என, பதிப்புத் துறையில் பெயர்போன உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். கணேசையரின் முதன் மாணாக்கராகிய இலக்கண வித்தகர், பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள் "தொல்காப்பியமாகிய பெருங்கடலில் புகுவோருக்கு ஐயரவர்களின் குறிப்புகள் மரக்கலம் போல் உதவுவன." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கணேசையர் அவர்கள் பெருமளவிலான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சிறு குறிப்புகளையும் எழுதியுள்ளார். அவை இலக்கணம், இலக்கியம் தொடர்பானவையாகவும், பொதுவானவையாகவும் காணப்படுகின்றன. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய நூ ல்களை ஒப்பிட்டு, மொழியின் வளர்ச்சிக் கட்டங்களைக் காட்டும் வகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பொருளிலக்கணம் தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் களவியல், நம்பி அகப்பொருள் போன்ற பொருளிலக்கண நூல்களை ஆதாரம் காட்டி, எழுதிய "இயற்கை நவிற்சியும் செயற்கைப் புனைவும்" என்ற கட்டுரை அவரது இலக்கண நுண்ணறிவையும், இலக்கிய ஆளுமையினையும் எடுத்துக்காட்டுகிறது.

இவர் எழுதிய "சிறுபொழுதாராய்ச்சி", "மதுரைக் காஞ்சியிற் கூறிய யாமப்பிரிவு", "மெய்ப்பாடு", "சிறுபொழுது" ஆகிய கட்டுரைகளில் சங்க இலக்கியங்களின் தொடர்புகளை அவதானிக்கலாம். "கம்பனும் உவமையலங்காரமும்", "சீவகசிந்தாமணி உரைநயம்", "திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கம்", "பெரியபுராண முதற் செய்யுளுரை" என்பன இவரது ஏனைய சில இலக்கியக் கட்டுரைகளாகும். "கவியின்பம்" என்ற தலைப்பிலே கம்பராமாயணம், மகாபாரதம், திருமுருகாற்றுப்படை, நற்றினை, புறநானூறு ஆகிய நூல்களிலிருந்து பாடல்களை எடுத்து அவற்றின் இலக்கிய ரசனையை விளக்கி எழுதியுள்ளார். அவரது பொதுவான கட்டுரைகளுக்கு "முன்னைத் தமிழ்நாட்டு பெண்களின் நிலை", "வசிட்டரும் வள்ளுவரும் கூறிய அரசியல்" ஆகிய கட்டுரைகளை உதாரணமாகக் கூறலாம்.

கணேசையர் செய்யுள்கள் இயற்றுவதிலும், கவிதைகள் புனைவதிலும் வல்லவர். இவரது ஆசிரியரான சுன்னாகம் குமாரசாமிப் புலவர், இவரை, "கவிபாடும் புலமிக்கோன்" எனப் பாராடியுள்ளார். அக்காலத்தில் செய்யுள் இயற்றும் அல்லது கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர்கள் தான் தமிழறிஞர்கள் எனக் கருதப்பட்டனர். பாரம்பரிய மரபுசார் கல்வி முறையில், யாப்பிலக்கணம் தவறாது

போதிக்கப்பட்டமைக்கு, செய்யுள் இயற்றும் சமூக அங்கீகாரமே காரணமாயிருந்தது. ஐந்திலக்கணமும் நன்கு அறிந்திருந்த கணேசசையருக்கு, செய்யுள் இயற்றுவது கைவந்த கலையாய் அமைந்தது.

வெண்பா, விருத்தம், அகவல், கட்டளைக் கலித்துறை போன்ற பல்வேறு யாப்பு வடிவங்களையும் இவர் கையாண்டார். "திருச்செல்வச் சந்நிதி நான்மணிமாலை", "புன்னை மும்மணிமாலை", "வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் பிரபந்தம்", "வர்த்தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன் ஊஞ்சல், "ஆயாக்கடவை சித்திவிநாயகர் திருவூஞ்சல்" "மேலைக் கரம்பொன் சண்முகநாதன் திருவிரட்டை மணிமாலை" என்பன கணேசையரின் ஏனைய சில செய்யுள் நூல்களாகும். இவர் பல தனிப்பாடல்களை, நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆண்டுமலர்கள் போன்றவற்றிலும் எழுதியுள்ளார்.

அக்காலத்துத் தமிழறிஞர்கள் சமூகத்துடன் இணைந்தவர்களாக, வாழ்த்துப் பாக்கள், இரங்கற்பாக்கள் என்பவற்றை எழுதுவதும் உண்டு. இரங்கற்பாக்கள் காலப்போக்கில், கல்வெட்டுகள் என அழைக்கப்பட்டன. கணேசையர் அவர்கள் இரங்கற்பாக்களை உறவினர்கள், நண்பர்கள், தனது ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு மாத்திரம் எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.


கணேசையர் அவர்கள் தனக்குப் பின் தமிழ் கூறும் நல்லுலகுக்கு, அரும்பணியாற்ற மாணாக்கர் பரம்பரையினை உருவாக்கியமை சிறப்புக்கு ரியதாகும். இவரிடம் கற்றுப் பண்டிதர்களாக வெளியேறியோர் பலர். அவர்களுள் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயா, முதன் மாணாக்கராக விளங்கினார். கணேசையர் முதுமையடைந்து நோய்வாய்ப்பட்ட போது, அவரது வகுப்புகளை, பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஐயாவே நடாத்தி வந்தார். கணேசையரிடம் பயின்ற ஏனைய தமிழறிஞர்களாக பண்டிதர் க. கி நடராஜன், பண்டிதர் ச.பொன்னுத்துரை, பண்டிதர் இளமுருகனார், பண்டிதர் ஆர்.கே.முருகேசன், பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

1938 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், எட்டாம் திகதி, கணேசையரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூ ரியில், அப்போதைய அரசாங்க சபைத் தலைவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி தலைமையில், கோலாகலமாக, நடைபெற்றது. அவ்விழாவின் போது, ஐயரின் சேவையைப் பாராட்டி, இரண்டாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழி வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். 1951 ஆம் ஆண்டு சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால், யாழ்/பரமேஸ்வராக் கல்லூரியில் நடத்தப்பட்ட தமிழ் விழாவில், உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதை கே.எஸ் கிருஷ்ணன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரிய

*திராவிட பாஷா விருத்திச் சங்கம் தனது ஆண்டு விழாவில், "வித்துவசிரோமணி" பட்டத்தை வழங்கிப் பெருமை கொண்டது.*

*கணேசையர், தனது வாழ்க்கைத் துணைவியாரை இழந்த பின்னர், அவரது நினைவாக, வர்த்தலைவிளானில் ஒரு காணி வாங்கி, அதில் ஒரு கிணறு வெட்டி, அதற்கு "அன்னலட்சுமி கூபம்" எனப் பெயரிட்டு, வருத்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு, காணிக்கையாகக் கொடுத்தார். பின்னர் அங்கேயே தமிழ் குடில் அமைத்து, ஒரு துறவி போல், தமிழை போதித்தும், தமிழையே மூச்சாகவும், வாழ்வாகவும் கொண்ட அவர் 1958 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார். அவரது நினைவாக வர்த்தலைவிளானில் மணிமண்டபம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் ஆயாகடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் உருவச்சிலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அவரது பெயரில் கணேசா சனசமூக நிலையம், கணேசா முன்பள்ளி என்பனவும் செயற்பட்டு வருகின்றன. இவையனைத்தும் அவர் மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்து வருகிறார் என்பதனை நினைவுறுத்தி நிற்கின்றன.*

## பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் ஐயா.



மயிலிட்டி தெற்கில், செல்வம், செல்வாக்கோடு விளங்கிய சைவகுல திலகர் வீ.அ தாமோதரம்பிள்ளை ஐயர் அவர்களின் மூதற் புதல்வர் இராமசாமி ஐயருக்கும், அவரின் மனைவியார், மந்திகை கண்ணகி அம்மன் கோயில் உரிமையாளர் சபாபதிக் குருக்களின் மூதற் புதல்வி பர்வதம்மாளுக்கும் மகனாக பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் ஐயா, 1915 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரெண்டாம் திகதி பிறந்தார். ஐந்து வயதில் குரும்பசிட்டி விநாயகர் ஆலயத்திலே, வேதாரணியம் சொக்கநாதக் குருக்களால் வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டு, அருகில் உள்ள மகாதேவா வித்தியாசாலையில் (தற்பொழுது பொன் பரமானந்தர் வித்தியாசாலை) சேர்க்கப்பட்டார். மகாதேவா வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய நமசிவாயம் அவர்கள், தொடர்ந்து மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும் தொடர்ந்து, 1928 ஆம் ஆண்டு தெல்லிப்பளை துவிபாஷா பாடசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார். தொடர்ந்து அளவெட்டி வடக்கு சீனன்கலட்டி பாடசாலையில்,கற்று, சிறப்புத் தேர்ச்சி பெற்று திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து கொண்டார். அப்பயிற்சியை 1932 ஆம் ஆண்டு நிறைவு செய்த நமசிவாயம் அவர்கள், அதேயாண்டு மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையில் ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடத்துக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அக்காலப் பகுதியில் வறு த்தலைவிளானில் தமிழ் குடில் வைத்து, தமிழையும், சைவசமயத்தையும் போதித்து வந்த பிரம்மஸ்ரீ வித்துவசிரோன்மணி சி. கணேசையரிடம் மாணவனாக பிரவேச பண்டிதர் வகுப்பில் சேர்ந்தார். அவரது கடும் முயற்சியால் ஐயரின் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். மேலும், கணேசையரின் முதுமைக்காலத்தில் அவர் முன்னிலையிலேயே, அவருக்குப் பதிலாக பண்டித வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்து, அவரது பாராட்டைப் பெற்ற பெருமகனாவார்.


யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின், இலக்கணச் செம்மையைப், பலருக்கும் ஊட்டி வந்த நமசிவாயம் அவர்கள், பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் தகப்பனார், சட்டத்தரணி சுப்பிரமணியத்தால் ஆரம்பிக்கப்பட்ட

*வீமன்காமம் தமிழ் வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராகவும், தமிழ் பேராசானாகவும் விளங்கியவர். மல்லாகம் பண்டித மாணவர் கழகத்தில் கற்பித்துப் பல பண்டிதர்களை உருவாக்கியவர். இவர் தமிழ் இலக்கணத் தெளிவும், சைவ சித்தாந்த அறிவும் நிரம்பப் பெற்றவர். இவரது வித்துவப் புலமையை அடையாளம் கண்ட யாழ்ப்பாணப் பல்கலைகழகம்* 1980 *ஆம் ஆண்டு "இலக்கண வித்தகர்" பட்டமளித்துக் கௌரவித்தது. இலக்கண வித்தகர் பட்டமளிகப்பட்டபோது, பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு விதந்துரை வழங்கினார்."இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியத்தின் இலக்கணக் கொடுமுடி கணேசையர் பாரம்பரியத்தின் திருக்கொழுந்தாக விளங்குபவர் இராமசாமி நமசிவாயம் அவர்கள்". யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தச் சங்கம்,* 1998 *ஆம் ஆண்டு "வித்துவசிரோமணி" பட்டமளித்து, அது பெருமை கொண்டது.*

19.03.2000, *பூரணை தினத்தன்று பண்டிதர் இ.நமசிவாயம் அவர்களுக்கு நல்லை ஆதீனத்தில், சதாபிசேஷகமும், துர்க்கா மணிமண்டபத்தில், அப்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர், பொ. பாலசுந்தரம்பிள்ளை, தலைமையில் பாராட்டு விழாவும் நடைபெற்றன. அங்கு, யாழ். குடாநாட்டின் அத்தனை பேரறிஞர்களும், கூடியிருந்து, வாழ்த்தியமை, அவரது பெருமைக்குச் சான்று பகரும்.*

*இவரைப் பற்றிய "தேசிகம்" என்ற நூலும், இவரது ஆக்கங்களைக் கொண்ட "வித்தகர் தரிசனம்" என்ற நூலும், அவ்விழாவில் வெளியிடப்பட்டன. இவ்விரு நூல்களும், பண்டிதர் ஐயாவின் அறிவின் உச்சத்தை அறியப் போதுமானவையாகும். மேலும், பண்டிதரின் நூற்றாண்டு நினைவு உரையிலே, இவரது முதல் மாணவர்களுள், ஒருவரான கம்பவாருதி இலங்கை ஜெயராஜ், "நான் முதல் நாள் அவரிடம் திருக்குறள் படித்தபோது "நுண்மாண்நுழைபுலம்" என்ற தொடரின் விளக்கத்தை முதன் முதல் உணர்ந்தேன், எனவும் "நுண்மாண்நுழைபுலம்" என்ற தொடரின் முழுவிளக்கத்தை, அவர் அறிவில் கண்டு சிலிர்த்தேன்" எனவும் குறிப்பிட்டு, அவரது அறிவின் உச்சத்திற்கு மணிமகுடம் சூட்டியுள்ளார். இவர், சந்நிதிக் கந்தன் சதகம், மாவைக் கந்தன் பதிகம், நகுலேசர் திருவந்தாதி போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் திருகோணமலை ஆலடிப் பிள்ளையார், மாங்குளம் தச்சகடம்பன் பிள்ளையார், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், அளவெட்டி குருக்கள் கிணற்றடி முருகன், பண்ணாகம் பனிப்புலம் வைரவர் போன்ற ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாடியுள்ளார். சங்கானை அரசடி வைரவர், வல்லிபுர ஆழ்வார், கட்டுவன் ஐயனார், வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் போன்ற ஆலயங்களுக்கு பதிகம் பாடியுள்ளார். அவை உட்பட அவரது பல ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே காணாமல் போயின இறுதிக் காலத்தில் சுகவீனமுற்று* 2000-09-11 *இல் சிவபதமடைந்தார்.*

## இராமசாமி தாமோதரம்பிள்ளை



*மயிலிட்டி தெற்கு, பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் ஐயா அவர்களின் தமையனான இ.தாமோதரம்பிள்ளை ஐயா அவர்கள் 08-07-1909 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிலும், ஆசிரியர் பயிற்சி நெறியினை திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையிலும் பூர்த்தி செய்து, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார்.*

*ஆரம்பத்தில் மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும், வீமன்காமம் சைவ வித்தியாசாலையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் வீமன்காமம் சைவ வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகவும், அதனைத் தொடர்ந்து மலையகத்தில், அலபொடகம, ஹல்வேகொட, கெங்கல்லை ஆகிய இடங்களில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அரும்பணி புரிந்தார். வடமாகாணத்துக்கு இடமாற்றம் பெற்ற இவர், கிளிநொச்சி, கட்டுவன்புலம் ஆகிய இடங்களில் பணியாற்றி, இறுதியாக மீண்டும் மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையில் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.*

*இவர் தான் கற்பித்த இடங்களிலெல்லாம் நிவாகத் திறமையாலும், பொதுப்பணி ஈடுபாட்டாலும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், கல்வி அதிகாரிகளினதும், நன்மதிப்பையும், பாராட்டுதல்களையும் பெற்றிருந்தார். ஆசிரியர் சங்கங்களில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, நிர்வாக அங்கத்தவராகவும், தலைவராகவும் பணியாற்றினார். அதனால் ஆசிரிய உலகில் யாவராலும் அறியப்பட்டவராக இருந்தார்.*

*இ.தாமோதரம்பிள்ளை அவர்கள் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த*

அதேவேளை, கட்டுவனூர் சமூக பொருளாதார அபிவிருத்திகளிலும் ஆர்வம் கொண்டிருந்தார். பிறமாவட்டங்களில் பணியாற்றிய போது பாடசாலை விடுமுறை காலங்களில் கட்டுவனூருக்கு வரும் போதெல்லாம் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, உரியவர்களுடன் கலந்துரையாடி, தனது கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தெரிவிக்கத் தவறுவதில்லை. ஓய்வுபெற்ற பின்னர், கட்டுவனூரில் ஸ்தாபிக்கப்பட்ட, பாலர் ஞானோதய சங்கம், இந்து சமய அபிவிருத்திச் சங்கம் அந்திமகால சகாயநிதிச் சங்கம் போன்ற சமய சமூக அமைப்புகளில் இணைந்து செயற்பட்டார்.

அரசியல் ரீதியில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைத் தலைவராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளராகவும் விளங்கினார். தந்தை செல்வநாயகத்தின் மறைவின் பின்னர், திரு.அ.அமிர்தலிங்கத்தின் தலைமையை பெரிதும் விரும்பினார். பொதுத்தேர்தலின் போது, அவருக்கான கட்டுப்பணத்தைக் கட்ட, கட்டுவன், வர்த்தலைவிளான், மயிலிட்டி தெற்கு மக்களிடம் நிதி சேகரிப்பின் பணியிலும் பெரிதும் ஈடுபட்டார்.

ஆசிரியப் பணியுடன் கட்டுவனூரின் அரசியல், சமூக, சமய பொருளாதாரப் பணிகளிலும், தன்னை ஈடுபடுத்திக் கொண்ட. இ.தாமோதரம்பிள்ளை ஐயா அவர்கள், இறுதியில் நோய்வாய்ப்பட்டு 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி சிவபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியையின் போது, கலந்து கொண்ட அப்போதைய காங்கேசன்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் இரங்கலுரை ஆற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## த.சிவக்கொழுந்தர்.



பதினெட்டாம் நூற்றாண்டில், மயிலிட்டி தெற்கிலே புகையிலை வியாபாரம் செய்து செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்து வந்தவர் வசந்தராயர். அவரது பரம்பரையில் தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை இணையருக்கு இரண்டாவது மகனாக சிவக்கொழுந்தர் பிறந்தார். இவரது தந்தையார் வர்த்தலைவிளான் மருதடிப் பிள்ளையார் ஆலயத்துக்குக் கிழக்கே, "வனப்புலம்" என அழைக்கப்பட்ட பகுதியில் மழை நீரையும், கோயிலுக்கு அருகேயுள்ள குளத்திலிருந்து நீர்ப்பாசனம் செய்தும் விவசாயம் செய்து வந்தார்.

சிவக்கொழுந்தர் தனது ஆரம்பக் கல்வியை உள்ளூர்ப் பாடசாலையிலும், உயர் கல்வியை தெல்லிப்பளையிலும், ஆசிரியர் பயிற்சி நெறியினை திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் நிறைவு செய்தார். வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி.கணேசையரிடம் மாணாக்கர்களுள் ஒருவராகத் தமிழ் படித்துப் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளிலும் ஆசிரியராகவும், உதவித் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

கட்டுவனூரில், பாலர் ஞானோதய சங்கத்தில் இணைந்து 1941-1943 காலப்பகுதியில், சைவமடம், தம்பையா- செல்லத்துரை ஐயருடன் சேர்ந்து தனாதிகாரியாகப் பணியாற்றினார். அத்துடன் செந்தமிழ் தேர்ச்சிக் கழகத்திலும் சேர்ந்து செயற்பட்டார்.

1986- 1987 காலப்பகுதியில் போர் உக்கிரமடையவே, பலாலி இராணுவ முகாமைச் இராணுவத்தினர் அப்பகுதி மக்களை வெளியேற்றி, வீடுகளை இடித்தழித்து உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தினர். சிவக்கொழுந்தரும் அவ்விடத்தை விட்டு வெளியேறி நீர்வேலியில், தனது கடைசி மகனுடன் வாழ்ந்து, 1988 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் எட்டாந் திகதி சிவபதம் அடைந்தார்.

## பண்டிதர் வ.முத்துக்குமாரு



ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன்னர் கட்டுவனூரில் வாழ்ந்து வந்த கவிஞரான வரகவிப் புலவர் விசுவநாதரின் பரம்பரையில் பிறந்தவர் வ.முத்துக்குமாரு அவர்கள்.

கட்டுனூரின் பிரபல விவசாயியான தம்பர். வயித்திலிங்கம் - சின்னம்மா இணையருக்கு மூத்த மகனாக 21-03-1914 அன்று வ.முத்துக்குமாரு அவர்கள் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை, குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும், உயர் கல்வியைத் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், ஆசிரியர் பயிற்சி நெறியைத் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பூர்த்தி செய்தார். பின்னர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசா லையிலும், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். அதேவேளை வித்துவசிரோமணி சி.கணேசையரிடம் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுத் தனது 24 வது வயதில் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

கட்டுவனூர் மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக, செந்தமிழ் தேர்ச்சிக் கழகத்துடன் இணைந்து செயற்பட்டார். துறட்டையிட்டி ஞான வைரவர் ஆலயத்தில் சமய சொற் பொழிவு, புராணபடல வாசிப்பு, போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார்.

1934 ஆம் ஆண்டு பாலர் ஞானோதய சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து, பின்னர் நிர்வாக சபையிலும் இடம் பெற்றார். 1940 ஆம் ஆண்டு இச்சங்கத்தில் இணைத் தனாதிகாரியாகவும், 1941 ஆம் ஆண்டு இணைச் செயலாளராகவும், 1947-1948 ஆம் ஆண்டுகளில் செயலாளராகவும் பணியாற்றினார். 1948 ஆம் ஆண்டு வெளிவந்த பாலர் ஞானோதய சங்க வெள்ளிவிழா ஆண்டு மலரின்

*பதிப்பாசிரியராகப் பணியாற்றி, அதனை வெகு சிறப்பாக வெளியிட்டிருந்தார்,*

*இதுதவிர மயிலிட்டி ஐக்கிய நாணய சங்கம், மத்திய மயிலிட்டி பண்டகசாலைச் சங்கம் ஆகியவற்றிலும் நிர்வாக சபைகளில் சேர்ந்து பணிபுரிந்தார்.*

*இவரது முன்னோரான கட்டுவனூர் வரகவி விஸ்வநாதப் புலவர் இயற்றிய வசந்தன் நாடகத்தினைத், தனது தாய் வழிப்பாட்டனாரான இராமு கதிரித்தம்பியிடமிருந்து, அழிந்தவை போக, எஞ்சியிருந்தவற்றைப் பெற்றுக், கைப் பிரதியாக்கம் செய்து எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படச் செய்தார். இவ்வாறு கட்டுவனூர் மேம்பாட்டுக்காக உழைத்தவர்களுள் தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்ட வ.முத்துக்குமாரு அவர்கள் 24-05-1977 அன்று அமரத்துவம் அடைந்தார்.*

**சீனிவாசகம் விஜயசுந்தரம்**



மயிலிட்டி தெற்கு, சைவ ஆசார பரம்பரையில், ஆசிரியராகவும், நொத்தாரிஸ் எழுதுவினைஞராகவும் பணிபுரிந்த சீனிவாசகம்.செல்லம் இணையருக்கு மகனாக, 1914 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி விஜயசுந்தரம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் நிறைவு செய்தார். இளமையிலேயே தந்தையாரை இழந்து, தாயாரின் அரவணைப்பில் வாழ்தமையால்,உயர் கல்வியைத் தொடரமுடியாது, தொழில் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.

இரத்தினபுரியிலே, நிரியெல்ல என்ற இடத்தில் கூட்டுறவு சங்கக் கடை ஆரம்பிக்கப்பட்ட போது ஆதன் பொறுப்பதிகாரியாகப் பதவியேற்றார். சிலகாலம் அங்கு பணியாற்றிய பின், ஊருக்குத் திரும்பி, தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இணைந்தார். அங்கு பண்டகசாலைப் பொறுப்பாளராகவும் எழுதுவினைஞராகவும், பொருட்கொள்வனவு உத்தியோகத்தராகவும் பல பதவிகளை வகித்தார். சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திலும் சிலகாலம் பணிபுரிந்தார். இறுதியில் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் கட்டுவனூர் மக்களால் ஒரு சமூக சேவகராக அடையாளம் காணப்பட்டார். எத்தகைய கஷ்டத்திலும் விகடமாகப் பேசுவதையும் சிரித்த முகத்தையும் இயல்பாகக் கொண்டவர். "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற முதுமொழியை நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர், கட்டுவனூர் மக்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில், தானாக முன்வந்து, உதவிகள் செய்து, சமயக் கிரியைகளிலும், கலந்து கொள்ளும் பண்பாளர். உற்றார், உறவினர், நண்பர்கள், என அனைவருக்கும் உணவளித்து மகிழ்தல் இவரது இயல்பு. இவர் தெல்லிப்பளை

*பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிந்து கொண்டே, பாலர் ஞானோதய சங்கம், செந்தமிழ் தேர்ச்சிக் கழகம், இளஞ் சைவத் தொண்டர் சபை, அந்திமகால சகாயநிதிச் சங்கம் போன்ற சமூக அமைப்புகளிலும் இணைந்து செயற்பட்டார். பாலர் ஞானோதய வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் செயலவை உறுப்பினராக இருந்து, பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருந்தார். என பாடசாலை அதிபர் அமரர் திரு.அனு.வை.நாகராஜன் தனது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.*

*சீ.விஜயசுந்தரம் அவர்கள், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 1974 ஆம் ஆண்டளவில் ஓய்வு பெற்றார். பின்னர் பத்தாயிரம் சின்னத்துரை என அழைக்கப்படும், இ.சின்னத்துரை அவர்களின் "இலட்சுமி இன்டஸ்ரீஸ்" கிறஷ்ரில் மேற்பார்வையாளராகச் சிலகாலம் பணியாற்றினார்.*

*இவ்வாறாக, மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்தவரும் கட்டுவனூர் மக்களால் நன்கறியப்பட்டவருமான சீ.விஜயசுந்தரம் அவர்கள் 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.*

## க.சிவபாதசுந்தரக் குருக்கள்



கட்டுவன் சைவக் குருமார் பரம்பரையில் தோன்றிய ஆ.கந்தையா ஐயருக்கும் கல்வியங்காடு செல்லம்மா அம்மையாருக்கும் மகனாக மார்ச் மாதம் 11ஆம் தகதி 1920ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்வியங்காடு சைவ வித்தியாசாலையிலும், பின்னர் கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும கற்றார்.

சைவசமயத்திலே ஆழமான பற்றுக் கொண்ட இவர், வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகே தமிழ்குடில் அமைத்து, தமிழையும் சைவ சமயத்தையும் போதித்து வந்த, மகாமகோ உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்களிடம், குருகுலவாசமாக இருந்து கந்தபுராணம், பெரியபுராணம், கருடபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்ற சமய நுல்களைக் கற்று பாண்டித்தியம் பெற்றர். அதனால் இவரை ஊர் மக்கள் “கணேசையா” என்று சிறப்பாக அழைத்து வந்தனர். மேலும் குமாரசாமிக் குருக்களிடம் வடமொழிக் கல்வியையும், ஆகமக் கல்வியையும் கற்று ஆலயக் கிரியைகளில் விசேட பயிற்சியும் பெற்றார்.

இவர் சைவாசார முறையுடன் வாழ்ந்த ஐயாத்துரைக் குருக்களுக்கும், சின்னாச்சிப்பிள்ளைக்கும் மகளாகப் பிறந்த பொன்னம்மா அவர்களைத் திருமணம் செய்து, நீலகண்டக்குருக்கள், ஆறுமுகக்குருக்கள், லலிதாம்பிகை, அருணாசலக் குருக்கள், கைலாசநாதக் குருக்கள், இராஜராஜேஸ்வரி, மகேசஸ்வரக் குருக்கள் ஆகிய நன் மக்களைப் பெற்றார். இவர்களுள் ஆறுமுகக்குருக்கள் கனடிய மண்ணிலே, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில், பிரதம சிவாச்சாரியாராக இறைபணி செய்து சைவமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

சிவபாதசுந்தரக் குருக்கள் ஐயா அவர்கள் தனது 16 வயதிலேயே

குருப்பட்டாபிசேகம் பெறும் வகையில் தன்னை தகுதியாக்கிக் கொண்டார். நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் சிவாச்சாரியார் சோமுக்குருக்கள் பட்டாபிசேகத்தை கட்டுவன் துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் நிகழ்த்தினார். அதன் பின்னர் கட்டுவன், குரும்பசிட்டி, மயிலிட்டி தெற்கு ஆகிய கிராமங்களில் சைவசமயச் சடங்குகளையும், ஆலயங்களில் சிவாச்சாரியார் இறை பணிகளையும் ஆற்றி வந்தார்.

இவர் 1971ஆம் ஆண்டு, கட்டுவன் துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையை நிறுவி, அதன் செயலாளராகவும் பணியாற்றினார். இச்சபை கும்பாபிசேகம் நடத்துதல், சமய தீட்சைகள், சமய பிரசங்கங்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் ஆகிய பணிகளைச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் கேதார கௌரி விரதம், விவாகக் கிரியை விளக்கம், மகா கும்பாபிசேக தத்துவங்கள், மகோற்சவ விளக்கம், திருவிளக்கு வழிபாடு, வீரபத்திரக் கடவுள், அபரக்கிரியை விளக்கம், ஐயப்ப சுவாமி பஜனைப் பாடல்கள், மகோற்சவ காலத் தமிழ் வேதத் திருமுறைத் திரட்டு போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் சிவபாதசுந்தரக் குருக்கள் ஐயா அவர்கள் சிவாச்சாரியாராகவும், சிறந்த நிர்வாகியாகவும், எழுத் த்தாளராகவும், சமய சொற்பொழிவாளராகவும் பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கிக் கட்டுவன் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவராவார்.

# அனு.வை.நாகராஜன்.



அனு.வை.நாகராஜன் விதானையார் நாகலிங்கம் அவர்களின் கடைசி மகள், சங்கீதபூஷணம் நேசபூபதியைத் திருமணம் செய்து, கட்டுவனூருக்கு மருமகனாக வந்தவர். இவர் உடுப்பிட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் 1933 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் வைரமுத்துவும், தாயார் இராசம்மாவும் அனுராதபுரத்தில் சொந்த வீடு, வயற்காணிகள் என அசையா சொத்துக்களைக் கொண்டிருந்ததனால் இவரது இளமைக் காலம் அனுராதபுரத்திலேயே கழிந்தது. தனது பிறந்த இடமான உடுப்பிட்டியையும், இளமைக்காலத்தில் வாழ்ந்த இடமான அனுராதபுரத்தையும் நேசித்தது போலவே கட்டுவனூரையும் மிகவும் நேசித்தார். 1978 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் இருபதாம் திகதி கட்டுவன், மயிலிட்டி தெற்கு, பாலர் ஞானோதய வித்தியாசாலையின் அதிபராகப் பதவியேற்றார்.

இளமைத் துடிப்பும், புத்துணர்ச்சியும், உயர் கல்வித் தகமையும், கொண்ட நாகராஜனை அதிபராகக் கொண்டதனால், அப்பாடசாலை பெருமையடைந்தது. தமிழ்மொழிப் பற்று, இறைபக்தி, கலை, இலக்கியத் துறைகளில் நாட்டம், இசைத்துறையில் ஆர்வம், சிறுவர் நலனில் அக்கறை, போன்ற பன்முக ஆளுமை கொண்ட நாகராஜன் பாடசாலைக்குக் கிடைத்த பொக்கிசமாகக் கருதப்பட்டார்.

வாசிப்புப் பழக்கத்தினை நிறையவே கொண்டிருந்த அவர், சிறுவர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும், என்பதில் அதிக அக்கறை காட்டினார். அப்பாடசாலைக்கு ஒரு நூலகம். இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்த முதலாவது அதிபர் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். கல்வி அமைச்சின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நூலக வாரம், சுகாதார வாரம் போன்றவற்றையும் செயல்முறைப்படுத்தி மாணவர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். 1979 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு, சமூகக் கல்வி என்ற பாடத்திட்டத்தை அறிமுகம்

*செய்தபோது அதனை செயற்படுத்த ஒரு பட்டதாரி ஆசிரியர் தேவை எனக் கூறி, அவர் மேற்கொண்ட முயற்சி மறக்கமுடியாதது. ஆரம்பப் பாடசாலைகளிலேயே, மாணவர்களுக்கு, தரமான கல்வி வழங்கப்படவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் ஆசிரியர்கள் பாடத்திட்டத்தினைக் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கவேண்டும் என்பதிலும் கண்டிப்பாக இருந்தார். அத்துடன் விஞ்ஞானப் பிரிவையும் அறிமுகம் செய்தார்.*

*மாணவர்கள் கல்வியுடன் கலை, இலக்கிய, விளையாட்டுத் துறைகளிலும் பயிற்சி பெறவேண்டும், என விரும்பிய அவர், கலை, இலக்கிய நிகழ்ச்சிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடைமுறைப் படுத்தினார்.*

*மாணவர்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியமோ, ஒழுக்கம் அதனை விட முக்கியம் என்பது அவரது கருத்து. ஆகவே, மாணவர்களோ, ஆசிரியர்களோ காலம் தாழ்த்தி, வருவதனையும், நேரகாலத்தோடு வீட்டுக்குச் செல்வதனையும் முற்றாக நிறுத்தினார். செம்பாட்டுப் புழுதி பறக்கும் கட்டுவனூரில் வெள்ளைச் சீருடை அணிந்து பாடசாலைக்குச் செல்வது சவால் நிறைந்த முயற்சியாகும். அதனையும் செயற்படுத்தினார். இவற்றை அவர் இலகுவாக செயற்படுத்தக் காரணம், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் முன்னுதாரணமாக.வெள்ளை உடையணிந்து, நேரகாலத்தோடு, பாடசாலைக்குச் சென்று, அவரது கடமைகளைப் பொறுப்பாகச் செய்து வந்தமையேயாகும்.*

*பல்கலை வித்தகரான நாகராஜனின் ஒரு முகம் தான் பாடசாலை அதிபர். அவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், உரையாசிரியர், நூலாசிரியர், பத்திரிகை ஆசிரியர், பாடகர் எனப் பல முகங்களையும் கொண்டவர். கலை இலக்கிய உலகிலே கதை, கவிதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு துறைகளிலும் ஆழமாகத் தடம் பதித்தவர். குறிப்பாக சிறுவர்களுக்காகப் பல ஆக்கங்களைப் படைத்தார். அவரது "காட்டில் ஒரு வாரம்' என்ற சிறுவர் வன நவீனம் இலங்கை அரசின் சிறந்த சிறுவர் இலக்கியத்துக்கான தமிழ்த் தேசிய சாகித்திய விருதைப் பெற்றது, அதோடு "இலக்கிய வித்தகர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. "அவன் பெரியவன்" "சிறுவர் சிந்தனைக் கதைகள்", "சிறுவர் கவிதையில் புதிய சிந்தனைகள்", "சிறுவரும் அவர்தம் அறிவுசார் சாதனங்களும்", "சிறுவருக்கான பழமொழிக் கதைகள்", "மாணவர் நல்லுரைக் கோவை" என்பன சிறுவர்களுக்கான அவரது மற்றும் சில படைப்புகளாகும். "விநாயகர் மகத்துவம்", "மார்கழி மங்கையர்", "தாய் தரும் தாலாட்டு", "தேடலும் பதித்தலும்", "பட்டரின் அபிராமி மான்மியம்", "ஒரு காலத்துச் சிறுகதைகள்", "கருத்தும் எழுத்தும்", "அறிவியல் பேழையில் ஒரு சில மணிகள்", என்பன இவரது ஏனைய நூல்களாகும்.*


*போர்ச்சூழல் தீவிரம் அடையவே, 1990 ஆம் ஆண்டு கட்டுவனூர் மக்கள்*

இரண்டாவது நிரந்தர இடப்பெயர்வின் போது, (முதலாவது இடப்பெயர்வு 1986 ஆம் ஆண்டு நடைபெற்றது.) நாகஜனும் தனது சொந்த வீடான சங்கராபரணத்திலிருந்து குடும்பத்தோடு குடிபெயர்ந்து, தெல்லிப்பளையில், முன்னாள் எதிக்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் வசித்த வீட்டில் குடியேறினார். அங்கும் அவர் தனது கலை, இலக்கிய முயற்சிகளைத் தொடர்ந்தார். அமைதியற்ற சூழ்நிலையில், யாழ். இலக்கிய வட்டம் செயற்பட முடியாத நிலையில் இருந்ததனால், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளையில் கலை இலக்கியக் களம் ஒன்றினை உருவாக்குவதில் பிரதான பங்கினை வகித்தார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன், பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, வட்டாரக் கல்வியதிகாரி பொ.சிவஞானசுந்தரம், கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர், கலைப்பேரரசு எ.ரி.பொன்னுத்துரை, கலாகேசரி ஆ. தம்பித்துரை, சைவப்புலவர் க.செல்லத்துரை, பண்டிதர் சி.அப்புத்துரை, பிரபல பெண் எழுத்தாளர்கள், கோகிலா மகேந்திரன், குறமகள், மற்றும் திருமதி கொசல்யா சுப்பிரமணிய ஐயர், திருமதி.தர்மபூபதி சிதம்பரநாதன் போன்ற இசை, கலை, இலக்கிய மேதைகளுடன் இணைந்து, கலை இலக்கியத்துறையில், புதிய இளைய சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றினார். களத்தின் நிர்வாகத்தில் பொருளாளராய், பணிபுரிந்தார்.

கொழும்பில் வாழ்ந்த காலத்தில், பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டு, வலதுகை செயற்படாது போனபோது, இடதுகையால் எழுதப்பழகி, எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். எழுத்து அவருக்கு ஒரு வரமாய் அமைந்தது. எழுத்தே வாழ்வாகவும் மூச்சாகவும் வாழ்ந்த நாகராஜன் அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

## பேராசிரியர் சு.சுசீந்திரராஜா



மயிலிட்டி தெற்கு, ஆதிமயிலிட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட சுவாமிநாதன் சுசீந்திரராஜா அங்கு வாழ்ந்து வந்த சிதம்பரப்பிள்ளை சுவாமிநாதன் பூதாத்தைப்பிள்ளை இணையருக்கு மகனாக 1933 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூ ரியிலும் பயின்றார். பின்னர் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலும், இந்தியாவில் பெங்களூரிலுள்ள ஜோசப் கல்லூரியிலும் உயர் கல்வியைக் கற்றார். 1960 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலுள்ள, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் மேற் படிப்பைத் தொடர்ந்தார்.

பல்வேறு இடங்களிலும் பணியாற்றிய இவர் 2000 ஆண்டளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார். மொழித்துறையுடன் கலை, இலக்கியம், இந்து கலாச்சாரம் போன்ற துறைகளிலும் ஆற்றிய மகத்தான பணிக்காக 2008 ஆம் ஆண்டு “தேச நேத்ரு” என்ற தேசிய விருதைப் பெற்றார்.

அரச அலுவலகர்கள் தமிழ், சிங்கள மொழிகளைக் கற்பதற்கு இலகுவாக பேராசிரியர் ஜேம்ஸ் டபிள்யூ.ஹெயார்எஸ் மற்றும் டபிள்யூ.எஸ் கருணாதிலக்க ஆகியோருடன் இணைந்து பேசும் தமிழுக்கு ஓர் அறிமுகம், (An introduction to spoken tamil) பேசும் சிங்களத்துக்கு ஓர் அறிமுகம், (An introduction to spoken Sinhala.) எழுத்துத் தமிழுக்கு ஓர் அறிமுகம் (An introduction to literary tamil) ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வேண்டுகோளின்படி, பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், அபயசிங்க ஜெயக்கொடி ஆகியோருடன்

*இணைந்து, சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட, அரச மற்றும் உள்ளூராட்சி, சேவையிலுள்ளவர்களுக்கு மேலதிக மொழியாக தமிழ் மொழியில் பேசுவதை போதிப்பதற்காக, "பேசும் தமிழ் மொழி" என்ற நூலை எழுதினார்.*

*இது அரச மொழிகள் பரீட்சையின் மூன்றாம் தர பாடநூலாக விளங்குகிறது. இவரது தமிழ் சிங்கள மொழிக்கான சேவையைப் பாராட்டி களனிப் பல்கலைக்கழகம்* 2010 *ஆம் ஆண்டு "சாஸ்திர சூரி" என்ற கௌரவப் பட்டத்தினை வழங்கிப் பெருமை கொண்டது.* 11.01.2019 *ல் இறைவனடி சேர்ந்த இவர், மயிலிட்டி தெற்கின், முதலாவது கலாநிதிப்பட்டம் பெற்றவர், எனக் கருதப்படுகிறார்.*

## நல்லதம்பி.நாகலிங்கம்



கட்டுவன் விதானையார் என கட்டுவனூர் மக்களால் நன்கு அறியப்பட்டவர் நல்லதம்பி நாகலிங்கம் அவர்கள். ஆரம்பத்தில் இவர் ஆசிரியராகப் பணி புரிந்தவர். வர்த்தலைவிளானில் விதானையார் வினாசித்தம்பியாரால் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க மிசன் தமிழ் வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய ஆறுப்பிள்ளை சட்டம்பியாருக்கு உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் பாடசாலைக்குச் செல்லும் வயதையடைந்த சிறார்களைத் தேடி, ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று, கூட்டிக் கொண்டு பாடசாலைக்குப் போய் படிப்பிக்கும் நிலை தான் காணப்பட்டது. அக்கடமையை அவர் மனமுவந்து செய்தார். இவரிடம் ஆரம்பக் கல்வியைக் கற்ற பல மாணவர்கள், பின்னாளில் உயர் கல்விகளைப் கற்று, வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும், ஆசிரியர்களாகவும் மற்றும் பல உயர்நிலை உத்தியோகத்தர்களாகவும் விளங்கி இவருக்குப் பெருமை சேர்த்தனர்.

ந.நாகலிங்கம் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த போதே, கிராம விதானையார், பதவிக்கு விண்ணப்பித்து, அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு, 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி நியமனம் பெற்றார். சமூக சேவையில் ஆர்வம் கொண்ட இவருக்கு, அது மிகவும் பொருத்தமான பதவியாகவே இருந்தது. மக்களுடன் மிக நெருங்கிப் பழகி, அவர்தம் குறைகளைத் தீர்த்து திருப்தி கண்டார். ஊர் மக்களிடையே ஏற்படும் பிணக்குகளையும், சண்டை சச்சரவுகளையும் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் சதுரப்பாடு, இவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. வாழ்க்கையை நடாத்த வழியின்றித் தவித்த ஏழை மக்கள் பலருக்கு அரசாங்க உதவிப்பணம் பெற்றுக் கொடுத்து, அவர்களது முகத்தில் மகிழ்ச்சியைக் கண்டார்.

கிராம முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு கூட்டுறவு இயக்கங்கள், விவசாயக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், போன்ற சமூக,பொருளாதார அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார். குறிப்பாகக் கட்டுவனூரில்

*கிராமத் தொண்டனாக விளங்கிய க.பொன்னம்பலம் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, பாலர் ஞானோதய சங்கம், விளைபொருள் சங்கம், ஐக்கிய நாணய சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டி கிராம சபை போன்றவற்றில் தன்னால் இயன்ற பணிகளைச் செய்து வந்தார்.*

*தெய்வீகக் கலைகளாகிய இசையிலும், கூத்திலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். விஸ்வப்புலவர் இயற்றிய வசந்தன் கூத்தினைக் கொழும்பு காலிமுகத் திடலில் முதன்முதலாக அரங்கேற்றிய பெருமை இவரைச் சாரும். மேலும் நோபல் பரிசு பெற்ற, வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் முன்னிலையில் இசைத்தும், நிகழ்த்தியும் புகழ் பெற்றார். கும்மி, கோலாட்டம், கயிற்றுக்கோலாட்டம் போன்ற கிராமியக் கலைகளை, சிறார்களுக்குப் பழக்கி, பொறுமையுடன் கற்க ஊக்கமளித்தார்.*

*நன்கு பாடகக் கூடிய குரல்வளம் கொண்ட இவர், இனிமையாகப் பாடும் திறமையை இயல்பாகவே பெற்றிருந்தார். கர்நாடக இசையிலும் மிக்க ஆர்வம் கொண்டு, தனது கடைசி மகளான நேசபூபதி நாகராஜன் அவர்களை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகதிற்கு அனுப்பி, இசைப் பட்டதாரியாக்கி, (சங்கீதபூஷணம்) தனது கனவை நனவாக்கினார்.*

*சைவ சமயப் பற்றுக் கொண்ட ந.நாகலிங்கம் அவர்கள் கட்டுவனூர் ஞான வயிரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் என்பவற்றில் மட்டுமின்றி, செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலும் மிகுந்த பக்தி கொண்டவர். வருடம் தோறும் நடைபெறும், திருவிழாக் காலங்களில், கட்டுவன் இரண்டாம் சந்திக்கருகிலே தண்ணீர்ப் பந்தல் அமைத்து, அடியார்களுக்குத் தாகசாந்தி செய்து இறை பணியாற்றி வந்தார்.*

*ந.நாகலிங்கம் அவர்கள் அரசியலிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். காங்கேசன்துறைத் தொகுதி, தந்தை செல்வநாயகம் அவர்களின் நம்பிக்கைக்குரிய தீவிர ஆதரவாளனாக செயற்பட்டார். 1952 ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், அவருக்கு ஆதரவாகவே இருந்தார். அத்தேர்தலைத் தொடர்ந்து, நடைபெற்ற, தேர்தல் வழக்கில், அன்று ஆளும் கட்சியிலிருந்த திரு. நடேசபிள்ளைக்கு எதிராகத் துணிச்சலுடன் கருத்துத் தெரிவித்தார் இறுதி வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளராகவே இருந்தார்.*

*ந.நாகலிங்கம் அவர்கள் ஆசிரியராகவும் விதானையாராகவும், இறுதியாக மரண விசாரணை அதிகாரியாகவும் கட்டுவனூர் மக்களுக்குப் பணியாற்றியவர். அதற்கு அப்பால் சமூக, சமய அரசியல், பொருளாதார, கலை, கலாச்சாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்களுடன் இரண்டறக் கலந்து, கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்த பேராளர்களுள் ஒருவராவார்.*

**வல்லிபுரம் குருசாமி.**
16.12.1922 - 27.12.2004.



*கிராமியக் கலையான ஒயிலாட்டக் கலையின் மூலம் கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்தவர் வல்லிபுரம் குருசாமி அவர்கள். இவர் வீமன்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1954 ஆம் ஆண்டு மயிலிட்டி தெற்குக், கட்டுவனைச் சேர்ந்த முருகேசு இரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளான சிவக்கொழுந்து என்பவரைத் திருமணம் செய்தார். 1994 ஆம் ஆண்டு, நாட்டுக் கூத்துக் கலைஞரும், பட்டதாரியுமான, மெற்றாஸ்மயில் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலைவிழாவின் போது, ஒயிலாட்டத்தினைக் கலை நயத்தோடு சிறப்பாக ஒப்பேற்றியமைக்காக, தங்கப் பதக்கம் பெற்றதோடு, பொன்னாடையும் போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். மேலும் 2003 ஆம் ஆண்டு, தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற, கலை விழாவில், சிறந்த ஒயிலாட்டத்துக்காக "கலைச்சுடர்" விருது வழங்கப்பட்டதோடு, அவ்வேளையில், வலிகாமம் வடக்கு பிரதேச செயலரும், அரசாங்க அதிபருமான, திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல், அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட பெருமகனாவார்.*

## எஸ்.கே.பரராஜசிங்கம்.



தமிழ் ஒலிபரப்புக் கலையில் உச்சங்களைத் தொட்ட எஸ்.கே.பரராஜசிங்கம் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. ஆரம்பத்தில் ஹட்டன் சென் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். கர்நாடக சங்கீதத்தை முறைப்படி பயின்று தேர்ச்சி பெற்றவர். பின்னர் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராக இணைந்து, இசைத்துறைக் கட்டுப்பாட்டாளராக உயர்ந்து, சாதனைகள் பல படைத்தவர். இலங்கையில் ஆக்க சங்கீதம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். ஈழத்து மெல்லிசைக் கலையின் ஆரம்ப கர்த்தா. பரராஜசிங்கத்தின் இனிய குரலில் உயிர் பெற்ற பாமாலைகள், ஈழத்துப் பாடல்கள், இசைச் சித்திரங்கள் நடன, நாடக அரங்குகள் என அவரது ஆக்க முயற்சிகள் நீண்டு கொண்டேபோகும்.

அவர் தனது சகோதரரான வைத்தியக் கலாநிதி எஸ்.கே.மகேஸ்வரனுடன் இணைந்து கர்நாடக இசைக்கச்சேரிகள் செய்திருக்கிறார். வானொலியில் “விவேகச் சக்கரம்” என்ற பொது அறிவு நிகழ்ச்சியை நடாத்தியுள்ளர். வர்த்தக சேவையில் தன் பணியை ஆரம்பித்த போது, அது வெறும் சினிமாப் பாடல்களை ஒலிபரப்பும் ஒரு சேவை தானே, எனப் பலர் சாதாரணமாக நினைத்தபோது, “திரை தந்த இசை”, “ஒலி மஞ்சரி” ஆகிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து, தனது ஆளுமையை வெளிப்படுத்தினார். “சந்தனமேடை என் இதயத்திலே” என்ற பாடலுக்கு இசையமைத்தவர் எம்.எ.குணசீலநாதன். அவரையும் இணைத்து, எஸ்.கே பரராஜசிங்கம் அவர்கள் பாடிய பாங்கு பலரையும் வெகுவாகக் கவர்ந்தது. இப்பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர், பரராஜசிங்கத்தின் நெருங்கிய உறவினரும், மயிலிட்டி தெற்கைச் சேர்ந்தவருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கமாவார். பரராஜசிங்கம் பாடிய “அழகான ஒரு சோடிக் கண்கள்” என்ற பாடலும் மக்கள் மனதைத் தொட்ட பாடலாகும். அக்காலத்தில், நடைபெற்ற பரத நாட்டிய அரங்கேற்றங்களில், அனேகமாக, பரராஜசிங்கத்தின் குரல் பின்னணியில் ஒலிக்கும்.

பரராஜசிங்கத்தின் ஈழத்துப்பாடல்கள், தென்னிந்திய திரைப்படப் பாடல்களிலிருந்தும் வேறுபட்ட பண்பினைக் கொண்டது ஈழத்தின் தனிச் சிறப்புகளையும், அழகியலையும் மிக லாவகமாக இசை வடிவத்திலே வெளிக்கொணர்ந்தவர். ஈழத்தின் இசைப் பாரம்பரியங்களையும், நடைமுறைகளையும் நன்கறிந்தவர். கர்நாடக இசைப் புலமையுடன், பிறநாட்டு இசைகளின் ஞானமும், நுட்பமும் அறிந்தவராக இருந்தார். அதனால் தான், எங்கெல்லாம் பிற இசை அழகுகளைக் கண்டாரோ, அவற்றையெல்லாம் ஈழத்தமிசைக்குக் கொண்டுவரப் பெருமுயற்சி செய்தார். பல பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு ஈழத்து மெல்லிசையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றார்.

எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்களின் பாடல்களால் கவரப்பட்ட B.H அப்துல் ஹமீத் அவரது பாடல்களைத் தேடிச் சேகரித்துப் பதிவு செய்து “இசைக்களஞ்சியம்” என்ற நிகழ்ச்சியை ஒளிபரப்பி வந்தார். இதனை அவதானித்து வந்த விவியன் நமசிவாயம், அந்த நிகழ்ச்சிக்கு நேரமும் ஒதுக்கிக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சியினை மேலும் மெருகூட்ட, அப்போது பணிபாளராயிருந்த பொன்மணி குலசிங்கம் அவர்கள், தனியாக ஒரு வாத்தியக் குழுவினை அமைக்க உதவி செய்தார். இசையமைப்பாளர் அமரர்.ஆர்.முத்துசாமி அவர்களின் தலைமையில் வாத்தியக்குழு இயங்கியது ஆரம்பத்தில் எஸ்.கே.பரராஜசிங்கத்துடன் திருமதி அம்பிகா தாமோதரம், திருமதி மீனா மகாதேவன் ஆகியோர் ஈழத்துப் பாடல்களைப் பாடினர். இவ்வாறே ஈழத்துப்பாடல்கள் இலங்கை வானொலியில் அறிமுகமாயின.

எஸ்.கே.பரராஜசிங்கத்தின் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்றினை “ஒலி ஓவியம்” என்ற பெயரில் B.H அப்துல் ஹமீட்டின் உதவியுடன் கே.எஸ். பாலச்சந்திரன் கொழும்பில் வெளியிட்டு வைத்தார். கனடாவில் அருவி வெளியீட்டகம், இந்த மெல்லிசைப் பாடல்களை, அவரது அனுமதியுடன் “குளிரும் நிலவு” என்ற பெயரில் இறுவட்டாக வெளியிட்டது

ஈழத்தின் முதல் மெல்லிசைத் திரட்டான “கங்கையாளே” மற்றும், நவீனப்படுத்திய “வீரபத்திரர் வசந்தன்” என ஈழத்தின் குறிப்பிடத்தக்க கலை முயற்சிகளின் உயிர் நாடி, பரராஜசிங்கம். இதயரஞ்சனி மூலம் அவரது ஆளுமையை மேலும் சிறப்பாக அறிந்து கொள்ள முடியும். ஈழத்து மெல்லிசைப்பாடல் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியை வியந்து, “ஈழத்து மெல்லிசையின் பிதாமகன்” எனப் பெருமையுடன் அழைக்கப்படுகின்றார். அவரது வானொலி சேவைக்காக சர்வதேச “உண்டா” விருதினை அவர் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## த.துரைச்சாமி ஐயர்



கட்டுவன் சந்தி, சைவ மடத்திலே சைவ ஆசாரத்தோடு வாழ்ந்த, தம்பையா தெய்வானைப்பிள்ளை இணையருக்கு மகனாக துரைச்சாமி ஐயர் பிறந்தார். சிறு பராயத்திலேயே ஆன்மீக நாட்டமும், இறை பக்தியும் கொண்ட இவர் வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில், திருவிழாக் காலங்களில், திருப்பணிகளை மேற்கொண்டு வந்தார். ஜீவனோபாயத்திற்காக கட்டுவனூரில் நடமாடும் தேநீர் விற்பனை சேவையினை ஆரம்பித்தார். கட்டுவனூரில் "சைவாள் காப்பி கிளப்" என்ற பெயரில் முதன் முதல் நடமாடும் சிற்றுண்டிச் விற்பனைச் சேவையினை ஆரம்பித்த பெருமை துரைச்சாமி ஐயரைச் சாரும். கோயில் திருவிழாக் காலங்களில் பக்தர்கள் பசியாறவும், தாக சாந்தி செய்துகொள்ளவும் இது பெரிதும் உதவியது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் நியாயம் வழங்கவென கிராமக் கோடுகள் இயங்கி வந்தன. மயிலிட்டி கிராமக் கோடு, நடைபெறும் நாட்களில், அங்கும் இவர் தனது நடமாடும் சிற்றுண்டி விற்பனைச் சேவையினை நடத்தத் தவறியதில்லை.

திருநெல்வேலி மேற்கு, சிவன்கோயிலுக்கு அருகாமையில் சைவ ஆசாரத்துடன் வாழ்ந்து வந்த சுவாமிநாதர் இராசம்மா இணையரின் மகளான மாரிமுத்துவைத் திருமணம் செய்து இல்வாழ்க்கையில் இணைந்தார். பின்னர் நிரந்தரமாகக் கட்டுவன் முதலாவது சந்திக்கு வடக்கே தேநீர்ச் சாலை ஒன்றினை அமைத்துக் கொண்டார். அவரது மனைவி மாரிமுத்து அதிகாலை நான்கு மணி முதல் இரவு பத்து மணிவரை உணவுப் பண்டங்களைத் தயாரித்தும், அதற்கான ஆயத்தங்களைச் செய்தும், துரைச்சாமி ஐயருக்கு பக்கபலமாக விளங்கினார். அதாவது ஒரு குடும்ப சிற்றுண்டிச் சாலையாக அது இயங்கி வந்தது. வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும் இத் தேநீர்ச் சாலை, வருடத்தில் சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவசை ஆகிய இருதினங்கள் மட்டுமே மூடப்பப்பட்டிருக்கும்.

தோசை, கடலை, பாண், பகோடா, வாய்பன் போன்ற சிற்றுண்டிகளும் தேநீர், மற்றும் மென்பான வகைகளும் நியாயமான விலையில் இங்கு பெறக்கூடியதாக இருந்தது. அதனால் தோட்டங்களிலும், கட்டுமானப்பணிகளிலும் ஈடுபட்டிருந்த சாதாரண தொழிலாளர்களுக்கும், கட்டுவன் சந்தியால் பயணிப்பவர்களுக்கும், இது பெரிதும் பயனுடைய சிற்றுண்டிச் சாலையாக இருந்தது. ஐயர் குடும்பத்தினரின் கடின உழைப்பால் கடைக்கு எதிரே சந்தியின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த காணியை விலைக்கு வாங்கி உட்புறமாக வீட்டையும், ஒரு கிணற்றையும் வெளிப்புறமாக ஐந்து கடைத்தொகுதிகளையும் கட்டுவித்தார். அவை தற்பொழுதும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பது குறிப்பிடத்தக்கது.

துரைச்சாமி ஐயரின் வியாபாரத்தினது ஒரு சிறப்பம்சம் என்னவெனில் காலையில் கடை திறக்கப்படும் போது, சுடப்படும் முதலாவது தோசையினை சிறு சிறு துண்டுகளாகப் பிய்த்து, தேநீர்ச் சாலையின் தகரக் கூரையிலே எறிவார். சந்தியின் தென்கிழக்கு மூலையிலே கட்டுவன் சந்தியின் ஒரு அடையாளக் கூறாக விளங்கிய ஆலமரத்தில், கூட்டம் கூட்டமாகக் கூடிக் கரைந்து கொண்டிருக்கும் காகங்கள் மற்றும் பறவைகள் பறந்து வந்து ஒரு நிமிடத்தில், அவற்றைக் கொத்திக் கொண்டு பறந்துவிடும். மனிதர்களை மட்டுமின்றி பறவைகளையும் மிருகங்களையும் நேசித்த பண்பாளன். போர் மேலும் விரிவடையவே 1986 ஆம் ஆண்டளவில் அது மூடப்பட்டது.

## சி. கனகசபை



கட்டுவன்னூரை வளப்படுத்திய வர்த்தகப் பெருமக்களுள் அமரர் சி. கனகசபை அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இவர் சின்னப்பு பொன்னுப்பிள்ளை இணையருக்கு மகனாக 1904 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்தார்.

ஆரம்ப, மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்த இவர் வர்த்தகத் துறையில் ஆர்வம் கொண்டு வியாபார முயற்சிகளில் ஈடுபட்டார். மலையக்கத்திலே நுவரெலியாவில் "கணேசா ஸ்ரோர்" என்னும் விற்பனை நிலையத்தை ஆரம்பித்துத் திறம்பட நடாத்திவந்தார். கட்டுவனூர் மக்கள் பயன் பெறும் வகையில் மயிலிட்டிக்குச் செல்லும் முச்சந்திக்கு அண்மையில் மளிகைப் பொருள் விற்பனை நிலையத்தையும் ஆரம்பித்தார்.

இவரது விற்பனை நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள வைரவப் பெருமானை இவர் தனது குலதெய்வமாகக் கொண்டவர். அந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதும், பேணிப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் தனது இறை பணியாக சிரமேற் கொண்டு செய்து வந்தார். அத்துடன் ஞானவைரவர் ஆலயத்தைப் பலமானதாகவும், அழகானதாகவும், சாஸ்திர முறைப்படி அமைப்பதில் முன்னின்று செயற்பட்டார். ஆனால் போர்ச் சூழல் காரணமாக மீண்டும் சிதைவடைந்து இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்துள் சிக்குண்டு அந்த ஆலயம் சீரழிந்தது. இக்காலப் பகுதியில் கனகசபை அவர்களும் நோய்வாய்ப்பட்டு (21-09-1990) இவ்வுலக வாழ்வை நீத்தார்.

கனகசபை அவர்கள் ஆற்றிய இறை பணியை அவரது பிள்ளைகள் ஊர் மக்களினதும் புலம்பெயர் வாழ் உறவுகளினதும் அனுசரணையுடன் தொடர்ந்து

*ஆற்றி வருகின்றனர். புனருத்தாரண சபை அமைக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வைரவர் ஆலயம் மீண்டும் எழுச்சி பெற்றுப், பொலிவுடன் விளங்கி, கும்பாபிஷேகம் நடைபெற்று, அருள் பாலிக்க இருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.*

## இளையதம்பி சின்னத்துரை (பத்தாயிரம்)



மயிலிட்டி தெற்கு, கட்டுவனூரில் பத்தாயிரம் சின்னத்துரை என ஊர் மக்களால் அழைக்கப்பட்ட அமரர் இளையதம்பி சின்னத்துரை அவர்கள் செல்வமும் செல்வாக்கும் பெற்ற வர்த்தகப் பிரமுகராவார்.

இவர் மயிலிட்டி தெற்கில் வாழ்ந்து வந்த இளையதம்பி-சின்னப்பிள்ளை இணையருக்கு மகனாக 1933 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பாலர் ஞானோதயக் வித்தியாசாலையில் கற்றார்.

இவர் ஆரம்பக் கல்வியைக் கற்கும்போதே, தமிழ் நாடு நம்புத்தாழை யைப் பூர்வீகமாகக் கொண்ட இஸ்லாமியப் பெரியவரான தாழையான் பாபா கட்டுவனுக்கு வருகை தந்திருந்தார். அவருடன் இளையதம்பிக்கு ஏற்பட்ட தொடர்பினால் பெற்றோரின் அனுமதியுடன் சிறுவனான சின்னத்துரையை கொழும்பிற்கு அழைத்துச் சென்றார்.அங்கு தாழை யான் பாபாவின் அன்புடனும் அரவணைப்புடனும் வாழ்ந்த காலத்தில் அவருக்குக் கிடைத்த பிரமுகர்களின் அறிமுகம், அவர் கற்றுக் கொண்ட வர்த்தக நுணுக்கங்கள் ஆளணித் தொடர்பாடல் பண்பு அவரை இள வயதிலேயே வர்த்தக முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியது. இது அவரது வாழ்க்கையையே திசை திருப்பியது.

17 வது வயதிலேயே, சவர்க்கார உற்பத்தித் தொழில் நிலையத்தை ஆரம்பித்து சில காலம் இயக்கினார். பொருளாதார இறுக்கம் காரணமாக அது செயலிழந்த பின் மனம் தளராது சுருவிலைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சிற்றம்பலம் அவர்களுக்குச் சொந்தமான சிற்றம்பலம் கம்பனி மற்றும் மகாலக்ஷ்மி அரிசியாலை ஆகிய நிறுவனங்களுக்கு முகாமையாளராக இணைந்து, திறமையாக நிர்வகித்து, அதனை இலாபமீட்டும் வர்த்தகமாக மாற்றினார்.

வர்த்தகத் துறையில் போதுமான அனுபவம் பெற்ற பின் பேலியகொடவில் அரிசியாலை ஒன்றினையும் P.R.M.Company என்னும் பெயரில் வியாபார நிலையத்தையும் ஆரம்பித்தார். 1960 களில் இருந்து இவரது வர்த்தகம் நிறுவனம் விரிவடைந்து, வவுனியா, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அரிசியாலைகளையும் கொழும்பில் உர உற்பத்தியாலை ஒன்றையும் நிறுவினார். அத்துடன் பிரித்தானியாவில் இருந்து கல்லுடைக்கும் இயந்திரத் தொகுதியினை இறக்குமதி செய்து கல்லுடைக்கும் தொழில் நிலையத்தை “ஜெய இலட்சுமி இன்ட்ஸ்றீஸ்” என்னும் பெயரில் கட்டுவனூரில் ஆரம்பித்தார். இது வர்த்தலை விளானில் நிறுவினார். இத்தகைய தொழில் நிலையங்கள் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கினார்.

சின்னதுரையின் கடின உழைப்பும் விடாமுயற்சியும் அன்பாகப் பழகும் பண்பும் சமுகத்தில் அவருக்கு நன்மதிப்பினைக் கொடுத்தது. அவரிடம் காணப்பட்ட சிறந்த ஆளணித் தொடர்பாடல் (Network) பண்பின் மூலம் வர்த்தகம், சமூகம், அரசியல், சமயம், கலைத்துறை போன்ற பல்துறை சார்ந்தவர்களிடமும் நெருங்கிப் பழகினார். புகழ்மிக்க தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி மற்றும் ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வர வித்துவான்களுடனும் நெருங்கிய தொடர்பைப் பேணினார். கே.பி.சுந்தராம்பாள், பாலமுரளி கிருஸ்ணா போன்ற தென்னிந்தியாவின் பிரபல இசைக்கலைஞர்களையும் கட்டுவனூருக்கு அழைத்துவந்து ஆலயங்களில் இசை நிகழ்ச்சிகளை நடாத்தி கலைஞர்களை கௌரவித்தார், மக்களையும் மகிழ்வித்தார்.


மயிலிட்டி தெற்கு, கட்டுவனூரில் வீரபத்திரர் ஆலயத்துக்கான கட்டுமானப் பணிகளில் நிதிப் பங்களிப்பினைச் செய்துள்ளார். அக்கோயிலின் பிள்ளையாருக்கான விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வித்து அதற்கான மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்தார்.

கட்டுவனூர் விளையாட்டுத் திடல், வாசிகசாலை என்பவற்றின் விஸ் தரிப்புகளுக்கும், திருத்த வேலைகளுக்கும் பேருதவி புரிந்தார். 1970 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யத் தனது அரிசி ஆலையிலிருந்து போதிய அளவு அரிசியினை வழங்கினார். குரும்பசிட்டி அம்மன் ஆலயத்தில் நீண்ட காலமாகத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கி வந்தார்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது, கொழும்பில் இருந்த இவரது வர்த்தக நிறுவனங்கள் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டன. எனினும் தொடர்ந்து தனது வர்த்தக நிறுவனங்களை மீட்டெடுக்கப் பெரு முயற்சி செய்தார். ஆனால் போர்ச்சூழல் தொடர்ந்து உக்கிரமடையவே, அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தார். அங்கும் சொந்தமாக ஒரு உணவகத்தை ஆரம்பித்தார்.

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வாறு சுறுசுறுப்புடனும், விடாமுயற்சியுடனும் செயற்பாட்டு வந்த சின்னத்துரை அவர்கள் நோய்வாய்ப்பட்டு 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார். வர்த்தகச் சிறப்பின் ஊடாக கட்டுவனூருக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர் வரிசையில் நிச்சயம் இவருக்கு ஒரு இடம் உண்டு.

## க.சின்னப்பு



கட்டுவனூரில் வாழ்ந்து வந்த திரு.கந்தையா திருமதி.க.சிதம்பரம் இணையருக்கு மகனாக க. சின்னப்பு அவர்கள் 1903 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி பிறந்தார்.

இவர் தனது கல்வியை கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் கற்று சிரேஸ்ட தராதர வகுப்பில் சித்தியடைந்தார். பின்னர் நில அளவையாளர் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, இலங்கையின் பல பாகங்களிலும் அரச நில அளவையாளராகப் பணி புரிந்தார்.

பின்தங்கிய கிராமமாகக் கருதப்பட்ட கட்டுவனூரைச் சில வருடங்களில் ஒரு முன்மாதிரியான கிராமமாக மாற்றிய பெருமைக்குரிய, பாலர் ஞானோதய சங்கத்தை ஆரம்பித்த ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவராவார். தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த போதும் சங்க செயற்பாடுகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார். தனது வயதைச் சார்ந்த இளையோர்க்கு வழிகாட்டியாக விளங்கிக் கல்வி, விளையாட்டுத் துறைகளில் ஊக்கமளித்தார். அதன் மூலம் கல்வியிலும் உதைபந்தாட்டத்திலும் சாதனை படைத்து, கட்டுவனூருக்குப் பலர் பெருமை சேர்த்தனர். சின்னப்பு அவர்கள் ஏழைச் சிறுவர்கள் கல்வி கற்பதற்காக “கல்வி நிதியம்” என்னும் அமைப்பை உருவாக்கி நடாத்திவந்தார். அதன் பொருளாளராகத் திரு.சி.நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் தனது இறுதிக் காலம் வரை செயற்பட்டுத் திறம்பட நடாத்தி வந்தார். இந்த அமைப்பின் மூலம் பல ஏழைச் சிறார்கள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

கட்டுவனூரிலும் அயல் ஊர்களிலும் ஆசிரியர்கள், பிரவேச பண்டிதர்கள், பாலபண்டிதர்கள் பண்டிதர்கள் எனப் பலரும் உருவாகுவதற்குக் காரணமாக இருந்த செந்தமிழ் தேர்ச்சிக் கழகத்தைத் தனித்து நின்று ஆரம்பித்து, அதற்குத்


*தேவையான ஆலோசனைகளையும் பண உதவிகளையும் வழங்கிப் பேருதவி புரிந்தார். வர்த்தலைவிளானில் பிரம்மஸ்ரீ வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவரது தமிழ்த் தொண்டு சிறப்பாக நடைபெற ஊக்கமளித்து உதவி புரிந்தார்.*

*சின்னப்பு அவர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ந்து கட்டுவனூர் மக்களின் மேம்பாட்டுக்காக அயராது செயற்பட்டு வந்தார். ஊர் மக்களின் நில அளவைப் பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் வல்லமை படைத்தவர். அந்திம கால சகாயநிதிச் சங்கத்துக்குத் தலைமை ஏற்று அப்பணிகளையும் நிறைவாகச் செய்து ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.*

*1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட க.சின்னப்பு அவர்களின் நினைவு மலரில் பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள் தனக்கும் சின்னப்பு அவர்களுக்குமான தொடர்பினைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "விளையாட்டு விருப்பினால் அதுவே கண்ணும் கருத்துமாகக் காலம் போக்கிய என்னை கல்விக்கு வழிகாட்டியவரில் முக்கியமானவர் சின்னப்பு அவர்களே. புத்தகங்கள் தேடித் தந்தும், வாங்கித் தந்தும், என் வல்லமையைப் பிறருக்குப் புகழ்ந்து கூறியும், முன்னேற்றம் கண்டு மகிழ்ந்தும் ஊக்கம் அளித்தார்கள். யான் ஒரு மனத் தூ ண்டலால் சந்நிதிக் கந்தன் மேல் சில பாடல்களைப் பாடிவிட்டு சோம்பி இருக்க அதனை அறிந்து, என்னை விடாது தூண்டி விரைவில் பாடி முடிக்கச் செய்து, தம் செலவில் அச்சிடுவித்ததோடு வெளியீட்டு விழாவும் அமைப்பித்து உதவியவர்கள் அவர்கள்"*

*சின்னப்பு அவர்கள் 90 ஆண்டுகள் வாழ்ந்து 23-03-1993 இல் அமரத்துவம் அடைந்தார். அவரது மனைவியார் காலமாகி 48 வது நாள் சின்னப்பு அவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். இணைபிரியாத அன்புடை நெஞ்சத்தவராக அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதனை இதன் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. ஆயிரம் பிறை கண்ட அவரது வாழ்க்கை கட்டுவனூருக்குப் பெருமை தரும் ஒரு வரலாறு ஆகும்.*

**சின்னையா நாகலிங்கம்.**



செல்வம் கொழிக்கும் விவசாய பூமியான மயிலிட்டி தெற்கில் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்து வந்த நாகர் சின்னையா கண்ணாத்தைப்பிள்ளை இணையருக்கு மகனாக 1921 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி சி.நாகலிங்கம் அவர்கள் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை விழிசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலையிலும், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும் கற்றார். விழிசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றபோது ஆறுமுகநாவலர் கல்விப் பரம்பரையைச் சேர்ந்த பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை அவர்களிடம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். 1932 ஆம் ஆண்டு மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையில், பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் ஆசிரியராக இருந்தபோது அவரது மாணவனாக ஆறாம் வகுப்பில் சேர்ந்து படித்தார். ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த பின்பும் பண்டிதர் நமசிவாயத்திடம் நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் போன்ற நூல்களைத் தொடர்ந்தும் படித்தார்.

மிகத் திறமையாகக் கல்வி கற்று வந்த இவர் திருநெல் வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில், ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்து, Etnuypah Holy Trinity College இல் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். தமிழ் மொழி, இலக்கண, இலக்கியங்களில் ஆழமான அறிவும், கற்பித்தல் திறமையும், நற்குணாதிசயங்களையும் கொண்ட நாகலிங்கம் அவர்களை இனம்கண்ட மகாஜனாக் கல்லூரியின் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்கள், அவரைத் தனது ஆசிரியர் குழுவில் இணைத்து கொண்டார். நாகலிங்கம் அவர்கள் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அங்கு ஆசிரியராக மட்டுமின்றி, பேச்சுப்போட்டி நாடகப் போட்டிகளின் போது மாணவர்களைத் தயார் படுத்துவதிலும் முன்னின்று செயற்பட்டார். கல்விப் பணிகளுக்கப்பால் ஏனைய முன்னேற்றப் பணிகளிலும் ஈடுபட்டார்.


1930 களிலேயே மகாஜனாக் கல்லூரி முதலாம் தரக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்ட போதிலும் காலையில் கூட்டுப் பிராத்தனை செய்யவும், நற்சிந்தனை உரைகளை செய்யவும் ஒரு மண்டபம் இருக்கவில்லை. அக்குறையை நீக்கும் பொருட்டு அதிஸ்டலாபச் சீட்டினை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதனை இலங்கையின் பல பாகங்களிலும் விற்பனை செய்வதில் நாகலிங்கம் அவர்கள் ஆர்வமுடன் ஈடுபட்டார். அனைவருடனும் அன்பாகப் பழகும் பண்புடையவராகையால், அவர் பணிபுரிந்த நுவரெலியாவிலும் பிற மலையகப் பகுதிகளிலும் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டது. 1953 ஆம் ஆண்டளவில் கல்லூரியின் கட்டுமானப் பணிகளுக்காக இந்தியக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் களியாட்ட விழாவும் ஒழுங்கு செய்யப்பட்டபோது அங்கும் விடாமுயற்சியுடன் தீவிரமாகச் செயற்பட்டார். இக்காலப் பகுதியில் சி. நாகலிங்கம் அவர்களும், கவிஞர் செ.கதிரேசபிள்ளை அவர்களும் இரட்டைக் குழல் துப்பாக்கி போல் செயற்படும் இரு தூண்களாக விளங்கினர்.

நாகலிங்கம் அவர்கள் பின்னர் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுடன் பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்றார். அங்கு சிலகாலம் பணியாற்றிய பின் மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையின் அதிபராக இடமாற்றம் பெற்றார். இவர் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை பல முன்னேற்றங்களைக் கண்டது. தரமுயர்த்தப் பட்டது. ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. நாகலிங்கம் அவர்கள் பாடசாலை அதிபராக மட்டுமின்றி பாலர் ஞானோதய சங்கத்தின் தலைவராகவும், அச்சங்கத்தின் கிளை அமைப்புகளில் உப தலைவராகவும் செயலாளராகவும் பொருளாளராகவும் பதவி வகித்து மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான் கிராமங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் பங்களித்துள்ளார். பாலர் ஞானோதய சங்கப் பிரித்தானியக் கிளையின் நிதிப் பங்களிப்புடன் கட்டுவனூருக்கு ஒரு விளையாட்டு மைதானத்தை உருவாக்குவதில் முன்னின்று செயலாற்றினார். மயிலிட்டி கிராம சபையிலும், அங்கத்தவராக இருந்து பொதுச் சேவையில் ஈடுபட்டார்.

மயிலிட்டி தெற்கில் இளையோர் அமைப்பாக விளங்கி வந்த கலை உடல் வளர்ச்சிக் கழகத்திலும் இளையோருடன் இணைந்து செயற்பட்டதுடன் ஆலோசனைகளை வழங்கித் திறமையாக செயற்பட ஊக்குவித்தார். மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான்.ஆகிய முக்கிராமங்களும் ஒன்றிணைந்து பாலர் ஞானோதய சங்கம் என்ற ஒரு குடைக்கீழ் முன்னேற வேண்டும் என்பது அவரது பிரதான குறிக்கோளாக இருந்தது.

சிறந்த ஆசிரியர், திறமை மிக்க நிர்வாகி, பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் ஆற்றல் போன்ற பன்முக ஆளுமை கொண்ட சி.நாகலிங்கம் அவர்கள் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார்.

## சின்னத்தம்பி அருணாசலம்



கட்டுவன் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சேதுப்பிள்ளை இணையருக்கு சிரேஷ்டமகனாக 1909 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி திரு.அருணாசலம் பிறந்தார்.

இவர் இடைநிலை மற்றும் உயர் கல்வியை முறையே தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் திறமையுடன் தொடர்ந்தார். இளமைப் பருவத்திலேயே மற்றிகுலேசன் (Matriculation) பரீட்சையில் சித்தியடைந்து, சிங்கப்பூர் சென்று தொழில் புரிந்து வந்தார்.

இவரது தகப்பனாரின் மறைவையடுத்து தனது இளைய சகோதர சகோதரிகளின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பிய அவர் அரச உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பணிபுரிந்தார். பின்னர் மயிலிட்டி கிராம சபைத் தலைவராகவும், சமாதான நீதவானாகவும், ஆயுட் காப்புறுதி முகவராகவும் செயற்பட்டு கட்டுவனூர் மக்களுக்குப் பேருதவி புரிந்தார். துறட்டையிட்டி ஞானவைரவர், வீரபத்திரர் மற்றும் காசியம்மன் ஆலயத் திருப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தான் படித்த மகாஜனாக் கல்லூரி மீது மிகவும் ஆர்வம் கொண்ட அருணாசலம் அவர்கள் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். குறிப்பாக 1953 ஆம் ஆண்டளவில் மகாஜனாக் கல்லூரியின் கட்டுமானப் பணிகளுக்காக யாழ் நகரில் கண்காட்சியும் களியாட்ட விழாவும் ஒழுங்கு செய்யப்பட்ட போது அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

போர்ச் சூழல் காரணமாக 1994 ஆம் ஆண்டு தனது பாரியாருடன் கனடாவுக்குக் குடிபெயர்ந்த அவர் தனது இளய மகள் வசந்தாதேவி மருமகன்

தர்மசீலன் மற்றும் பேரப் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகளை அறிந்த கனடா மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஒன்று கூடலின் போதும், இராப்போசன விருந்து வைபவங்களிலும் அவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்து கௌரவித்துள்ளன. கனடிய மண்ணிலும் தன்னை நாடி வந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, வாழ்ந்து வந்த அவர் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார்.

**சின்னத்தம்பி இராஜரத்தினம்.**



கட்டுவன், மயிலிட்டி தெற்கை வாழ்விடமாகக் கொண்ட, சின்னத்தம்பி சேதுப்பிள்ளை இணையரின் கனிஷ்ட புத்திரனாக இராசரத்தினம் அவர்கள் 1926 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதினேழும் திகதி பிறந்தார்.

இவர் தனது இளமைக்காலக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், மகாஜனாக் கல்லூரியிலும் கற்றார். பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் சிறந்த மெய்வல்லுனராகவும், உதை பந்தாட்ட வீரராகவும் விளங்கி ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அதேவேளை சிரேஸ்ட பாடசாலைத் தராதர பத்திரப் பரீட்சையிலும் திறமைச் சித்திகள் பெற்றுத் தான் படித்த பாடசாலைக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தார்.


ஒரு வயதிலேயே தந்தையாரை இழந்த இவர், குடும்பச் சூழ்நிலை காரணமாக உயர் கல்வியைத் தொடராது, தனது பத்தொன்பதாவது வயதிலேயே அரச சேவையில் இணைந்து கொண்டார். யாழ்ப்பாணம், பதுளை, வவுனியா, திருகோணமலை, புத்தளம், கொழும்பு போன்ற பல இடங்களிலும் கச்சேரிகளில் திறமையாகக் கடமையாற்றி, மக்களினதும் உயர் அதிகாரிகளினதும் நன்மதிப்பைப் பெற்றார். இவரது நிர்வாகத் திறமையை நன்கறிந்த உயர் அதிகாரிகள் இவரை 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பின் போதும், 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போதும் தேர்தல் அதிகாரியாகத் தெரிவு செய்தனர்.

இவர் துறைமுக ஆணைக் குழுவிலும், கல்வித் திணைக்களத்தில், மாகாண நிர்வாக அதிகாரியாகவும் பணி புரிந்த பின் யாழ்ப்பாணம் கச்சேரியில் காரியாலய உதவியாளராகக் (Office Assistant) கடமையாற்றினார். 1981 ஆம் ஆண்டு மயிலிட்டி, கிராம சபையின் விசேட ஆணையாளராக நியமனம் பெற்றார்.

*அப்பொழுது கட்டுவனூர் மக்களின் தேவைகளை அறிந்து விசேட கவனம் செலுத்திச் செயற்பட்டார். இறுதியாக ஓய்வு பெறும் வயதில் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிய போது தெல்லிப்பளை வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்தார்.*

*இராஜரத்தினம் அவர்கள் தான் படித்த பாடசாலையான மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டு விளங்கினார். மகாஜனக் கல்லூரி, பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். கல்லூரியின் கட்டுமானப் பணிகளுக்காக* 1953 *ஆம் ஆண்டளவில் தென்னிந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன், களியாட்ட விழா ஏற்பாடு செய்யப்பட்டபோது அதன் அமைப்பாளர்களுள் ஒருவராக இணைந்து செயற்பட்டார். பல்துறை ஆளுமை மிக்க இவர்* 1995 *ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்* 24 *ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.*

## கவிஞர் திருமாவளவன்



வர்த்தலைவிளானில் வாழ்ந்து வந்த கனகசிங்கம் தம்பதியினர்க்கு மகனாக 1955 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி திருமாவளவன் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் கருணாகரன் கவிதை உலகில் திருமாவளவன் என்னும் புனைபெயரில் வலம் வந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை வர்த்தலைவிளான், அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், உயர்தரக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் கற்றார். பின்னர் இலங்கை சீமந்து கூட்டுத்தாபனத்தில், கட்டடத் தொழில்நுட்ப மேற்பார்வையாளராகப் பணியாற்றினார்.

1990 ஆம் ஆண்டு வர்த்தலைவிளான் கிராமம் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு, அங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் நிரந்தரமாக, குடிபெயர்ந்தபோது திருமாவளவனும் அங்கிருந்து குடிபெயர்ந்து, இந்தியாவில் தமிழகத்திலே அகதியாகக் குடியேறினார். அங்கு வாழ்ந்தபோது ஜெயமோகன், சுந்தர ராமசாமி, ராஜமாத்தாண்டன், வெங்கட் சாமிநாதன், மோகனரங்கன் போன்ற எழுத்தாளர்களுடனும் கவிஞர்களுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். மேலும் சில காலம் கேரளா மாநிலத்திலும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார் என அறியக் கூடியதாய் உள்ளது.

திருமாவளவன் கனடிய மண்ணிலே கால் பதித்த பின்பு அவரது கவிதைப் பயணம் கனடாவிலும் தொடர்ந்தது. அவர் அதிகம் கவிதை நூல்களை எழுதவில்லை. நான்கே நான்கு கவிதை நூல்களை மட்டுமே எழுதினார். ஆனால் அவற்றுள் அடங்கிய விடயங்கள் எண்ணிலடங்கா. காதலைப் பற்றி எழுதினார். சூரியன், சந்திரன், ஆறு, மலை, மரங்கள், பறவைகள் போன்ற அனைத்தையும், தனது உள்ளக் குமுறல்களையும் மன ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளார்

அத்துடன் ஈழமக்களின் போர் வலிகள் முதல், புலம்பெயர் வாழ்வின் ஆரம்பகால அவலங்கள் வரை ஒவ்வொரு கவிதைகளும் மரத்தில் அறையப்பட்ட ஆணி போல் உறுதிபட வடித்துள்ளார்.

"திருமாவளவனின் கவிதைத் தொகுப்பு நூலான "பனி வயல் உழவு" 2000 ம் ஆண்டிலும் "அஹ்தே இரவு அஹ்தே பகல்" என்ற கவிதை நூல் 2003 ஆம் ஆண்டிலும், "இருள்-யாழி" 2008 ஆம் ஆண்டிலும், "முதுவேனில் பதிகம்" 2013 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. இவற்றுள் "அஹ்தே இரவு அஹ்தே பகல்" கவிதைத் தொகுப்பு நூல், தமிழ்நாடு சி.கனகசபாபதி நினைவுப் பரிசைப் பெற்றது. "இருள் - யாழி" என்ற கவிதை நூலுக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் சிறந்த கவிதைக்கான விருது கொடுக்கப்பட்டது. அவரது கவிதைகளின் தொகுப்பு நூலாக "சிறு புள் மனம்" வெளிவந்தது. இவரது பல கவிதைகள் ஆங்கில மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டு வெளிவந்த "யுத்தத்தை தின்போம்" என்ற கவிதைத் தொகுப்பின் மூன்று கவிஞர்களுள் திருமாவளவனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1995 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இவர் கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவராகவும், அதே காலப்பகுதியில் கனடாவில் வெளிவந்த " ழகரம் சிற்றிதழின் இணையாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

அவர் தனது ஊராகிய வர்த்தலைவிளானை மையமாக வைத்துக் கவிதைகளைப் படைத்தாலும், வடபுலத்தில் பல கிராமங்களுக்கு அல்லது ஊர்களுக்கு பொருந்துவனவாக அவை அமைந்துள்ளன. போர் காரணமாகப் புலம்பெயர்ந்த பலர், தமது சொந்த ஊர்களை மறக்க முடியாமலும், மறுபுறம் புலம்பெயர் வாழ்வில் தம்மை இணைத்துக் கொள்ள இயலாமலும், இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல அவதிப் படுவதையும் அவரது பல கவிதைகள் வெளிக் கொணர்ந்துள்ளன. இவ்வாறு மிக நுட்பமாக, பல்வேறு கோணங்களில் கவிதைகளைப் படைக்கும் ஆற்றல் கொண்ட திருமாவளவன் புற்றுநோய் காரணமாக 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி கனடாவில் காலமானார்.

ஏறக்குறைய இருபது ஆண்டுகள், கவிதை, கலை இலக்கிய உலகில் வலம் வந்த திருமாவளவன், பல காத்திரமான கவிதைப் படைப்புகளை தமிழ் உலகுக்கு உவந்தளித்த போதிலும், அதிகம் பேசப்படாத, அல்லது இலைமறை காயாக உதிர்ந்து போனமை ஆச்சரியமானதாகும்.

# பேராசிரியர் ச.விநாயகமூர்த்தி



வறுத்தளைவிளானைப் பூர்வீகமாகக் கொண்ட திரு.ச.விநாயகமூர்த்தி அவர்கள் தற்பொழுது கரவெட்டியில் வாழ்ந்து வருகிறார். மிகுந்த அடக்கமும் அமைதியும் கொண்ட இவர் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டவர். அனைவருடனும் அன்பாகப் பழகும் இவரை ஊரவர்கள் “விநாயகமூர்த்தி அண்ணை” என அழைப்பார்கள்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். பின்னாளில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அத்துடன் உயர் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தொலை தூர ஆங்கிலக் கல்விப் பயிற்சி (Distance Education.) நெறியின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

சைவ சமயத்தில் மிகுந்த பற்றும், ஆழ்ந்த அறிவும் வாய்க்கப்பெற்ற இவர், தங்குதடையின்றி, ஆற்றொழுக்குப் போன்ற சொற்பொழிவுகள் மூலம் கேட்போரைத் தன் வசப்படுத்தும் ஆற்றல் உடையவர். போர்க் காலத்துக்கு முன்னர், வர்த்தலைவிளானிலும் அயற்கிராமங்களிலும் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் இவரது சமய சொற்பொழிவுகள் பரவலாக இடம்பெறும்.

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய பரிபாலன சபை, திருப்பணிச் சபை ஆகியவற்றில் தலைவராகப் பணியாற்றிச் சேவை புரிந்துள்ளார். போர்க் காலத்தில் பலாலி இராணுவ முகாமின் உயர் பாதுகாப்பு வலயத்துள் சிக்குண்டு சீரழிந்த மருதடி விநாயகர் ஆலயம், விடுவிக்கப்பட்ட பின்னர், அதன் புனருத்தாரணப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். புனருத்தாரணப் பணிகள் நிறைவு பெற்று நடைபெற்ற கும்பாபிஷேகத்திலும் முதன்மையேற்றுச் சிறப்பித்தார்.

*வர்த்தலைவிளான் கட்டுவன், மயிலிட்டிதெற்கு மக்கள் விநாயகமூர்த்தி அவர்களைத், தமக்குக் கிடைத்த ஒரு சொத்தாகவே கருதுகின்றனர். அதுவே அவருக்குக் கிடைத்துள்ள வெகுமதியும் ஆகும்.*

## பொன்னையா பாலசிங்கம்



*பொன்னையா பாலசிங்கம் அவர்கள் பாலர் ஞானோதய வித்தியாசாலையின் ஆசிரியரும் முதலாவது அதிபருமாகிய அம்பலம் பொன்னையா அவர்களின் மகனாவார். ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பின்னர் இலங்கை அரசாங்கத்தில் எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொழும்பில் பல ஆண்டுகளும் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சில ஆண்டுகளும் கடமையாற்றினார்.*

*இவர் இளமைக் காலத்திலிருந்தே சைவ சமயத்தில் பற்றும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர். வருடாவருடம் திருக்கேதீஸ்வரத்துக்கு, யாத்திரை மேற்கொள்ளும் இவர் அங்கு மகாவிஷ்ணு விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து கொடுத்தார்.*

*போர்ச்சூழல் காரணமாக கனடிய தேசத்துக்குக் குடிபெயர்ந்த இவர் அங்கும் ஆன்மீகப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். ஆலயங்களில் தேவார, திருவாசக பதிகங்களைப் பாடியும், புராண, இதிகாசங்கள் பற்றி உரை நிகழ்த்தியும் வந்துள்ளார். இவரது ஆன்மீகப் பணியைப் பாராட்டி ஸ்ரீ நாகபூஷ ணி அம்பிகா சமேத நாகலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகம் "புராண ஆர்வலர் மணி" எனப் பட்டமளித்து கௌரவித்தது.*

*ஆத்தமஜோதி நா.முத்தையா அவர்களின் கொள்கையால் கவரப்பட்ட பாலசிங்கம் அவர்கள் ஆத்மஜோதி நிலையத்துடனும் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தார். அத்துடன் மொன்றியல் நகரில் ஆத்மாஜோதி கல்வி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சிறப்பாக வழி நடத்தினார். கனடாவில் வெளியிடப்பட்ட "தமிழ் மகள்" என்னும் மாத இதழில் நக்கீரரின்*

*திருமுருகாற்றுப்படைப் பாடல்களுக்கு, சாதாரண மக்களும் இலகுவில் விளங்கிக் கூடியதாக எளிமையாக உரை எழுதி வந்தார்.*

*பாலசிங்கம் அவர்கள் திருமுருக கிருபானந்தவாரியாரிடமும் ஆசி பெற்றவர். அதனால் "வாரியார் தாசன்" எனவும் அழைக்கப்பட்டார். இவ்வாறு ஆன்மீக வழியில் தன்னை அர்ப்பணித்து கட்டுவனூருக்குப் பெருமை சேர்த்த பொ.பாலசிங்கம் அவர்கள் 14-12-2008ல் கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.*

## பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கம்.



கட்டுவனூருக்குப் பெருமை,சேர்த்தவர்களுள். நம் மத்தியில் வாழ்ந்து வருபவர் மதிப்பற்குரிய பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கம் அவர்கள். இன்று நாங்கள் கொண்டாடும் பாலர் ஞானோதய சங்கத்தின் முதல் தலைவராகவும் ஊரின் மேம்பாட்டுக்கென வாழ்ந்தவருமான வங்கியாளர திரு.கந்தவனம் பொன்னம்பலம் அவர்களின் பெறாமகன்.சங்கத்தின் தலைவராக விளங்கிய சுதேச வைத்தியரும் சைவாசாரானுஷ்ட சீலருமான பரிகாரியார் வேலுப்பிள்ளை நாகமுத்துவின் பேரன். இவர்கள் பணிகளிலெல்லாம் துணையாகி இறுதிவரை ஊரின் சங்கங்களைக் காத்து நின்ற ஆசிரியர் கந்தவனம் நாகலிங்கம் ஊரின் மாதர் சங்க செயற்பாடுகளில் பெரிதும் உழைத்த திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் ஆகியோரின் அன்பு மகன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வழியில் கிராம மட்டங்களிலும் நாடளாவிய நிலையிலும் மக்கள் மேம்பாட்டுக் கான பணிகளின் ஆலோசகராகவும் தலைமைப் பொறுப்பிலும் தொடர்ந்து இயங்கிவருபவர் சண்முகலிங்கம்.

இவர் இடரான ஒரு காலப்பகுதியில், 2007 முதல் 2011 வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பல்கலைக் கழகத்துக்கான செம்மையான தலைமைத்துவத்தினை வழங்கிய பெருமைக்குரியவர். தமிழில் சமூகவியலை பல்கலை கழகமட்டதில் நிலை நாட்டிய புலமையாளர் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் -மானிடவியல் கல்வியின் தந்தை என போற்றப்படுபவர். உலகளாவிய பல ஆய்வரங்குகளுக்கு தலைமை தாங்கியவர் இந்தியா, யப்பான், ஜேர்மனி,ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா,தென் ஆபிரிக்கா, மலாவி போன்ற நாடுகளின் சர்வதேச ஆய்வரங்குகளின் ஆதார சுருதி உரை (Key note Address),ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தவர்ஆய்வு வழிகாட்டியாக விளங்குபவர். அவரது ஆய்வுகள் பல நூல்வடிவம் கண்டுள்ளன. தமிழ் புலமை மரபுக்கு செழுமை சேர்ப்பன.

சமயத்தின் சமூகவியல் (Sociology of Religion) இவரின் சிறப்பு ஆய்வுத்துறையாகும். உலகப்புகழ்பெற்ற மானிடவியல் பேராசிரியர் கணநாத் ஒபய சேகர அவர்களின் வழிகாட்டலில் அவர் மேற்கொண்ட கலாநிதிப்பட்ட ஆய்வு New Face Of Durga : Religion and Social Change in Jaffna, New Delhi காலிங்கா பதிப்பக வெளியீடாகப் புகழ் பெற்றது. துர்க்கையின் புது முகம், யாழ்ப்பாணத்தில் சமயம்,வழிபாடு,மாற்றங்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் பக்தவத்சல பாரதி அவர்களினால் தமிழாக்கம் செய்யப்பட்டது, சமயத்தின் சமூகவியலோடு மேம்பாட்டின் சமூகவியல், (Sociology of Development),பண்பாடும் ஊடகங்களும், (Culture and Media), இனமரபு இசையியல்(Ethnomusicology) சார்ந்த இவரது ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கன.

சவுத் விஷன் வெளியீடான, சமூக மாற்றத்தில் பண்பாடு, பண்பாட்டின் சமூகவியல், மரபுகளும் மாற்றங்களும், சமூக பண்பாட்டு சிந்தனை, தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர், சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், அறிவின் சமூகவியல் சிந்தனைகள், இந் நூலும் வடமாகாண பண்பாட்டியல் திணக்கள விருதுபெற்றது. மேலும் 'இலங்கை - இந்திய மானுடவியல்' என்ற நூலை பேராசிரியர் நா.சண்முகலிங்கமும் முனைவர் பக்தவத்சல பாரதியும் இணைந்து எழுதியுள்ளனர். சமயம் சமூகம் பற்றிய 14 ஆய்வுக் கட்டுரைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன அவற்றுள் கதிர்காம முருகன், சமூகமானிடவியல் தரிசனம், ஈழத்தில் கண்ணகியின் அடையாளம், யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு, அறிவும் உணர்வும் அரசியலும், பௌத்தம் துரோகம் செய்தது? நூல் தடை விவகாரம் - ஒரு மீளாய்வு, ஈழத்தில் இசையும் சமூக மாற்றமும், சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி, சமூக மானிடவியல் புலமாகக் கட்டடக்கலை ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகளை நா.சண்முகலிங்கம் எழுதியுள்ளார். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், இதனை. 2014. ஆம் ஆண்டு வெளியிட்டது. சிறந்த ஆய்வு நூலுக்கான தமிழக "பேராசிரியர் வானமாமாலை நினைவு விருது" கௌரவத்தினை இன் நூல் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. சுவாமி விபுலானந்தர், தமிழிசை சார்ந்த அவரது அண்மைக்கால ஆய்வுகள் சிறப்பான கவனம் பெறுவன.

சமூகவியல் புலமையாளர் என்பதற்கு அப்பால்,நாடறிந்த கவிஞராகவும் எழுத்தாளராகவும் நாடக, ஆக்க இசை கலைஞராகவும் பல்கலை ஆற்றல்களுடன் புகழ் பெறுபவர் பேராசிரியர். இந்தவகையில் 1975 ஆம் ஆண்டு பாலர் ஞானோதய கலை- உடல் வளர்ச்சிக் கழகத்தின் வெள்ளி விழா மலரில் இவரால் எழுதப்பட்ட "பொன்னுலகின் காதலர்கள்" என்ற கவிதை பலரது பாராட்டைப் பெற்றமை நினைவுப்பதிவாகும். வானொலி, திரைப்பட ஊடகங்களில் அனுபவம் கொண்டவர். சண்முகலிங்கம் பல தன்னுணர்ச்சிப் பாடல்களை இயற்றியுள்ளார் "சந்தன மேடை", "வானத்து வண்ணத் தாரகை" ஆகியன ஈழத்தின் முதல் மெல்லிசைத் திரட்டான "கங்கையாளே" யில் இடம் பெற்றுள்ளன. இவர் ஒரு சிறந்த மெல்லிசைப்

பாடகருமாவார். இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்பான திரைப்படமொன்றில் இணை இயக்குனராகவும் பணிபுரிந்துள்ளார். பாரதி பாடல்களை போர்க்கால ஈழத்துப் பிரச்சனைகளுடன் இணைத்து பாரதி நூற்றாண்டு விழாவின் போது, இவர் தயாரித்தளித்த "காலக்குயில்" சிறந்த ஒரு கலைப்படைபாகும்.

ஆக்க இசை அரங்கம் என்ற பெயரில் பிந் நாளில் இவர் தயாரித்தளித்த மானசி,கண்ணீரைத் துடைத்துக்கொள் என்பனவும் குறிப்பிடத்தக்கன. தனது தாயார் நகுலேஸ்வரியின் நினைவாக இவர் நிறுவிய நகுலேச்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் அம்மா,ஆத்மா ஆகிய இரண்டு இசைத்தமிழ் இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிறுவன சார்பில் இவரது இசையாக்கங்கள் இன்று You Tube இல் வலம் வருகின்றமையும் பெருமைக்குரியது.

சண்முகலிங்கம் சிறந்த ஒரு எழுத்தாளருமாவார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி நூலான "ஊழித்தாண்டவம்" மணிமேகலைப் பிரசுரத்தினால் 2004 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த நூலிலே, வெளிவந்த பெரும்பாலான கதைகள் கொழும்புப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் எழுதப்பட்டவை. அத்துடன் ஈழத்து மண்ணின், போர்க்கால அனர்த்தங்களின் வெளிப்பாடாக சில கதைகளும் அதில் இடம் பெற்றுள்ளன. ஊழித்தாண்டவம், அவலச் சுவை, அசட்டை, நானும் நானும், சுமைதாங்கி, உணர்ச்சிகள், உண்மையும் ஒரு விபத்தாய், கைமேற்பலன், புறமல்லஅகம், அப்பா வருவாரா?, பதியெழு அறியா, ஆகிய சிறுகதைகளைக் கொண்ட இந்தநூல், வாசகர் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றது. இவர் எழுதிய பிற நூல்கள், என் அப்பாவின் கதை, என் அம்மாவின் கதை, என் அக்காவின் கதை, சந்தன மேடை கவிதை நூல், கறுப்புக்கவிதைகளின் ஈழத்து முதல் தமிழாக்கத் தொகுப்பாக நாகரிகத்தின் நிறம்-கவிதை நூல் பெருமைப்படுத்தப்படும். இது சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. மற்றும், யுனெச்கொ சிறுவர் ஆண்டு பரிசு நாவலான சான்றோன் எனக் கேட்ட தாய், இப்பொழுது 'தோதன்ன 'அமைப்பினரால் சிங்கள மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றினைவிட இவரது காட்சிசார் மானுடவியல் விவரணச்சித்திரங்களான, புன்னைச் சோலைஅம்மன் சடங்கும் வழிபாடும், மண்டூர் முருகன், தொன்மையும் தொடர்ச்சியும், யாழ்ப்பாணத்தில் ஐயப்பன்வழிபாடு, என்பன குறிப்பிடத்தக்கன.

நா.சண்முகலிங்கம் அவர்களின் பன்முக ஆளுமை குறித்து ஆய்வு செய்த திருமதி.தாரணி ஆஷரூரன் அவர்கள் "கலைஞரான துணைவேந்தர்" என்னும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற இவர், அளவெட்டி அருனோதயாக் கல்லூரி ஆசிரியராவார். தமிழர் இன வரையியல் கழகத்தினால் வெளியிடப்பட்ட இந்நூல், 2019 ஆம் ஆண்டு வவுனியாவில்

நடைபெற்ற. சாகித்திய விழாவில், சிறந்த, ஆய்வு நூலுக்கான பரிசைப், பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆழ்ந்த சைவசமய நம்பிக்கையும், தமிழ் மொழிப் பற்றும், கட்டுவனூர் மண்ணில் அளவிலாக் காதலும் கொண்ட, நா.சண்முகலிங்கம், எந்த மேடையில் உரையாற்றினாலும், கட்டுவனூர் வசந்தன் கூத்தின் ஓரிரு வரிகளைப் பாடி, விளக்கம் சொல்லாது, அவரது உரை பெரும்பாலும் முடிவதில்லை.

# 15

# பின்னிணைப்புகள்

## தென்மயிலை, ஞானவைரவ சுவாமி போற்றிப் பத்து

**தென்மயிலை, பண்டிதர் இ. நமசிவாயம்**
**சமாதான நீதவான் அவர்கள் ஆக்கியது.**

*காப்பு*

*தென்மயிலை மேவும் சிவஞான வைரவர்மேல்*
*நன்குதமிழ்ப் பாமாலை நான்பாடத் தொன்மருதின்*
*மூலமமர் மூன்றுமத நாலுவாய் ஐந்துகரன்*
*சால உதவுந் தமை.*

*நூல்*

*தென்மயிலை நன்னகரில் திருக்கோயில்*
*கொண்டருளும் தேவே எங்கள்*
*மன்னுகுல தெய்வதமாய் மருவுதுயர்*
*தீர்த்தருளும் வாழ்வே வேதா*
*பன்னுமறை ஞமலிமிசை இவர்ந்துலகு*
*பவனிகொடு பரிபாலித்து*
*நன்மைநெறி காட்டியருள் ஞானவயி*
*ரவநாம நாதா போற்றி* 1

*பாற்கடலி னறிதுயில்கொள் பண்ணவனின்*
*உந்திவரு பங்க யத்ததோன்*
*மேற்கோடெழு கருவத்தின் மிகுபிரமம்*
*நானென்ன விளம்ப வெள்ளை*

*ஏற்றனவன் பவந்தொலைத்துக் கருணைசெய*
*எண்ணித்தன் இதையத் தின்கண்*
*தோற்றுவிப்ப வந்தருளும் தூயவனே*
*நினதரிய துணைத்தாள் போற்றி* 2

*காரிரவி ஒருகோடி உதித்தென்ன*
*மிக்கவொளி காலு மெய்யும்*
*ஆரழலிற் செஞ்சடையும் முக்கண்ணும்*
*நாற்கரமும் ஆடை யின்றிப்*
*பேரரவு சுற்றரையும் பிறங்குமொளிச்*
*சிலம்பலம்பப் பெற்ற தாளும்*
*சேரரிய கோலமொடு மேலண்டத்*
*தமர்ந்தருளல் செய்வாய் போற்றி* 3

*முத்தலைய சூலமழு பாசங்க*
*பாலமிவை முறையில் நான்கு*
*கைத்தலையி லேந்தியயல் காலவே*
*கன்முதலாங் கண்கள் சூழ*
*எத்தலையு மேகியெதிர் தேவரிரத்*
*தம்பலியைக் கபாலத் தேற்று*
*மெத்தருளி னாலவருக் குயிர்நல்கி*
*மயலறுத்த விமலா போற்றி* 4

*பாரணங்கும் பூரணங்கும் தன்னிரண்டு*
*பாங்கமரப் பாம்பின் வேந்தாம்*
*பேரணையில் வீற்றிருக்கும் நெடுமாலும்*
*நிற்காணிற் பெயர்தந் தோடிச்*
*சீரடியில் வீழ்ந்தைய செய்தபிழை*
*ஏதென்று செப்பும் நின்சீர்*
*சோரரிறிவின் நாயடியோம் சொல்லிலடங்*
*காதெங்ஙன் துதிப்போம் போற்றி* 5

*அண்டமவை அழிகின்ற அவதினியிற்*
*சிவபெருமான் ஆணை யாலே*
*பண்டவைகள் படைத்திட்ட பங்கயனை*
*ஏனையுள பகவர் தம்மை*
*மண்டியமற் றுயிர்த்தொகையை மடிவித்துப்*
*பொடியரக்கி மறைமா ஞானி*

கொண்டகொடி மீதுயர்த்தி மகிழ்வோடும்
உலாவருநற் கோலம் போற்றி 6

அண்டரிய அண்டமுக டுறுபதத்தின்
மிசைவைகும் அமலா நம்மில்
கொண்டபெருங் கருணையினால் உருக்கொண்டு
குவலயத்திற் கோவில் மேவித்
தொண்டுபடு மடியவரின் துயர்நீக்கிச்
சுகமருளும் தொன்மை நோக்கி
அண்டியுனை வழிபடுவோம் அசையாமாற்
காத்தியெமை ஐயா போற்றி 7

ஒளிவளர நின்றுதிரு கோவிலின்கண்
விளக்கிட்டோர்க் குள்ளம் தன்னில்
தெளிவினொடு கண்ணொளியும் சிறந்திடநீ
அருள்செய்யும் செய்தி நோக்கி
அளிவளர நினதுபணி ஆற்றினமக்
கும்நலன்கள் ஆகும் என்னும்
தெளிவினொடு பணிகின்றோம் தீவினைகள்
நீக்கியருள் செய்வாய் போற்றி 8

சித்திரையில் ஐப்பசியில் சேர்பரணி
தைமதியிற் சேரும் செவ்வாய்
இத்தினத்தில் நினைநோக்கி விரதமனுட்
டித்தவரும் கிம்மை யேநீ
சித்தியளித் தவர்வாழ்வு செம்மையுற
அருள்கின்ற செய்தி நோக்கிப்
பக்தியொடு பணிகின்றோம் எய்யாமற்
காப்பாய்எம் பரமா போற்றி 9

அருமைபெறும் அறுபத்து மூவருக்கும்
அர்ச்சனைசெய் தன்ன தானம்
தருமிடமாய்ச் சைவகுலத் தவர்சூழ்ந்து
மகிழ்ந்துறையும் தான மாகிப்
பெருமைபெறு பதிதுறட்டை யிட்டியினிற்
பிறங்கு பெருங்கோவில் பேணும்
பொருவரிய வைரவரின் பொன்மலர்த்தாள்
நாணாளும் போற்றி போற்றி. 10

முற்றிற்று.

## தென்மயிலை - துறட்டையீட்டி
## அருள்மிகு ஞானவைரவர் திருஊஞ்சல்

*காப்பு*

*நிலமேவும் அடியவரும் விசும்புளாரும்*
*நிறைந்தேத்தும் தென்மயிலை நகரின் மேய*
*வலமேவு ஞானவயி றவரின் மீதே*
*வடிவுதமிழின் ஊஞ்சலிசை தமியேன் பாடச்*
*சலமேவு கங்கையுடன் மதியும் சூடும்*
*சங்கரனும் உமையவளும் தழுவித் தந்த*
*கலமேவும் ஒற்றைமருப் பைங்கை ஞானக்*
*கரிவதனக் கடவுள்துணைக் கழல்காப்பாமே.* 1

*நூல்*

*சீரேறு நாதவிந்து கால்க ளாகத்*
*தெளிவேறு சத்தியணி விட்ட மாக*
*நீரேறு தந்திரநூல் இழைய தாக*
*நிலயேறு மறைகளெல்லாம் கயிற தாகப்*
*பேரேறும் உபநிடதம் பலகை யாகப்*
*பெரிதேறு பிரணவம் பொற்பீட மாக*
*ஊரேறு தென்மயிலைப் பதியின் மேவும்*
*உக்கிரவை ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல் .* 2

*அதிமதுரக் கவிகவிஞர் அன்பில் சாற்ற*
*அந்தணர்கள் வந்துபல பணிக ளாற்றத்*
*திருவடியை நினைந்துபல பணிக லாளாற்றிச்*
*சிறந்தசைவர் நெய்த்தகழித் தீபம் ஏற்றச்*
*சுருதிமொழி யுடன்அமரர் மலர்கள் தூற்றச்*
*சுந்தரத்தோ ரணவரிசை சூழ்ந்து தோற்றச்*
*பெருமைசெறி தென்மயிலைப் பதியின் மேவும்*
*பெரியவயி ரவதேவே ஆடீ ருஞ்சல்.* 3

*சடைமவுலி தொடையலுடன் தயங்கி ஆட*
*தாள்விளங்கு தண்டலைகலின் கலினென் றாட*
*இடைவிளங்கு மணிஅரவக் கச்சு மாட*
*எழில்விளங்கு மூக்கவர்கொள் சூல மாடப்*
*புடைவிளங்கு சத்திஅருட் காளி யாடப்*
*போந்தருள்செய் வாகனமாம் ஞமலி யாட*

நடைவிளங்குந் தென்மயிலைப் பதியின் மேவும்
        நல்லவயி ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 4

தெண்டிரையார் கடல்ஒலியின் முரசம் ஆர்ப்ப
        திறனறியாழ்ப் பாணரிசை செவியியற் கேக்க
அண்டர்கள்தம் கற்பகப்பூ மாரி தூற்ற
        அன்பர்முகக் கண்களெலாம் அழகு பார்க்கப்
பண்டெரியும் வேதியர்தம் பாவம் தீர்க்க
        பலமனிதர் தங்கரங்கள் சிரமேல் சேர்க்க
எண்டகைய தென்மயிலைப் பதியின் மேவும்
        எந்தைவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல் 5

நான்முகன்தன் சிரங்கொய்து கர்வம் நீக்கி
        நாரணன்தன் நெற்றியுறு நாடி வாங்கிக்
கான்கமலக் கையிலுறு கபாலம் தேங்கக்
        கடிதிரத்தப் பலி ஏற்றங் குயிரை நல்கி
வான்முகத்தார் கர்வமெல்லாம் அடக்கி யாண்ட
        வான்புகழார் தேவாஅத் தேவர் மேவும்
பான்மைதெரி யாதிரங்கப் படியை யாளும்
        பரவுவயி ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 6

வடமணிந்த முலைகாளி வாமத் தாரே
        வடிவுசெறி செந்தொடையாந் தாமத்தாரே
விடமணிந்த கண்டர்தரு விமலத் தாரே
        வேதமறை சிலம்பினடிக் கமலத் தாரே
நடனமிடு மறைஞானி மீதி னேறி
        நன்றருள்வான் தெருவீதி உலாவு கொள்ளும்
புடவியமர் தென்மயிலைப் பதியின் மேவும்
        போற்றுவயி ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 7

பூதந்த புண்ணியராம் அன்ப ருள்ளப்
        போதிலுரை வயிரவரே ஞால மீதில்
நாதந்த புகழ்பரவார் நடுங்கி ஏங்க
        நற்றண்டம் புரிந்தடக்கித் தொண்ட ராக்கும்
ஏதம்தீர் முழுமுதலே ஈசன் மைந்தா
        ஏழைஅடி யேம்செய்த குற்றம் நீங்கப்
போதஞ்சேர் தென்மயிலைப் பதியின் மேவும்
        பொருவில்வயி ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 8

தண்டிக்க வந்தவரே ஓல மோலம்
தற்பரனே நாமடியோம் ஓல மோலம்
எண்திக்கும் காப்பவரே ஓல மோலம்
எவ்வகைய துன்பமெல்லாம் எளிதி னோட
தொண்டருக்கு முன்வருவீர் ஓல மோலம்
துய்யஅருட் கருங்குதிரை ஏறி வந்தே
அண்டர்தொழும் தென்மயிலைப் பதியின் மேவும்
அருள்வயிர வக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 9

பொற்பிரமன் சிரம்களைந்தீர் ஆடீ ரூஞ்சல்
போற்றினருக் கருள்புரிவீர் ஆடீ ரூஞ்சுல்
தற்பரனார் புத்திரரே ஆடீ ரூஞ்சல்
தாழாதார் உதிரமுண்டீர் ஆடீ ரூஞ்சல்
வற்றலுறாத் தேந்தொடையீர் ஆடீ ரூஞ்சல்
வடுகன்எனும் பெயருடையீர் ஆடீ ரூஞ்சல்
நற்றவர்சூழ் தென்மயிலைப் பதியின் மேவும்
ஞானவயி ரவக்கடவுள் ஆடீ ரூஞ்சல். 10

நாமகளும் பூமகளும் நயந்து வாழ்க
நன்மையுறும் உலகமழை செழித்து வாழ்க
கோமகனும் செங்கோலும் குடையும் வாழ்க
குணமேவும் சிவனடியார் சிறந்து வாழ்க
வாமனன்முன் விண்ணவர்கள் மகிழ்ந்து வாழ்க
மண்ணுலக மனிதரெலாம் அன்பாய் வாழ்க
பூமகள்வாழ் தென்மயிலைப் பதியின் மேவும்
பொருவில்வயி ரவக்கடவுள் வாழ்க வாழ்க 11

சுபம்.

எச்சரீக்கை.

நேர்வார்மல மூலம்மகழ் நிமலா எச்சரிக்கை
நேரார்அகங் காரம்மழி நேசா எச்சரிக்கை
பார்மேலவர் நாளுந்துதி பகவா எச்சரிக்கை
பரசேந்திய ஈசன்உமை பாலா எச்சரிக்கை.

பராக்கு.

அன்பருளப் போதுவிரி அமலா பராக்கு
அருள்வேத ஞாளிமிசை அமர்வோய் பராக்கு
இன்ப நிறை காளியொடும் இசைவாய் பராக்கு

*ஏதமகல் சூலகர இறைவா பராக்கு.*

*மங்களம்.*
*மாதேவ நாதனுக்கு மங்களம் - மான*
*மாகாளி நேசருக்கு மங்களம்*
*வேதாந்த மேலவற்கு மங்களம் - மின்னின்*
*மேனி வயிரவர்க்கு மங்களம்.*
*முற்றும்.*

*குறிப்பு:*
*தென்மயிலை ஞானவைரவர் போற்றிப்பத்து, தென்மயிலை ஞானவைரவர் திருவூஞ்சல் ஆகிய இரு ஆக்கங்களும் 17.11.1979 ல் வெளியிடப்பட்ட சைவத் திருவாளர் சீனிவாசகம் . விஜயசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்த வெளியீட்டிலிருந்து பெறப்பட்டவை.*

## மயிலிட்டி தெற்கு, தென்மயிலைப்பதி அமர்ந்த அலவத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிகா சமேத வீரபத்திரர் மேற்பாடிய திருவூஞ்சல்.

காப்பு.

*சீர்மருவுந் தென்மயிலைப் பதிமேலோங் கித்திகழுங்*
*சீரல வத்தையெநுந் தலத்தில் வாழும்*
*ஏர்மருவுஞ் செயவீர பத்திரப்பே ரிறைக்கோர்*
*எழிலூஞ் சலினி தாய்யாம் பாடக்*
*கார்மருவுங் கந்தனொடு வுமையா ளீன்ற*
*களிதருமும் மதமொரு நீள்வெண் கோடுந்*
*தார்மருவுங் கொன்றை யணிசடை மேனீருந்*
*தான்குகய முகவனடி காப்ப தாமே.*

நூல்

*ஒளிதிகழும் பவளமதாற் கால்கள் நாட்டி*
*உயர்வைர இரத்தினத்தால் விட்டம் நாட்டிக்*
*களிதருசெம் பொன்னதனாற் பலகை நாட்டிக்*
*கண்கவருஞ் சித்திரம் பலவுந் தீட்டிக்*
*குளிர்தரு நித்தில வெண்கயிறு பூட்டிச்*
*செய்ய வெழி லூஞ்சலி லினிதுமேவி*
*தெளிவுதரு தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்*
*செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல்.* 1

*துன்னுதவ வலிபடைத்த மலரோன் சேய்முன்*
*துணிவினொடு செய்தபெரு மறைசேர் வேள்வி*
*தன்னிலவி யுண்ணவருந் தகைசேர் வானோர்*
*தமையினவின் றணல்வேள்வி முற்றாவண்ணம்*
*மின்னு முடிகொண்டு மனத்தோன்று மன்பால்*
*மேடமுடி தனையவற்று விறலோ டியுமே*
*துன்பிலாத் தென்மயிலைச் சீரவைத் தைவாழுஞ்*
*செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல்* 2

*வஞ்சமர் பூரியெனின் மனத்தின் றேவா*
*வளரன்பு வாய்ந்து மனமாசு தீர்ந்து*
*கஞ்சமர்த் தத்தம் மதத்தைக் கருதுவோர்க்குக்*
*காதலித்த பொருளெலாம் களிக்க நல்கிப்*
*பஞ்சடிகொள் பத்திர காளிப்பேர் கொண்ட*
*பாரியொடு பண்ணவர்தம் பாசம் நீங்கத்*

துஞ்சலிலாத் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
        செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 3

ஏடுசெறி கமலநிகர் ஈரஞ் சாறும்
        எழில்திகழ் மானமு மிறும்பூ நீரும்
அடர்செறி நாலஞ் ஞாற்றளவு கொண்ட
        அரும்புயமுங் கொண்ட தொருதேவே, ஆம்பற்
காடுசெறி யோடைகளுஞ் கழனி வைப்புங்
        கருமழையின் செளுமை காணுங் காவுஞ்
சேடுயர்த் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
        செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 4

கங்கைவளர் சடைமுடியுங் கார்முகி லோடுங்
        கலைமதியும் எரியுமிழ் கண்ணோர் மூன்றுஞ்
செங்கைவளர் மானுடைச் செல்வ னுக்கும்
        செம்பவள வாயும் இருசேவார் கண்ணுங்
கொங்கைவளர் எழிலுடைக் கோதை யாட்கும்
        குணங்கொள் பெருஞ் சேயாகிக் குருவைத்
தெங்குவளர் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
        செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 5

அருள்மலர்சே ரடியார் தேவரெனு மவர்தாம்
        அருள்வணங் காவதற் கிருளே யிடமதாகிப்
பெருமை கொளும்பதம் பணிவோர் நரகரேனும்
        பேரருள்செய் யமரர்கள் நாடளிக்குந் தேவே
இருவினைகள் தனைநீக்கி யுனையே போற்றும்
        இவ்வுலகோர்க் இகபர மருளும் நாதனாய்த்
திருகுமுந் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
        செயவீர பத்திரரே யாடீ ஞ்சல் 6

முக்கனியுங் தீஞ்சுவை மவிலான் பண்டமும்
        முகைநெகிழா விளநீரும் படைபரப்பி வைத்து
பக்தியுட னடியார் பரவிப் பணிந்தேத்தும்
        பரங்கருணைத் தண்கடலே ஆடீ ரூஞ்சல்
தக்கன் தறுகண் தொலைத்த தேவே
        தகைஞான மணிவிளக்கே ஆடீ ரூஞ்சல்
தக்கோரின் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
        செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 7

ஆறாத் துயரமெலா மாற வேணும்
அன்புநெறி தழைக்க வறமோங்க வேணும்
தேறா மெய்ஞானந் தேற வேணும்
சிவன்சிந்தை சேர்ந்தோங்க வேணும்
மாறான மனங்கள் மாள வேணும்
மாகடை மிடிகள் மறைந்திட வேணும்
சீரான தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
செயவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 8

அருமறையு மந்தணரும் ஆதிரையும் வாழி
அகல்வான் மழையும் அணியாய் வாழி
திருமறையுஞ் சிவமயமுஞ் சிறப்பாய் வாழி
திருநீருங் கண்டிகையுஞ் செழிப்பாய் வாழி
பெருமைசால் கோன்முறையும் பேறாய் வாழி
பிறங்குகலை வல்லுனர்கள் பீடாய் வாழி
திருவுடைத் தென்மயிலைச் சீரலவத் தைவாழுஞ்
செயவீர பத்திரச்சீ ரடியாரும் வாழி. 9

அன்பு மொழியாம் அருந்தமிழும் வாழி
அருமறை மொழியாம் ஆரியமும் வாழி
கன்னிகர் மாதர்தம் கற்பும் வாழி
கூர்தல ஞானியர்தம் கொள்கையும் வாழி
இன்சொற் பண்பும் இனிதாய் வாழி
ஈடிலா நன்னெறியும் ஈண்டிங்கு வாழி
தென்மயிலைச் செல்வனொடு சீராளும் வாழி
தூயநற் சீரடியாரும் வாழி வாழி 10

எச்சரீக்கை

சிவமறியாக் கேடர்க்குச் சத்துருவே எச்சரிக்கை
சிவமறிந் தோர்க்குச் சற்குருவே எச்சரிக்கை
சிவநிந்தை செய்வோர்க்குச் சிம்மமானாய் எச்சரிக்கை
சிவசிந்தை செய்வோர்க்குச் சிவமானாய் எச்சரிக்கை.

சொன்மாலைக் கிரங்குஞ் சோதியே எச்சரிக்கை
நின்னடி யார்க்கருளும் நிமலா எச்சரிக்கை
முன்வினை தீர்த்தருளும் முதல்வா எச்சரிக்கை
சின்மயா னந்தச் சித்பரனே எச்சரிக்கை.

பராக்கு

சங்கரனார் நுதவிடைத் தோற்றியவா பராக்கு
செங்கையிற் திரிசூலந் தாங்கியவா பராக்கு
மங்கை பத்திரை மணாளா பராக்கு
பங்கமுறத் தக்கனவிபறித்தவா பராக்கு.

தக்கனின் தறுகண் துடைத்தவா பராக்கு
சக்தியின் வீறுடைச் சிவமைந்தா பராக்கு
பக்தரின் வினைதீர்க்கும் புண்ணியா பராக்கு
பக்குவ நெஞ்சிற் புகுந்தவா பராக்கு.

லாலி

மூவாதி மூர்த்தியர்க்கும் லாலி சுபலாலி
        மூக்கண் மூலவர்க்கும் லாலி சுபலாலி
தேவாதி தேவர்க்கும் லாலி சுபலாலி
        தூயபஞ்ச பூதர்க்கும் லாலி சுபலாலி
பூவாதி மாந்தர்க்கும் லாலி சுபலாலி
        பேதைமிலாச் சான்றோர்க்கும் லாலி சுபலாலி
சீவாதி சீலர்க்கும் லாலி சுபலாலி
        தென்மயிலைக் காவலர்க்கும் லாலி சுபலாலி.

விரிசடைக் கடவுளின் வீரமைந்தா லாலி சுபலாலி
வன்கணாளர் சிரமழித்த வீரா லாலி சுபலாலி
அரியயன் பிழைதனை யுணர்த்தியவா லாலி சுபலாலி
ஆணவத் தக்கனை யழித்தவா லாலி சுபலாலி.

திரிபுர மெரித்தோன் திருக்குமரா லாலி சுபலாலி
திரிசூலக் காளியின் துணைவா லாலி சுபலாலி
விரிபுகழ்த் தென்மயிலை வீரா லாலி சுபலாலி
வீரபத் திரத்தேவ வேளே லாலி சுபலாலி.

மங்களம்.

வீராதி வீரனுக்கு மங்களம்-எங்கள்
        வீரபத் திரர்க்கு மங்களம்
சூராதி சூரனுக்கு மங்களம்-எங்கள்
        செயவீர பத்திரர்க்கு மங்களம்
பேரான புண்ணியர்க்குமங்களம்-எங்கள்
        பூமிக் காவலர்க்கு மங்களம்.
சீரான மாந்தர்க்கு மங்களம்-எங்கள்
        தென் மயிலை நாதர்க்கு மங்களம்.

இவை புதியவையாகப் பாடப் பெற்றவை.
வேறு.

வீரபத்திரர் தோற்றம்.

அந்தி வான்பெரு மேனியன் கறைமிட றணிந்த
வெந்தை தன்வடி வாலய னுதல்விழி யிடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
முந்து வீரபத் திரனேனுந் திறலுடை முதல்வன்.

கந்தபுராணம் - தக்சன காண்டம்
வீரபத்திரப் படலம், பாடல்: 14.

பத்திரகாளி தோற்றம்.

அங்க வேலையி லுமையவள் வெகுளியா லடல்செய்
தங்கை யாகிய பத்திர காளியை நல்கச்
செங்கை யோரிரண் டாயிரம் பாதிசெம் முகமாய்த்
துங்க வீரபத் திரன்தனை யடைந்தனள் துணையாய் .

-

கந்தபுராணம் - தக்சன காண்டம்
வீரபத்திரப் படலம் ,பாடல் 15.

சுபம்.

இத் திருவூஞ்சல் அமரர் நாகலிங்கம் குலசிங்கம் அவர்களின் நினைவாஞ்சலி மலரில் பின்னிணைப்பாக 01.08.1986 ல் வெளியிடப்பட்டது. இதன் மூலக் கையெழுத்துப் பிரதியை கொடுத்துதவியவர், தென்மயிலை, கு. பாலசுப்பிரமணியக் குருக்கள். அதனை செப்பமிட்டுத் திருத்தியும் புதுக்கியும் எழுதியவர், திரு. அனு. வை .நாகராஜன்.

## யாழ். கட்டுவன் வளமாரி வைரவர் சுவாமி திருவூஞ்சல்.

*கட்டுவன் வளமாரியைச் சேர்ந்த ஸ்ரீராம் விக்னேஸ் என அழைக்கப்படும் இரத்தினசிங்கம் விக்னேஸ்வரனால் எழுதப்பட்டது.*

*காப்பு வெண்பா.*

*கற்றவர் போற்றுகின்ற கட்டுவானாம் ஊரிலென்றும்*
*நற்றமிழ் வாழும்வள மாரியதில் - சொற்றமிழால்*
*ஊஞ்சற்பா வைரவர்க்கு ஓதவே கரிமுகத்தோய்*
*வாஞ்சையாய் வாழ்த்தை வழங்கு.*

*சரஸ்வதி துதி.*

*ஆழியது சூழநின்று அழகு செய்து*
*ஆணிமுத்தாய் கோலமுறும் அன்னை பூமி*
*ஈழமதில் யாழிலுரைதெல்லிப் பழையில்*
*இருக்கின்ற கட்டுவன்வள மாரிப் பத்தியில்*
*ஊழதனால் உடைவுற்றும் உதித்தேமீண்டும்*
*உயிர்கொள்ளும் குலதெய்வம் வைரவர் மீது*
*வண்ணமுறக் கலைமகளே வாழ்த்து தாயே.*

*உன்கலைகள் அறுபத்தி நான்கே யென்று*
*உலகமது புகழ்ந்தேதான் ஏற்றல் போலத்*
*தன்பணிகள் அறுபத்தி நான்கும் செய்யத்*
*தக்கவுரு அறுபத்தி நான்கே கொண்டு*
*அன்புடனே காக்கும்குல தெய்வ மான*
*அட்டதிக்கும் தோன்றும்எட்டு வைரவ மூர்த்தி*
*இன்பமுற்றே காசியுறைகண்டோம் கோவில்*
*இருந்திடம்மா கட்டுவன்வள மாறி ஊரில்.*

*ஊஞ்சல்*

*கொண்டவொரு வரத்தாலே அந்தகா சுரனும்*
*குற்றத்தின் வடிவாகி இருளாய்ச் சூழ்ந்து*
*கண்டபடி வதைத்திட்டான் முனிவர் தேவர்*
*காலம்சொல் கிரகமெல்லாம் காலில் போட்டான்*
*உண்டான நிலையதனை உடனே மாற்ற*
*உக்கிரத்தைக் கொண்டகால பைரவ ரேநீர்*
*கண்டித்தீர் கட்டுவன்வள மாரி ஏகி*
*காக்கும்குல தெய்வமே ஆடீர் ஊஞ்சல்.* 1.

எண்திசைக்கும் இருள்நீக்க ஏகிய சுடரே
எடுத்தீரே தோற்றங்கள் திசைக்கொன் றாக
எண்தோற்றம் அசிதாங்கம் ருரு சண்ட மோடு
இருந்தகுரோ தனமும்உன் மத்தம் மற்றும்
கண்ணெதிரே கடூரமிகு கபாலத் தோற்றம்
கண்டோமே அடுத்துவரும் பீசஷனம் சம்ஹாரம்
மண்ணில்எம் குலதெய்வம் ஆகிவள மாரி
மாண்புறவே கட்டுவனில் ஆடீர் ஊஞ்சல். 2.

அன்னமதை வாகனமாய் அமைத்தே கொண்ட
அசிதாங்க வைரவரே ஆடீர் ஊஞ்சல்
பொன்னவனால் எய்திவிட்ட தோஷம் தீர
புகழ்மிக்க காசியிலே விருத்த காலர்
அன்னவரின் கோவிலே அமர்ந்த மூர்த்தி
அருள்செய்யும் சக்தியவள் பிராம்ஹி யோடு
என்னவரின் குலதெய்வம் கட்டுவ னூரில்
எழுகவள மாரிப்பதி ஆடீர் ஊஞ்சல். 3.

சுக்கிரனால் சுடப்பட்ட தோஷம் ஓட
சுகப்படவே துடிப்போர்கள் தொழுதே தேட
தக்கருரு வைரவநின் மஹேஸ்வரி கூட
தாயவராம் காமாட்சி கோவிலை நாட
சிக்கலின்றி வாழவைக்க சிறப்பைத் தருவோய்
சிலிர்க்கின்ற ரிஷபவா கனத்தே வருவோய்
எக்கணமும் அருளும்குல தெய்வம்வள மாரி
எழுந்தருளிக் கட்டுவனில் ஆடீர் ஊஞ்சல். 4.

செக்கச் சிவந்தநிறக் கிரகம் செவ்வாய்
செயலிழப்பால் குடும்பத்தின் தோஷம் தீர
சக்தியவள் கௌமாரி துணையி னோடு
சண்டவைரவ வர்சுவாமி மயிலின் மீது
பக்தியத்தை உளம்கொண்டு பரவு வோர்க்கு
பக்குவமாய் காக்கும்துர்க்கை கோவில் போல
அக்கறையாய் கட்டுவன்வள மாரி வந்து
அருளும்குல தெய்வமே ஆடீர் ஊஞ்சல். 5.

கருடனைவா கனங்கொண்ட குரோதன மூர்த்தி
காமாட்சி கோவிலிலே வைஷ்ணவி யோடு
கருமைநிற காகமதைக் கொண்டோன்சனியின்
கனமான தோஷமதால் பொலிவிழந் தோர்கள்
வருமதுநாள் அஷ்டமிசேர் தேய்பிறை தன்னில்
வடைமாலை சாற்றியேதான் வணக்கம் செய்தால்
தருமதுபார் குலதெய்வம் கட்டுவன்வள மாரி
தக்கதுணை வைரவரே ஆடீர் ஊஞ்சல். 6.

வாகனமாய் குதிரைதனைக் கொண்டே யோக
வடிவமதில் தோன்றிடும்உன் மத்த மூர்த்தி
யோகவிடம் பீமசண்டி கோவில் ஆகும்
ஜொலித்துநிற்கும் வராஹியவர் சக்தி யாகும்.
போகிடவே வைத்திடுவார் புதனால் தோஷம்
புதனொடு பொன்னும்குல தெய்வம் பேசும்
ஆகிடவே தொழவேவள மாரி வந்து
அருள்புரிந்தே கட்டுவனில் ஆடீர் ஊஞ்சல். 7.

சந்திரனால் தோஷமுற்றோர் சரிவால் ஏங்க
சங்கடங்கள் தீர்ந்துவிட சலனம் தூங்க
வந்தேலோட் பசார்கொவில் வணங்கித் தாங்க
வந்தருள்வார் யானையிலே கபால மூர்த்தி
இந்திராணி சக்தியென இருந்தே ஓங்க
இனியவொளி வீசவைத்தே இருளும் நீங்க
சுந்தரமாய் ஆக்கும்குல தெய்வம்வள மாரி
சுகமருளிக் கட்டுவனில் ஆடீர் ஊஞ்சல். 8.

மாந்தருடல் பாம்புதலை கொண்டே சுற்றும்
மகாஞான காரகராம் கேதுவின் நெஞ்சால்
போந்துவிட்ட தோஷமதால் பொருளில் வீழ்ச்சி
பொல்லாத மனக்குழப்பம் பதட்டம் நீங்க
காந்தமெனக் கலந்தசக்தி சாமுண்டி யோடு
காக்கும்குல தெய்வமே சிங்கத்தில் பீக்ஷானா
சேருந்தபூத பைரவதலம் கட்டுவன் ஊரில்
செப்புவள மாரியென ஆடீர் ஊஞ்சல். 9.

மனித்ததலை கொண்டேதான் அரவ மான
மாராகு கோளதனால் கண்ட தோஷம்

புனித்ததலம் திரிலோஸ்ன சங்கம் வாழும்
புண்ணியசம் ஹாரருமத தருளால் மாழும்
இனித்ததுணை சண்டிகையே என்றும் இருக்க
எங்கள்குல தெய்வமது ஞமலியில் சிறக்க
கனித்தகவி செய்தேன்வள மாரிக் கடலே
காத்தேதான் கட்டுவனில் ஆடீர் ஊஞ்சல். 10.

கடைக் காப்பு

ஆண்டன்று ரௌத்திரியாம் இருபதில் கோவில்
ஆகியது வைகாசி கடைசிச் செவ்வாய்
நீண்டபுகழ் வைத்தியராம் நாக முத்து
நிறைக்கரத்தால் குலதெய்வக் கோவில் வைத்தார்
வேண்டியவர் மைத்துனராம் கந்தை யாவும்
விளக்கேற்றி திருவருளும் கிடைக்கப் பெற்றார்
தாண்டியதாம் நூற்றாண்டில் தமிழ்செய்து ஊஞ்சல்
தந்து(உ)வந்தேன் அவர்பேரன் விக்னேஷ் வரனே.

## கட்டுவன், தண்ணிதாள் ஞானவைரவர் திருவூஞ்சல்.

*காப்பு*

*சீரேறு மீழவள நாட்டின் மேவும்*
*திருவேறு மியாழ்ப்பாண தேயந் தன்னில்*
*வாரேறும் பூகநிரை யோங்கி வாழும்*
*வலியேறுங் கட்டுவனூர் தண்ணித் தாளின்*
*தாரேறும் வைரவநற் கடவுண் மீது*
*தமிழேறு மூஞ்சலிசை தமியேன் பாடக்*
*காரேறு மும்மதமும் பாயுந் தெய்வக்*
*கவினேறும் யானயடி காப்ப தாமே.* 1

*நூல்*

*வின்மலியும் பவளமணித் தூண்க ணாட்டி*
*விரவுமணி வச்சிரத்தால் விட்ட மோட்டி*
*மின்மலியுந் தரளமணிக் கயிறு பூட்டி*
*விலைமதியா மாணிக்கப் பலகை மாட்டிப்*
*பொன்மலியுந் திருவூஞ்ற் பீடம் போந்து*
*புவியினர் தந்துயர் நீங்கிப் பொலிவு சேர்ந்து*
*மன்மலியுந் தண்ணித்தாள் மகிழ்ச்சி யூர்ந்து*
*மருவலரும் வைரவரே யாடீ ரூஞ்சல்.* 2

*பாங்கரெல்லா மலர்மாலை நின்றே யாடப்*
*பந்தரெலாந் தொங்குமணி முத்தம் நீடத்*
*தேங்கிடமேற் செக்கர்நிகர் பட்டு மூடச்*
*சேர்கதலி தோரணமெங் கெங்குங் கூட*
*தூங்குசுடர்ப் பெரியமணி மண்ட பத்தே*
*யொன்னலர்தம் பகைநீத்து மேன்மை தாங்க*
*மாங்குயிலார் தண்ணித்தாள் கொண்ட வேத*
*மந்திரநல் வைரவரே யாடீ ரூஞ்சல்* 3

*சூரியனுஞ் சந்திரனுங் கவிகை தாங்கச்*
*சுந்தரவிந் திரன்கரத்தின் களாஞ்சி தாங்க*
*வாரியிறை கரமதனிற் கவரி தாங்க*
*மாருதனும் பொன்னால வட்டந் தாங்க*
*காரமரா மேருவகை நெஞ்சந் தாங்கக்*
*கருணைதிரு வுள்ளமது நின்று நீங்காத்*

*தாரமருந் தண்ணித்தாள் தகைமை யோங்கத்*
*தாங்கியசீர் வைரவரே யாடீ ரூஞ்சல்.* 4

*பேரிமுதற் பல்லியமுங் கூடி யேங்கப்*
*பேரமரர் தூர்க்குமலர் மாரி தேங்கத்*
*தேரடியா ரானந்தக் கூத்துத் தூங்கத்*
*திவ்வியரா மந்தணர்த மாசி யோங்க*
*ஆரமுதற் பல்பொருளின் கந்தந் தாங்க*
*அவ்விருவர் யாழினெழு மோசை வீங்க*
*நீரமலர்த் தண்ணித்தாள் நேச வாச*
*நின்மலமார் வைரவரே யாடீ ரூஞ்சல்.* 5.

*துங்கமுறு சம்பாவி னமுதும் நெய்யும்*
*தூயதயிர் பால்கனிதேன் மற்று முள்ள*
*தெங்கிளநீர் வெற்றிலைபாக் காதி வைத்துச்*
*செய்முறை யானபெருஞ் சேவை செய்து*
*பங்கமற வேத்துமடி யார்கள் வேண்டும்*
*படியருளி யவர்காத்த லேது வாக*
*மங்கலமார் தண்ணித்தாள் மருங்கி னில*
*வாகனங்கொள் வைரவரே யாடீ ரூஞ்சல்* 6.

*எவ்வுலகும் படைத்தளித் தழிக்கு மீசன்*
*எழிற்சைவ சமயத்தின் றலைவ னான*
*தெவ்வடுமூ விலைச்சூல பாணி யென்று*
*தெரிந்திருந்து மகங்காரங் கொண்ட வேதா*
*ஐவ்வியனார் சென்னியிலொன் றழியக் கிள்ளி*
*யமராகங் காரமுடன் சென்னி கொண்டீர்*
*கவ்வையகல் தண்ணித்தாள் வாழ வெண்ணிக்*
*கரசூல வைரவரே யாடீ ரூஞ்சல்.* 7.

*மணிமுடிகள் சென்னிமிசை யாட வாட*
*மலர்மாலை தோளினிடை யாட வாட*
*அணியுமுப வீதம்மார் பாட வாட*
*அழகியபொற் பட்டுமிடை யாட வாட*
*பணியுறுமின் னாரமுமே யாட வாட*
*பாவலர்தம் புகழ்மாலை யாட வாடப்*
*பிணியகலுந் தண்ணித்தாள் பெட்பு வீறப்*
*பெருமைசெறி வைரவரே யாடீ ரூஞ்சல்* 8.

*கந்தமலர்த் தாரினரே யாடீ ரூஞ்சல்*
*கனகமணி மௌலியரே யாடீ ரூஞ்சல்*
*வந்தவினை தீர்ப்பவரே யாடீ ரூஞ்சல்*
*வாகனவெம் ஞாளியரே யாடீ ரூஞ்சல்*
*அந்தவயன் சிரமறுத்தீ ராடீ ஷூருஞ்சல்*
*அருட்கடலே யாய்நின்றீ ராடீ ரூஞ்சல்*
*சந்ததமுந் தண்ணித்தாள் தழைக்க வந்த*
*தன்மைபெறும் வைரவரே யாடீ ரூஞ்சல்.* 9.

*வேதியரான் மன்னரவர் பின்னோர் வாழி*
*விண்முகில்பெய் தங்கனையார் கற்பு வாழி*
*பூதியொடு கண்டிகைஞ் செழுத்தும் வாழி*
*புகலுமறை யாகமசாத் திரங்கள் வாழி*
*சோதியரன் பாதநினை தொண்டர் வாழி*
*தொண்டர்வழி பாட்டினுறுந் தொகுதி வாழி*
*ஆதிசுதன் வைரவர்தம் மருளும் வாழி*
*அழகுநிறை தண்ணித்தாள் வாழி வாழி.* 10.

*எச்சரிக்கை.*
*மலரார்மதி முடியார்தரு மகனே யெச்சரிக்கை*
*மருவார்புர மெரியூட்டிதன் மணியே யெச்சரிக்கை*
*அலரானரி யறியாவொரு வமலா வெச்சரிக்கை*
*அரவாமணி செறிவாகிய வணியா யெச்சரிக்கை.* 1

*அயனார்தலை யறுத்தோய்சுர ராசே யெச்சரிக்கை*
*ஆனாமறை முடிவாகிய வறிவா வெச்சரிக்கை*
*வியனார்தரு பரிபூரண வெளியே யெச்சரிக்கை*
*வேதாகம முணராவொரு விமலா வெச்சரிக்கை.* 2

*பொன்னார்பிர ணவமாமொழிப் பொருளே யெச்சரிக்கை*
*புகலேயடி யவர்தாம்பெறப் புரிவோ யெச்சரிக்கை*
*வின்மேவுதண் ணித் தாளிடை விழியே யெச்சரிக்கை*
*மிளிர்ஞாளியென் றுரைவாகன விமலா வெச்சரிக்கை.* 3

*பராக்கு*
*சீலமதி யாரருளும் செல்வா பராக்கு*
*திக்கிறைவர் யாருமதி தேவா பராக்கு*
*நீலநிற வாகனமெய் நிமலா பராக்கு*
*நின்றபுகழ் துன்றுசிவ நேசா பராக்கு.* 1.

அட்டதிசை போற்றுமிறை யாவாய் பராக்கு
அன்பர்தமக் கின்பமருள் அன்பா பராக்கு
இட்டகுல தெய்வமெனு மிறையே பராக்கு
கல்விமறை ஞானிவரு கர்த்தா பராக்கு. 2.

லாலி.
சைவத்தமிழ் காவலர்க்கு லாலி சுபலாலி
சகலருக்கும் அருளானார் லாலி சுபலாலி
தைவதமாம் சூலற்கு லாலி சுபலாலி - குல
தெய்வமாகி வாழவைப்பார் லாலி சுபலாலி

மங்களம்.
மங்களமே சுப மங்களமே
மங்களமே ஜெய மங்களமே.
வித்தாக வினாயகர்க்கு மங்களமே
வள்ளி குஞ்சரி வேலவர்க்கு மங்களமே
கொற்றவை சிவ துர்க்கைக்கு மங்களமே
குலங்காக்கும் கோபாலர்க்கு மங்களமே.

தாயகத்தின் காவலர்க்கு மங்களமே
தண்ணித்தாள் ஐயனுக்கு மங்களமே
நேயமுடன் அறங்காக்கும் அந்தணர்கள் அடியவர்கள்
யாவருக்கும் எந்நாளும் ஜெய சுப மங்களமே.

மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்.

குறிப்பு:
கட்டுவன் ஸ்ரீ மயிலிட்டிதெற்கு திரு . கந்தவனம் பொன்னம்பலம் அவர்களின் நினைவு மலரிலிருந்து (11-11-1965) பெறப்பெற்றது..

## வசந்தன் நாடகம்.

1 களவசந்தன்

விருத்தம்.

பூவார் தண்ணலை கொளவத்தை நகராதி
பத்திரை புகர் மணாளன்
நாவாற் செந்தமிழ் வீரபத்திரன்மேல் வசந்த
நாடகம் நான்பாட
கோவார் சந்திர மௌவி கோடீரன் தந்த
ஒற்றைக் கொம்பனான
தேவாதி தேவன் நம்கைப்பிள்ளை பொற்றாள்
மறவாதென் சிந்தைதானே.

தரு.

தென்னாதே னாதெனன் னோதே நாதெனத்
தெந்தென தென்னானே
1. செந்திரு வாழல வத்தை நகர்
சித்திர வத்திரசெகத்திரத்தோன்
சுந்தரஞ் சேர்வீர பத்திரன் மேல்
சொற்றமிழ் சேர் வசந்தன் பாட - தென்னாதே

2. மந்திர வேதமு தற்பொருளாய்
வந்து கற்றோட்ட வளம்பதி வாழ்
சந்திரக் கொம்பரே ரம்பர் துணை
தாழ்மலர் என்னும் பணிவோமே - தென்னாதே

3. உந்து புகழல வத்தை நகர்
உத்தமி பத்திர காளியுடன்
வந்துறையுஞ் செய வீர பத்திர
வரதன் மேல் வசந்தன்பாட - தென்னாதே

2. தன்னாள்

தரு

தத்தனத னத்தன தானித்த நத்தன
தானாத தத்தனதானின

1 செக்கரஞ் சடை குலுங்க திரி சூல வேலிலங்க
செகசோதி தேரில் வாற தாரன்னே -தத்தனத

1. முக்கணாதி கற் பகர் போர் முதல்வன் முன்னாகவர மூர்த்தி வீர பத்திரன் வாறார் காண்மின்னே -தத்தனத

2. சங்கர சிவாய வென்றுசிங்க வாகனத்திலேறி
தையல்பாகமாக வாற தாரன்னே - தத்தனத

3. செல்லப்பிள்ளை

விருத்தம்

மருத்திகளலங்கைப் பத்ரை மகிணனும் வீரபத்திரன்
உருத்திர னலவத்தை பேர் உயர்வளம் பொருந்தும் நாட்டில்
அபருத்த புத்தகத் தொடாணி பிடித்துமா நிருத்த மாடித்
திருத்தமிழ் விருத்தம் பாடிச் செல்லப்பிள்ளை தோற்றினாரே.

தரு.

நன்னேனா நன்னேனான நன்னேனான நான நான
1. மல்லல் வீர பத்ர சுவாமிவாழு மலவத்தை நாட்டில்
கல்லுருகப் பாடியாடிச் செல்லோப்பிள்ளை தோற்றினாரே
-நன்னே
2. சுத்தவரன் புத்ரனான சுவாமி வீர பத்ர நாட்டில்
சித்திர வித்தாரங் கற்ற செல்லோப்பிள்ளை தோற்றினாரே -நன்னே

3. உண்டகறைக் கண்டனருள் உக்ரவீர பத்திரநாட்டில்
செண்டு மாலை முண்டாசிட்டு செல்லோப்பிள்ளை
தோற்றினாரே -நன்னே

4. காப்பிலி

விருத்தம்

பாற்புயல் மொழியாள் வீரபத்திரைக் கன்பனான
வேற்கர வீரபத்திரன் மேலையோன் வாழு நாட்டில்
சூற்புயலிரிய வார்த்துத் துப்பாக்கி தோளில் வைத்து
காற்பிலிப் பறங்கிவந்து களரியிற் தோற்றினானே.

தரு

தானத் தினானே தனந்தன தானத் தீனானே
1. வாங்கு விற்பிடித்து கள்ளுண்டு மதவெறி பேப்பமிட்டு
காக்குஞ்சட்டையிட்டு கிஞ்ஞோ ரெனும் காப்பிலிதோற்றினானே -தான

2. துள்ளித் துள்ளித் குதித்து தரிகிடதோம் மென்று பன்பாடு
கள்ளுங் குடித்துக் கொண்டு ஏப்பமிட்டு காப்பிலி தோற்றினானே -தான

3. வச்சிரச் சட்டையிட்டு தொப்பாரம் வயங்கச் சிரத்திலிட்டு
கைச் சோறுப் பீலாப் போர்த்து தொம் தெய்யென்று காப்பிலி தோற்றினானே.
-தான

4. பை நாகதந் தரித்த சடை வீரபத்திரன் வாழ் நாட்டில்
கிஞ்ஞோராம் வெலுச் சொல் பறங்கி சிறப்புடன் தோற்றினானே. -தான

5. மல்லகச்செட்டி

விருத்தம்.

வல்லொத்த தனத்தாள் பத்திரை மகிணான வீர சுவாமி
நல்லொப்பாய் பொருந்தும் கீர்த்தி நாட்டிலவத்தை நாட்டில்
கல்லொத்த புயத்தாராடக் கலன் பூட்டிக் கச்சை கட்டி
மல்லகச் செட்டி வந்து வயம் பெறத் தோற்றினாரே.

தரு

தானானே தானானெ தந் தான தனந்தன தானானே.
1. பொன்னின் பதக்கங் கட்டிப்புலி பாலரை வெருட்டி
வன்னத்துடைகள் தட்டி மல்லகச்செட்டியும் தோற்றினாரே. -தானானே.

2. சங்கீத ராகம் பாடி தமனியத் தாருஞ்சூடி
மங்காச் சிரமாடி மல்லகச் செட்டியும் தோற்றினான்-தானானே.
3. கொக்கரித்துத் துடைதட்டிக் குனிந்து கொப்பாரங் கொண்டாடி
வக்ர துண்ட நகை காட்டி மல்லகச்செட்டியும் தோற்றினானே. -தானானே

6. சின்னக்கோன்

விருத்தம்

வன்னிப் பாயத் துகிலுடுத்து வைபிரச் சங்கில்கள் பூட்டி
தன்னொப் பாரில்லே யென்று செய வீர பத்திரன் நாட்டில்
உன்னிப்பாய் எழுந்து துள்ளி ஒடுங்குவாய் மிடுக்கும் பேசி
சின்னக்கோன் களரி தன்னிற் சிறப்புடன் தோற்றினாரே.

தரு

தனந் தனந்தன தானா தம் தான தனதந்தன தான
1. கன்னக் கோலா சின்னக்கோனே களுதைளெங்கே விட்டாய் மகனே
என்னடி யாத்தாள் பின்னிட்டுக் கழுதைகள் இருப்பலிக்காட்டுக்குள்
கரம்பைக்குள் போச்சுது -தனந்

2. குறிப்பாகக் கழுதையை மறிக்க நான் போனேன்
கொழுத்துப் போய் நாவல்கள் பழுத்தங்கே யிருந்தன
பறிப்பே னென றோடிப் போய்க் கறிப் பாலைக் கொடிக்குள்ளே
பதுங்கினேன் முசுறுகள் வளைந்ததென்னாத்தாள்.-தனந்

3. வளைத்த முசுறுகள் களைத்து வந்தொளிக்குது
இழுத்து விழுத்தடா சாலவ நொண்டி
நோய்த்த கழுதையை மேய்த்து வாவென்
றாய்ச்சி அருளின் பேச்சினால்.

7. நொண்டி.

விருத்தம்

முத்தமிழ்க் கொருவனாகி முதன்மைசேர் கின்ற வீரா
பத்திர சுவாமி நல்ல பரிவுடன் வாழு நாட்டில்
கத்திகை பறித்துச் சீதக்கமலத்தாள் ளொன்று தூக்கி
தத்திப் பாய்ந் தெழுந்து நொண்டி சபை தண்ணில் தோற்றினாரே.

தரு.

தானத்தேந் தானினதந்த தனதான -- தந்த
நானத்தம் தானின தந்த தன தான
.
1. செக்கரஞ் சடை மகுடம் பரித்திட்ட
செயவீர பத்திர சுவாமி வாழு நாட்டில்
உக்கிர முடனடித்தே காலிற் நண்டை
உலவச் சாலவ நொண்டி தோற்றினாரே. - தானத்தம்

2. ஆரியத் துரை மார்கள் துதி செய்யும்
அலவத்தை மாநகர் குலவுத்திரன்
பாரிபத்திரையுடன் வாழ் திருநாட்டில்
பார்த்திபர் புகழ் நொண்டி தோற்றினாரே - தானத்தம்

3. இந்திரசால முடன் மஜேந்ர சாலம்
இயற்றும் செப்படி வித்தை சாதக வித்தை
மந்திர செக கரணம் கோகர்ணம்
மதிக்கும் வித்தைகலெல்லாம் வல்ல நொண்டிதான்.

4. நெருப்பையும் குளிரச் செய்வோன் நீரையும்
நெருப்பிலும் மேலாகக் கொதிக்கச் செய்வேன்

உருப்பல பல கொள்ளுவேன் பூமியில்
உள்ள பொருளைக் களவாய்த் துள்ளியெருப்பேன்.-தானத்தம்

8. கும்மிக்காரர்

விருத்தம்

செப்பரு மலவத்தைப்பேர் திருநகர்க் கிருபை யாளன்
ஒப்பிலா வீரபத்திரன் உருத்திரன் வாழு நாட்டில்
மைப்பொரு மேனி தன்னை மாகாளிதனை மன்றாடி
கைப்பணி குலுங்கக் கும்மிக் கன்னிமார் வருகின்றாரே.

தரு

தன்னன்ன தன்னன்ன நானானே நன்னநான நானன்ன
நானானே நானன்ன நானன்ன நானானே நன்ன
நானன் நானந்னந் நானானே

1. ஆங்சன வேல் விழி காளியம்மன் அன்புள்ள வீரநீ வாழியென்ரே
பஞ்சவர்ணக்கிளி நேர் மொழியீர் கவி பாடிக்கும்மி யடியுமடி
நடமாடி கும்மி யடியுமடி - தன்னன்ன.

2. சித்திர மேனி வேரோடிடவே வண்ணச் சிற்றிடை மேகலை
யாடிடவே பத்திர கேள்வனைப் போற்றி செய்யுதே கவி
படித்துக் கும்மியடியுமடி நடன் நடித்துக் கும்மியடியுமடி - தன்ன

3. கஸ்தூரிப் பொட்டாளி தயங்கவே யிருகையும் ஒய்யாரமாய் விளங்கவே
பத்தினிப் பெண்கள் நீராடிப் பாடிப் பயந்து கும்மியடியுமடி
இன்ப நயந்து கும்மியடியுமடி

9. ஊஞ்சல்

விருத்தம்

வீரிய வான்களான வியன் கணத்தலைவர் போற்றுஞ்
சீரிய நன்மையாளன் செயவீர பத்திரன் நாட்டில்
காரிய வணங்கள் னார்கள் கனகனாபுரம் பண்பாட
பேரிய லூஞ்சலாடப் பெட்புடன் வருகின்றாரே.

தரு

தந்தனத்தோம் தானதனதந்த தானத்தோம் தானானே

1. வித்துருமத் தூண் நாட்டி விளங்கு தங்க வளைமுட்டி
முத்துவடக் கோணவயிட்டு முதிர் பசும் பொன் பலகை வைத்து
பத்திரனா யகன் வீர பத்திர கேள் வளையிருத்தி
துத்தியஞ் செய் ஊஞ்சலெண்ணும் தூயகவி பாடினாரே.

2. பொன்னை நிகர் கன்னியரே வீரப் புனிதன்றாள் போற்றி செய்தே
அன்ன ஊஞ்சல் சொல்லி நடந்தாடியூஞ்சல் பாடினரே

3. பூவுலகந் தேங்கிடவே புன்னகை யெல்லாம் நீங்கிடவே
மூவுலகுந் தேறிடவே முத்தினுஞ்சல் ஆடுவோமே

4. மாதமெல்லாம் மும்மாரி மழை பொழிய நெல் விளைய
பாதக நோய் பஞ்சமற பாடியூஞ்ச லாடுவமே.

10. குறத்தி

விருத்தம்

நிருத்தியமேரு வன்ன நெடுஞ்சிலை கரத்திற் றாங்கி
திறத்துடன் வீர பத்திர தேவன் வாழ்ந்திருக்கும்
முறத்தின் நெற்குறிகள் கூறிமுகின் முலைக் கருங்கட் செவ்வாய்
குறத்தியுஞ் சபையில் வந்து குறிப்புடன் தோற்றினாளே.

தரு

தென் தெந் தென தென தெந்தென தெனதெந் தெனதென
தென்னாதே னாதெனன்னோ தென்ன னேதெந் னானே

1. நீலிமலை பவளமலை நிமலர் மலை யம்மே
நெடிய வாடா கிரிமுதலாம் நிலை மலை யென் னம்மே

2. கோல மிகும் புலிநகம் நம் குலத்தாலிய அம்மே
குன்றுமணி வடம் பூட்டும் குறத்தியர் நம் அம்மே

3. விந்து மலை நாடதெங்கள் சொந்த மலை அம்மே
வெள்ளிமலை யீசர் நமக்குள்ள வம்மானம்மே

4. செந்திமலை வேலருஞ் சம்பந்தம் நமக்கம்மே
சிறுபசியாற் றிடுவீரென்டு குறக்கொடி வந்தாளே.

11. குறவள்

விருத்தம்

கடகரி வதனத் தின்ப கணபதி துணையாய் வந்த
தடநெடுஞ் சடையான் வீரத்தலைவன் வாழ்ந்திருக்கும் நாட்டில்
திடமிகு பறவை பன்றி சேர்வலை கயிரு தாங்கி
திடக மாமலை வாழ் செல்லக்குறவனும் தோற்றினாரே.

தரு

தனதன தனனத் தன தனதனனத் தனதனதனனத் தனதனனா
தனனா தனனாத் தனனா தனனத் தனானா தனனத் தனதனனா

குளுவனைக் கூட்டி வழிதனைக் காட்டி
குனித்து விற் பிடித்துத் தனிக்கணை தொடுத்து
செழு மலர்க் கூடும் வளைதடிச் சோடும்
செழு முடனாங்கே குறவன் வந்தானே.

2 ஆம் அச்சு

தரு

நன்னே நானா நானே நான நானே நானே நான நானே
1. பங்கயப் பெண் சிங்கியாசைப், பாரம் பண்ணித் தூரம் போனாள்
கொங்க நாட தெங்கும் தேடி, தேடி வந்த குறவன் நானே

2. மாலவற்கு மேலாம் வெற்றி, வாலை வீர பத்திரநாட்டில்
வேலவற்கு மால் கொடுத்த, மின்னால் குல மன்னனாவே

3. பட்சி யெய்து கெச்சிதங்கள், பழகும் வீக் குளுவான் கூட
கொச்சி மலை நாடுங்கண்டு, கூடி வந்த குறவனானே

4. இந்திர குமாரனை மலலொத், தெறிந்த பார்த்திபன் வேற்
கந்தருக்கு பெண் கொடுத்த, கானக்குறக் கோனுனானே.

12. குறவனும் குளுவனும் (தன்னாள்)

தரு

தெய், தெய், தெய், தக்க தொம்

1. அலந்தையிலிரை தேடி யலவத்தை தனிநாட்டில்
பறவைகள் வந்து பார் -- குறவரையே

2. சிரமத்தை விடுமப்பா பலன் மெத்த வருகுது
திருக்கண்ணி பெருக்கடா குளுவரண்ணே

3. வெருட்டி நீ முழக்காதை புரட்டி வீண் பழிக்காரை
வெடு வெடெண் றெண்ணாதை நீ குறவரையே

4. அருட்டேவ வயவீரன் பொருட்டாகக் கிடைக்கும் பார்
அடிக்கடி பதுங்கடா குளுவரனண்ணே

13. குறவனச்சு முறை

1. கண்ணி கொண்டுவாடா குளுவா கண்ணி கொண்டுவாடா
கண்ணுதல் வீரனார் பண்ணை வயலெங்கும் கதிர் கொய்யும்
பட்சிக் கெதிராயே குத்த (கண்ணி)

2. குத்தடா குளுவா கண்ணிதனை குத்தடா குளுவா
குத்தடா அலவத்தை தன்மாநகர் குற்றமில்லா வீர
பத்திரனார் பண்ணை பத்தெல்லாம் பட்சி சுற்றிக்
கொத்திக் கொத்திப் பறந்தும் விரைந்தும் செறிந்தும் வருகுது
(குத்தடா)

3. காடை கௌவுதாரி மாடப்புறா காளைப் பருவங்கள்
கூழைக் கடாக்களும் பேடை நினைத்திரை தேடி
யாடிப்பாடிப் பொட்புடனே நல்லிரைப்பாய் வருகுது
(குத்தடா)

4. குத்துகிறேன் வாயாற் கத்துறயையே கூட்டமாக
மேல் நாட்டினால் வந்த சித்திரப்புறா அன்னங் காடைகள்
சீக்கிரம் தம்பி மேற் செல்லா வண்ணம்
(குத்தடா)

5. வருகுதையெ பறவைகள் வருகுதையே -- வருகுதையே
பறவையினங்கள் வரந்தர வீரன்பு ரந்திடு நாட்டில்
குருகு செண்பகம் நரை காணாங்கோழி கூழைக் கடாக்களும்
தாழைப் பொற் கொக்கும். (வருகுதை)

6. மேயினமையே பறவைகள் மேயினமையே மேயினமையே
பறவையினமெங்கள் வீரவான் சுவாமி விய
நகரந்தன்னில் ஆயிரம் கோடி முகிலெல்லாம் கூடி
அலைகடல் நீரை பருகல் போலெங்கும்

7. சாயினமையே பறவைகள் சாயினமையே
சாயினமையே நாவாய் மயில் கோகுலம் சண்பகம்
செங்கட்புறா வன்னம் மாதிய நேயமுடன் வீரசுவாமி தன்
னாட்டில் நெருக்கி நருக்கி இரை கொள்ளும் பட்சிகள். (சாயின)

### 14. நாட்டு வளப்பம்

தரு

தெந்தினா தெந்த னாதெந்த னாதே னாதெனா தெந்த
நாதெந்தனானா தெனாதெனா தெந்த னாதெந்த
னானாதே னாதென தெந்த னாதெந்தனானே.

1. சீரனைத்தும் பொருந்திய நாடு சிவனை யர்ச்சிக்கும்
தேவிகனாடு வீரபத்திர சுவாமியை யென்று
வியந்து வாழும் நன் நாடெங்கள் நாடே
தெந்தெனா

2. கந்தசாமி வரந்தரு நாடவர் காவியத்தின் கதைகள் நாடு
விந்தைசேர் வீரபத்திரனாமம் வியந்து வாழும் நல்
நாடெங்கள் நாடே

3. கம்பயானை முகத்தவனாடு கவின் கரண்டை புறத்தவனாடு
நம்புமன்பர்க் கருள் செய் வயிரவ னாதருக்கிரநாதர்
செந்நாடே

### 15. பள்ளன் தோற்றம்

விருத்தம்

நிருத்தனாங் கடவுட்டின்ப நின்மல மூர்த்தி தந்த
நிருத்தரு வீரபத்திர தேவன் வாழ்ந்திருக்கும் நாட்டில்
வரத்தியும் சிரத்ததிற் றாங்கி மண்வெட்டி தோளில் வைத்து
பரித்த கள்ளேப்ப மிட்டுப் பள்ளனும் தோற்றினானே

தரு

தெந்தெனாதே னாதெனன்னே தென்னானோ
தென்னா தெந்தத் தென்னாதே னாதெனன்னே
தென்னானே தென்னா.

1, அச்சையிற் குதிரைகட்டி கெச்சிதங் கொண்டு துள்ளி
ஆர்ப்பரித்துத் துடைதட்டிக் காச்சினாய் கொண்டு

*பச்சை நிறக் கச்சசைத்து கச்சையும் கட்டி*
*வீரபத்திர சுவாமி பண்ணைவயல் பள்ளன் வந்தானே*

*2. மூத்த பள்ளி வார்த்தை தள்ளிக் கூத்தி இளைய பள்ளி*
*மோசத்தனத்தாலே பள்ளன் நேசித்துத் தள்ளி*
*பார்த்த நேர மெல்லாமவள் கீர்த்தியைந் பண்ணி வீர*
*பத்திர சுவாமி பண்ணே வயற் பள்ளன் வந்தானே*

*3. கள்ளுடன் சாராயவெறி கொள்ளுதடியே பள்ளி*
*கஞ்சி கொண்டு வாடி சற்றே கொஞ்ச நீவாடி*
*வள்ளல் வீரற் கெண்ணாதே காசள்ளிநேரடி என்று*
*வாய்ப் பிரசானம் பண்ணிப் பள்ளன் தோற்றினானே.*

16. *மழை இரங்கல்*
*விருத்தம்*

*மாரனங் கனையின் மூழ்கி மைந்தர்கள் மடந்தைமார்கள்*
*ஆகுமோர் முறைமுப்பச்ச மறமுறையதனை விட்டே*
*சோரமும் கோளும் பொய்யம் துணுவும் மற்றகைப் பொறுத்து*
*வீரபத்திரரைப் போற்றி மிகு மழை வேண்டிணோமே.*

*தரு.*

தெந் தெனனோ தென தெனோ தெந்த னாதெனனோ
தென்னானோ

1. *நெற்பயிரும் மற்றுமுள்ள நீணிலத்திற் பயிர்ளைல்லாம்*
*சற்றுமுடல் வாடாமல் தழைவுதினம் -- கோடாமல்*
*நற்றவரும் துதிசெய்கமில் நதியருகே மருதடி வாழ்*
*பொற்புமிகும் ஐங்கரனைப் போற்றி மழை வேண்டினோம்.*

*2. மாதர் கற்பு தேய்ந்தாலும் மறை முறைகளோய்ந்தாலும்*
*பூதலத்தில் வற முறைகள் புண்ணியங்கள் சாய்ந்தாலும்*
*ஒதுமல வத்தை யுறைஉக்கிரனே உளமிரங்கி நீதிமுறை*
*நீதிமுறைமழை பொழிய நித்தமருள் புரிவாயே.*

*3. ஆலயங்கள் வளங்குவதும் அருந்தவங்கள் வழங்குவதும்*
*சாலைமகம் தழைவதவும் தர்மமெங்கும் விளைவதவும்*
*நீலமுகிற் காரணத்தால் நிமரவடி வேல்முருகா*
*சாலமழை வேணுமையா சண்முகனே தந்தருள்வாய்.*

17. குயில் கூவல்.

விருத்தம்

பூதலத்தோர் பொற்று மெழிற் புங்கவனாம் துங்கமுடன்
நீதிலவத்தை யெனும் திருநகரில் வீற்றிருக்கும்
ஆதிமுதல் வீர பத்திரனடியினைகள் போற்றி செய்தே
கோதில் மனு வாழ்க வென்றே குயில் கூவத் தொடங்கினவே.

தரு

திந்திமிக்கத் திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதா
திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதா

1. வேதமுத மானவமுன் விமலனருளாவோர் மன்றில்
மெய்க் களிறுடன் பிடியுமாகிக் - சேர்
போதக முகத்தினொடு தித்த ஐங்கர முதல்வர்
பூதலத்தில் வாழ்க வென்று கூவுவாய் - குயிலே.

2. தக்கனது வேள்வியை யழித்திட நிந்துபர
சக்தியுமை தான் மொழிந்ததாலே - சிவன்
உக்கிர மூடேயுதவ வருவீர பத்திரனிந்த
உலகில் நித்தம் வாழ்கவென்று கூவுவாய் குயிலே

3. ஆறு பொறியாயுதித்தோர் வாவிதனில் ஆறு குழந்தை யாகி
விளையாட வுமையங்கே -- வந்து
வீறுடடுநெக்க முகமாறுகை பன்னிரண்டுங் கொண்ட
வேலவரும் வாழ்கவென்று கூவாய் குயிலே.

18 .மழைபெய்தல்

தரு

தன தன தனனத் தனதன தனதனத் தனதன தனனத் தன தனனா
தனனா தனனத் தனனா தனனத் தனனா தனனத் தன தனனா

1. கருமுகில் பரவிக் களைகடல் பெருகிக் கனரிசி விசிறிக் கவின் கொழ
கடவுளர் வெருவிக் சடசட சடெனக்கறங்கியேனுகள் முழங்கியே
அருள்தரு செயபத் திருநகர் முதல் தொட்டளவையில் கம்பிற் குள முதலாம்
அலங்கல் நீர் வயல் நிரம்பவே புடை அதிர்ந்து மாமழை பொழிந்ததே.

2. செவிமிசை வளர்பற் பலபயிர் வகைநார் புலனகின் மதியிற் குறைத்ததால்
புகவென வரசர்க் குணமனுடர்களப் பொழுது விண்ண ரசைத் துதிக்கவே
செவிமிசை இவர் சொற்புகமக பதியத் தினமுளமது சுற்றிரங்கியே
செறிமுகில் களையிக் கணமழை புவனித்திசை பொழி அத்திரங்கோளா

19. பள்ளப்பாய்ச்சல்

தரு

தென தெந் தெனனத் தெனதெந் தெனனத் தெனதெந் தெனனத்
தென தென்னா தென்னா தெனனத் தென்னா தெனனத் தென்னா
தெனனத் தென்னானோ.

1. தேசுற்றவர்ந்த வாசக்கமலச் செடியைப்பிடுங்கிக் கடுகுலாஞ்
சிலை புரட்டி மலையையு குட்டித் திரை யெறிந்திரு கரையெல்லாம்
வீசிக் குமட்டிக் கோலக் கரும்பின் வெருடன் பறித்தாசினி
வீட்டிற்கு சந்தகிற் கூட்டமானதை வேந்து வெள்ள நீர் பாய்ந்ததே.

2. பாலை காலை நெத்தலி கத்தலை பருத்துக் கறவு பெருத்த சேல்
பாங்ந்து துள்ளியே கூந்தங் கமுகின் படப்பையும் தள்ளிக் கடக்கவே
வேலை ஞால மேலும் பரவி வரைந்து யிரைந்துந் தரங்கமே
வீசிப் புட்குலம் கூவிப்பறக்க வெருட்டி வெள்ள நீர் பாய்ந்ததே.

20. நாற்றுநடல்

விருத்தம்

சுள்ளினைக் கடித்து கொண்டு தூமையில்லாத வாசக்
கள்ளினைக் குடித்துச் சித்தம் கலங்கியே தெளிந்த பின்பு
அன்னலம் பழனந்தனில் அணி நாற்றை நடத் தொடங்கி
பண்ணிகள் சபையில் வந்து பரிவுடன் தோற்றினாரே.

தரு

தெனதெந் தெனனத் தெனதெந்தெனனத்
தெனதெந் தெனனத் தெனதென்னா
தென்னா தெனனத் தென்னா தெனனத்
தென்னா தெனனத் தென்னானே.

1. வண்ணக் கறுப்பி மாதி பூதி வாக்குகுக் கண்ணிநற் காக்கைச்சி
வாரி சூரி மயிலி குயிலி வளத்தியும் வந்து வயலிலே
பொன்னெனத் திலங்கு செந்நெற் பயிரை பொலிய நெருங்கி மருங்கலாம்
பொருவில் நாற்றை தெரிந்து நடுற புதினம் பாரும் பள்ளீரே.

(தென)

2. வளைத்தங் கலவன் கிளைத்து துளைத்து வரம்பு நீரெல்லாம் ததும்பவே
வாழை குத்து தாழை மடற்குள் வதிந்து சயனம் பொருந்தவே
குளித்து நெளித்து குளத்திற் சேர்த்துக் குரவைக் கூத்து பரதமா
கூடியாடிப் பாடி நாற்று குனிந்து நடுவோம் பள்ளீரே.

21. அருவி வெட்டல்

விருத்தம்.

சகமெலாஞ் சிறக்க வோங்கித் தழைவுடன் வளர்ந்து சாலி
மிகுதி நீர் நின்று முற்றி விளைந்த பக்குவத்தைக் கண்டே
அகமகிழ் வெய்தித் தெய்வம் பரவியங்குங்கே கூடிப்
பகுதியாய் அருவி வெட்டம் பள்ளர்கள் தொடங்கினாரே.

தரு

தந்தன தந்தன தான தன தான தந்தன தான
தன தன தந்தன தான தந்தன தானதந்தன தானின

1. பொன்னகர் மன்னனைப் போற்றி பொங்கள் பூரித்து நன்மடை யாற்றி
பொன்னருவாள் கையிலெடுத்தே செற்நெல் கொய்திடுவீர் பள்ளனாரே

2. வாத்திய மேளங்கள் அடித்துச் - செந்நெல்
வாரியிட்டு கையால் பிடித்து தாழ்ச்சியில்லாமலே அருவி - வெட்டும்
வெட்டிப் போர் கட்டும் பள்ளரே.

22. கப்பல் பாட்டு

ஏலயெலோ தத்தெய்யதாம் ஏலயெலோ
தென்னிலங்கை மகராசன் அபுராம் செப்பிய சொல் தவறாமல் ஏலயெலோ.

துன்னியே பிடித்துவர சிப்பாயிமாரை
துரிதமுடனே கப்பல் ஏறியே செல்ல
மன்னு அப்துல் காரன் நங்கூரம் இழடா
மஸ்தானும் சுனுத்தானும் திருப்புங்கள் கப்பலை
பின்னணியில் அசன் உசனும் மகமதுவும் இரடா
பெருமையுறு மல்தகனி கோசிலே வாடா
சொன்னபடி வைசரிப் பாய்தன்னைத் தூக்கு
சுழவாக வாய்ப்புக்கனி சாயவிட்டோட்டா
உன்னையே யல்லாமல் போற்றித் துதித்து
உந்திதனிலே கப்பல் ஓட விடுவோமே

(ஏலயெலோ)

நீர் கொழும்பு தெரியுதடா
தென்றல் நேராக வீசுதடா
சீரான புத்தளத்தை சேரத்திருப்பி விடு சுக்கிரனை

(ஏலயெலோ)

பேரானை கற்பிட்டி குதிரை மலை முனையும்
பெருமையுடடீன கப்பல் கிட்டித் திருப்பி
ஏலஞ் சிலாபமும் மன்னாருங் கண்டு
எழில் மேவும் பாம்பன் வாய்க்காலிலே அண்டி
கூர்மையுடனே கச்சா தீவிதே தோணுகுது
கொடிய கடல் தானுமீது நெடுந்தீவு தாண்டி

(ஏலயெலோ)

## 23. சோபனம்

1. சோபனம் சொல்லுங்கடி - பாங்கிமாரே
தோத்திரஞ் செய்யுங்கடி.
2. பாவம் பழி மாற உலகெங்கும்
பாக்கியம் மீதேற
தேவன் கணபதியாம் - கடவுளைச்
சிந்தித் திறைஞ்சுவமே.
3. ஈசனைப் பார்வதியைச் - செவ்வேளை
இறைஞ்சித் துதிகள் செய்தே
காசினியுள் ளோர்கள் - சுகம்பெறக்
கைகொட்டியாடுவோமே.
4. மாவீர பத்திரனைத் துதித்தே
வயிரவனைத் துதித்தே
காவலன் ஐயனையும் - பணிந்து
தாம் காதலோடாடுவமே.

## ஒயிலாட்டம்.

ஜெய ஜெய கணபதி ஓம்- ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம்
செந்தமிழ் திலகன் வந்துதிக்கின்ற
திருவருள் கொடு பதியே
மூல மந்திர பதியே முறை
உரைத்திடும் கணபதியே
முக்கணன் பல மூர்த்திகள் தொழ
முதல் முதலானவனே
ஆந்தரி பாலகனே அருள்

தந்திடுவாய் சுதனே
ஆகுவாகம் மீதிலேறியே
அருளவன் தருள் குகனே.

தன்னன்னான தினம் தன்னன்னானே - தினம்
தன்னன்னான தினம் தன்னன்னானே - தினம்

1. ஒய்யாரமான இளமைட்டங்கள் - ஒரு
ஓய்யினில் சொல்லுதேன் நேரே நில்லு
நேரே நில்லு நெளியாமல் நில்லு - நீங்கள்
ஆளுக்கொரு முளம் தள்ளி நில்லு.

காலோடு காலும் உரசாமலே - உங்கள்
கைபிடி லேஞ்சி தவறாமலே
மேலோடு மேலும் உரசாமலே - உங்கள்
வேருவை தண்ணீர் சிதறாமலே

(ஓய்யா)

2. சக்திக்கு முதல் மகனாம் அத்திமுகவன்
வித்தகனைன் கை தொழுதோம் இத்தருணமே
இத்தருணம் ஏறி நீரும் ஆட்டம் எடுப்பீர்
நல்ல இடது காலில் கொச்சை கட்டி ஜெயம் பெறுவீர்
வந்து வந்து பார்த்த சனம் மகிழ்ந்திடவே
வலது காலில் கொச்சை கட்டி ஜெயம் ஜெயம் பெறுவீர்

(சக்தி)

இருந்திருந்து பார்த்த சனம் மகிழ்ந்திடவே
இடது காலில் கொச்சை கட்டி ஜெயம் ஜெயம் பெறுவீர்.

(சக்தி)

3. அண்டங்கலங்கியவர் துண்டு துண்டாதனாலும்
அண்ணா நீ கலங்கவேண்டாம் - என்சாமி
அண்ணா நீ கலங்கவேண்டம்.

வண்டர் அரக்கர்களை கண்டனம் செய்வோமாளால்
காலங்காதீர் வந்தனம் - என்சாமி
வருந்தாதீர் வந்தனம்

4. அண்ணா அண்ணா எந்தன் அண்ணா அண்ணா
அருமைத் தங்கை யொரு செய்தி சொல்வேன்

பஞ்ச வடி தீர்த்த மதில் - அண்ணா
பாவிரண்டு மானிடர்கள்
ராமராம் லக் ஷ்மணராம் - அண்ணா
ராமன் தேவி ஜானகியாம்

சீதை தனை தூக்கிச் செல்ல - அண்ணா
சீக்கிரமாய் வெல்வாய் அண்ணா (அண்ணா)

5. மாரீசன் மானாகினாய் சீதைக்கு முன்
வனத்தில் குதித் தோடினாய்
மானது முன்னோட மலராமர் பின்னோட
தானாக அம்பெடுத்து தனிய விரட்டிச்சென்றார்
(மாரீசன்)

படர்ந்த முள்ளு செடிகள் வெட்டினார்
பரசுராமர் பர்ணசாலை உண்டு பண்ணினார்
மானது முன்னோட பலராமர் பின்னோட
தானாக அம்பெடுத்து தனியே விரட்டிச் சென்றார். (மாரீசன்)

6. இதுவரை வாராதிருந்த தென்ன - நீ
என்னிடம் சொல்லுவாய் சுக்கிரீவனே
மது வெறியாலே மயங்கிவிட்டேன் நான்
மாயோன் அதனால் தயங்கி கிட்டேன்
சொன்ன சத்தியம் தனை மறந்தாயோ
என்ன நினைவோடு தானிருந்தாய்

மன்னவன் போற்றும் பரந்தாமா - என்னை
பாது காக்க வேணும் ரகுராமா
கார்காலம் சென்ற பின் வருவேன் என்றாய் - நீ
கண்டிப்பாய் என்னிடம் உண்மை சொல்வாய்
ஓடோடி வந்தேனே உத்தமனே - நான்
உள்ளங் குளிரவே இரத்தினமே.
(இதுவரை)

7. என்ன செய்வோம் ஏது செய்வோம்
எந்தன் தம்பி லக்ஸ்மனனே
நாடு இழந்தோம் நகரிழந்தோம்
நாயகியைத் தானிழந்தோம்
மண்ணிழந்தோம் மரந்திழந்தோம்
மங்கயரை தானிழந்தோம்

பொன்னிழந்தோம் பொருள் இழந்தோம்
பூவையரை தானிழந்தோம் (என்ன)

8. உத்தமனே தம்பி லக்ஸ்மனாமனம்
ஒப்பியில் நானும் இருப்பேனோ
பத்தினி ஜானகி சென்ற இடம்தன்னை
பார்த்து வருவேன் என் சுக்கிரீவனுக்காக
(உத்தமனே)

வாலியைக் கொன்றதோர் ஆண்பிள்ளை காண்
எந்தன் மனதை தேட மனமில்லையா
சீல அரக்கர் தன் காலம் கழிந்து முன்
சீக்கிரம் வருவேன் என் சுக்கிரீவனைக் காண. (உத்தமனே)

9. பண்டாரம் பரதேசி எங்கேயிருப்பார் - அவர்
குண்டு மலை ஓரத்திலே குடியிருப்பர்
ஏரைச் சற்றே பிடித்துழவாரம் - அவர்
ஏங்கித் தள்ளாடிக் கிழே விழுந்தாராம்
நாற்று முடியைக் கையில் எடுப்பாராம் - அவர்
நுடத் தெரியாமல் நின்று முளித்தாராம். (பண்டாரம்)

10. வானரே வீரரே வாருங்கள்
வந்து விட்டோம் வெகு தூரமே
கானகம் ஆனதினாலே வெகு தூரம்
கண்டு கொண்டோம் இந்தன் நேரமே
உச்சி மரங்களில் ஏறுவோம்
ஒன்றன் மேல் இரண்டாகத் தாவுவோம்
அச்ச மில்லாமலே லட்சணத்தோடு
ஐயம் பதத்தைக் கொண்டாடுவோம்
ராமா ராமா வென்று கூறுவோம்
இலங்கையில் சீதாவை தேடுவோம்.

11. செல்லுவோம் வீரர்களே - நாம்
தென்னிலங்காபுரி தனனை நாடு

மலைகள் குகை கடந்தோம் நாம்
மாதாவைக் காணாமல் மயங்கி நின்றோம் (செல்லு)

பாலை வனம் கடந்தோம் - நாம்
மாதாவைக் காணாமல் தயங்கி நின்றோம். (செல்லு)

12. அந்தமுள்ள கணையாழியை
ஆஞ்ச நேயர் கையில் வாங்கும்
செந்தமுள்ள சீதையிடமே
சொல்லிடுவாய் எந்தன் குணமே (அந்த)

13. காண்டாமிருகம் பொலே ஏனரா நீ துள்ளுகிறாய்
தீண்டா நெருப்பையடா ராட்சதப்பதரே - சீதா
தேவியை சிறை யெடுத்தாய் இராவணப்பதரே (காண்டா)

அரக்கர் தெருக்களெல்லாம் அடியோடு போகும் என்று
பறக்கவே நெருப்பை விட்டான் ராட்சதப்பதரே இப்போ
வெந்து அழியுதடா ராவணப்பதரே. (காண்டா)

மண்ணா தெருக்களெல்லாம் மண்ணோடு போகுமென்று
திண்ணமாய் நினைத்துக் கொள்வாய் இராட்சதப்பதரே - சீதா
தேவியை சிறை எடுத்தாய் இராவணப்பதரே. (காண்டா)
14. ஆதியே பரஞ்சோதியே தேடினேன் பதம் பாடினேன்
ஆதிபராபரனே சீதை மனோகரனே
ஆனந்தனே அரி ராம் ராம் ராம். (ஆதி)

ஸ்ரீகரி மனோகரனே செவ்வடிகள் ஒரானே
ஸ்ரீராமச் சந்திரனே ராம் ராம் ராம் (ஆதி)

வாலியைச் சம்மாரம் செய்த வள்ளலை சுரரை வென்ற
ஆலிலை மேல் பள்ளி கொண்டாய் ராம் ராம் ராம்.

15. இந்தக் கடலைத் தாண்ட எந்தனிக்கே
ஒரு மலையா வெகு தொலையா
நாடெங்கும் சுற்றியே நான் வந்தேனே இங்கு
நளினமகதாகவே அரிராமன் பெயர் சொல்லி. (இந்த)

16. தேடியும் காணோமே என் சீதா
தேவியை இனி நானே இளையோனே
வாடியே நோந்தோமே - என்தம்பி
மயங்கிடலானோமே இளையோனே

*அன்ன நடையுடையாள் என் சீதா*
*அழகுள்ள மாமயிளாள் நற்கோதை*
*மின்னல் இடையுடையாள் என் சீதா*
*மேனியை காண்பதெப்போ நற்கோதை.*

17. *ஆடின ஆட்டம் வருவதற்கு*
*எங்கள் ஆண்டவர்க்கு ஓர் சரணம் செய்வோமடி*
*பாடின பாட்டு வருவதற்கு எங்கள்*
*பார்வதிக்கு ஓர் சரணம் செய்வோமே.*

*குறிப்பு.*
*இங்கு இடம்பெற்ற வசந்தன் நாடகமும், ஓயிலாட்டமும் வல்லிபுரம் குருசாமி அவர்களின் இறைபதம் எய்தியமை குறித்த நினைவு மலரிலிருந்து* (27.12.2004) *பெறப்பெற்றது.*

**உசாத்துணை சாதனங்கள்**


1. தேசிகம் - இலக்கணவித்தகர் இ.நமசிவாய தேசிகர் சதாபிஷேகார்ப்பண மலர். 19.03.2000.
2. வித்தகர் தரிசனம், பாலர் ஞானோதய சபை வெளியீடு,19.03.2000.
3. வித்தகதீபம் - இலக்கணவித்தகர் மகா வித்துவான் இராமசாமி நமசிவாய தேசிகருக்கு அஞ்சலி 26.09.2000.
4. என் அப்பாவின் கதை - நா. சண்முகலிங்கன் 30.மார்ச் 1988.
5. ஈழத்து இடப்பெயர் ஆய்வு,(யாழ்ப்பாண மாவட்டம்) கலாநிதி இ.பாலசுந்தரம் ரொறன்ரோ, கனடா 2002
6. ஏழாலை - நா முத்தையா ஆத்மஜோதி பிரசுரம் நாவலப்பிட்டி 1977.
7. எங்களூர் ஏழாலைவூர் - தி.க.முத்துசாமி 25 ஆவணி 1994.
8. ஈழம் தந்த கேசரி - கனக செந்திநாதன் 20.08.1968.
9. மல்லாகத்தின் அபிவிருத்தி - தொகுத்தவர் கோகிலா மகேந்திரன் வெளியீடு, கிராம அபிவிருத்திச் சங்கம் 13.03 2001
10. எமது ஊர் வரலாறு. பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் 02.05.1998.
11. கொலுவீற்றுந்த குரும்பைநகர்.குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன், வெளியீடு, குரும்பசிட்டி நலன்புரி சபை, ரொரன்ரோ, கனடா. 2008.
12. வறுத்தலைவிளான். கனடா வாழ். வறுத்தலைவிளான் மக்கள் வெளியீடு.
13. தாய் வீடு, மாதாந்த பத்திரிகை, கனடா, நவம்பர் 2009.
14. நாகராஜஜோதி, அநு.வை.நாகராஜன் நினைவு வெளியீடு,02.09.2012.
15. விளம்பரம், இருவாரங்களுக் கொருமுறை வெளிவரும் பத்திரிகை. கனடா.
16. செந்தாமரை, வாராந்தப் பத்திரிகை, கனடா 19.04, 03.05.2019
17. வல்லிபுரம் குருசாமி அவர்களின் இறைபதம் எய்தியமை குறித்த நினைவுமலர்
18. வலிகாமம் வடக்கு பிரதேச மலர் ஆசிரியர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலக வெளியீடு. மார்கழி 2000.
19. இதயரஞ்சனி: சமூக பண்பாட்டுக் கோலங்கள். 1988.
20. நீ சாகமாட்டாய் ராதா டாக்டர் எஸ்.தியாகராஜா
21. மயிலிட்டி தெற்கு ஞானோதயவித்தியாசாலைப் பொன்விழா மலர் 1927-1977.
22. பாலர் ஞானோதய சங்க வெள்ளிவிழா மலர் 1948.
23. காங்கேசன் கல்விமலர் 1985
24. வசந்தன் ஆய்வுக் கட்டுரை. கௌசலா சிதம்பரநாதன் 1993
25. பாலர் ஞானோதய கலை, உடல் வளர்ச்சிக் கழக வெள்ளிவிழா மலர். 14-04-1975
26. இலங்கைச் சரித்திரம் மூ.இளையதம்பி 1959.
27. அண்ணா பொன் ஏடு. அண்ணா தொழிலக பொன்விழா வெளியீடு 23-04-2009.(1959-2009)



## ஆசிரியர் பற்றி...

இந் நூலாசிரியரான திரு வே .விவேகானந்தன் கட்டுவனூர் சைவமடத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

அங்கு வாழ்ந்து வந்த வேலாயுதர் அன்னம்மா இணையரின் மகனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மாத்தளை இந்து மகா வித்தியாலயத்திலும் (குந்தசாமி வித்தியாசாலை) உயர் கல்வியை மாத்தளை சென்தோமஸ் கல்லூரியிலும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், புவியியல் சிறப்புப் பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார். நூலகத் துறையிலே ஆர்வம் கொண்ட இவர், இலங்கை நூலகச் சங்கம் நடாத்தி வந்த நூலகவியல் கல்வியைக் கற்று, மயிலிட்டி கிராமாட்சி மன்றம் 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பொது நூலகத்தை ஆரம்பித்த போது, அதன் முதலாவது நூலகராகத் தனது பணியை ஆரம்பித்தார். 1981 ஆம் ஆண்டு, இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், கொழும்பு தலைமைக் காரியாலய நூலகத்தில் நூலகப் பொறுப்பாளராகவும், பின்னர் அதே நிறுவனத்தில் இளைஞர் சேவை உத்தியோகத்தராகவும் திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பணியாற்றினார். கனடாவுக்குப் புலம் பெயர்ந்த பின்னர் Royal Bank of Canada,Symcor services Inc.Canada ஆகிய நிதி நிறுவனங்களில் பணியாற்றி, தற்போது ஓய்வு நிலையில் உள்ளார். இலங்கையில் வாழ்ந்த போது, வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், கனடாவில் உதயன், தமிழர் செந்தாமரை, தாய் வீடு போன்ற பத்திரிகைகளிலும் அரசியல் சமூக பொருளாதார விடயங்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதி வருகிறார். இவர், கனடாவில் நீண்ட காலமாக ( 1991 ) வெளிவரும் தமிழர் தகவல் சஞ்சிகையின் முன்னாள் உதவி ஆசிரியரும் தற்போதைய வெளியீட்டுக் குழுவின் உறுப்பினருமாவார்.